# மன்னாதி மன்னர்கள்

தமிழ் மன்னர்கள், இந்திய மன்னர்கள்
மற்றும் ராணிகளைப் பற்றிய
சுவையான தகவல்களே இந்நூல்

ஓவியர் பத்மவாசன்
கோட்டோவியங்களுடன்!



## இ.எஸ்.லலிதாமதி

# மன்னாதி மன்னர்கள்

## Mannaathi Mannargal

இ.எஸ்.லலிதாமதி

https://t.me/Knox_e_Library

பதிப்புரிமை © **2020 E.S.Lalithamathi**

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

இந்தப் புத்தகத்தின் எந்தப் பகுதியையும் வெளியீட்டாளரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி மறுஉருவாக்கம் செய்யவோ, அல்லது மீட்டெடுக்கும் முறைமையில் சேமிக்கவோ அல்லது வேறு ஏதேனும் வடிவம் அல்லது வகையில் மின்னணு, இயந்திரம், புகைப்பட நகலிடல், பதிவு செய்தல் மூலமாகவோ அல்லது வேறுவிதமாக அனுப்பவோக்கூடாது.

ஓவியங்கள் : பத்மவாசன்

# உள்ளடக்கங்கள்


தலைப்புப் பக்கம்

பதிப்புரிமை

1. கூன்பாண்டியன் (சீர்நெடுமாறன்)

2. அதிவீர ராம பாண்டியன்

3. முதலாம் சடையவர்மன்

4. வையாவி கோப்பெரும் பேகன்

5. ஆதித்த கரிகாலன்

6. முதலாம் குலோத்துங்க சோழன்

7. இரண்டாம் குலோத்துங்கன்

8. மூன்றாம் குலோத்துங்கன்

9. பதிற்றுப் பத்து மன்னர்கள்

10. இராஜேந்திரசோழன்

11. இராஜாதி ராஜ சோழன்

12. கோப்பெருஞ்சோழன்

13. கணைக்கால் இரும்பொறை

14. திருமுடிக்காரி

15. பாரி வள்ளல்

16. அதியமான் நெடுமான் அஞ்சி

17. ஒல்லையூர் பூதப்பாண்டியன்

18. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

19. திருமலை நாயக்கர்

20. கிழவன் சேதுபதி
21. விஜயரங்க சொக்கநாதன்
22. மீனாட்சி அரசி
23. ராணி துர்காவதி
24. சித்தூர் ராணி பத்மினி
25. ராணி சென்னம்மா
26. சத்திரபதி சிவாஜி
27. கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி
28. கிருஷ்ண தேவராயர்
29. அசோகர்
30. முதலாம் ஏகோஜி (வெங்கோஜி)
31. மன்னர் பாஸ்கர சேதுபதி
32. இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர்
33. விஜயராகவ நாயக்கர்
34. திப்பு சுல்தான்
35. அக்பர்
36. ஷாஜகான்
37. ஔரங்கசீப்
38. மருது பாண்டியர்கள்

Knox e_Library

Click Here
Join Now

# 1. கூன்பாண்டியன் (சீர்நெடுமாறன்)

கி.பி. 640 முதல் 670 வரை மதுரையை ஆண்ட மன்னன். செழியன் சேந்தனின் மகன். சுந்தர பாண்டியன் என்றும் அழைக்கப்படுகிறான். முதுகு வளைந்து காணப்பட்டதால் கூன்பாண்டியன் என்ற காரணப் பெயரும் உண்டு. அரிகேசரி மாறவர்மன் என்றும் அழைக்கப்படுகிறான்.

சோழ அரசர் மணிமுடிச்சோழனை போரில் வென்று அவரது மகள் மங்கையர்க்கரசியை திருமணம் செய்து கொண்டான். சீன பயணி யுவான்சுவாங் இவன் காலத்தில் பாண்டிய நாட்டிற்கு வருகை புரிந்தார்.`உப்பும் முத்தும் அதிகம் கிடைக்கும் வெப்பம் மிகுந்த நாடு. இங்குள்ள மக்கள் கறுத்த மேனியுடையவர்கள். வாணிபத்தில் வளம் நிறைந்தது மதுரை...' என யுவாங் சுவாங் தனது பயணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.



கூன் பாண்டியன் சமணசமயத்தை சேர்ந்தவனாக இருந்தான். இதனால் அம்மதத்தை சேர்ந்தவர்கள் நாடுமுழுவதும் சமணத்தை பரப்பும் வேலைகளில் ஈடுபட்டனர்.

ஆனால் அரசனின் மனைவியான மங்கையர்க்கரசியும் அமைச்சர் குலச்சிறையார் என்பவரும் சிவ பக்தர்கள். அதனால் பழையபடி பாண்டிய நாடு சைவ நெறிக்குத் திரும்ப மிகுந்த ஆவல் கொண்டிருந்தனர்.

இச்சமயத்தில் சீர்காழியில் சிவபாத இருதயர், பகவதி ஆகியோருக்குப் பிறந்த திருஞான சம்பந்தர், மூன்றே வயதில் ஊர்தோறும் சென்று சிவனின் திருப்பதிகங்கள் பாடி வருவதை அறிந்திருந்தார் அரசியார். திருமறைக்காட்டில்(வேதாரண்யம்) திருஞானசம்பந்தர் வந்து தங்கி இருப்பதை அறிந்த மங்கையர்க்கரசி, அமைச்சர் குலச்சியாரை தூதாக அனுப்பினார்.

`பாண்டிய நாடு சமணர்கள் செயல்களால் பொலிவிழந்துவிட்டது மன்னரும் அவர்களின் மாய வலையில் வீழ்ந்து விட்டார். பழையபடி நாடு சைவ நெறியில் தழைக்க வேண்டும் அதற்கு நீங்கள் மதுரைக்கு வரவேண்டும்' என்று வேண்டுகோள் விடுக்க, திருஞான சம்பந்தரும் மதுரைக்குச் சென்றார் சென்றார்.

அமைச்சரும், அரசியாரும் ஞானசம்பந்தரை கோயிலில் சென்று வரவேற்றனர்.

சம்பந்தரின் வருகையை அறிந்த சமணர்கள் மன்னரை சந்தித்தனர். அவர்கள் ஞானசம்பந்தரின் வருகையை மன்னிடம் தெரிவித்தனர். அதற்கு மன்னன் சம்பந்தர் தங்கியிருக்கும் கோயிலுக்கு தீ வைத்து விட்டால் அவர் அங்கிருந்து சென்று விடுவார் என்று கூறினார்.

அதன்படியே சமணர்கள் சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்கு மந்திரத்தின் மூலம் தீ வைத்தனர். ஆனால் சம்பந்தரிடம் மந்திரம் பலிக்கவில்லை.இதனால் ஆத்திரமுற்ற சமணர்கள் உண்மையிலேயே தீ வைத்தனர். சிவனடியார்கள் பதறி சம்பந்தரிடம் முறையிட்டனர்.

உடனே சம்பந்தர் இச்செயலை யார் செய்தாலும் அதற்கு நாட்டை ஆட்சி செய்யும் மன்னனே பொறுப்பு என்று கூறி பதிகம் பாடினார். ‘தீ சுடுவது போல் மன்னன் உடல் சுட வேண்டும். ஆனால் சாகக்கூடாது’ என்ற பொருளில் பாட… அரசனுக்கு கடும் காய்ச்சல்(வெப்புநோய்) ஏற்பட்டது. யார் அருகே சென்றாலும் வெப்பம் அனைவர் மீதும் வீசியது. வாழை இலையைக் கொண்டு சென்றாலும் காய்ந்து போனது.

மருந்து பல உண்டும் வெப்பு நோய் தீரவில்லை.

சமணர்கள் மந்திரம் மூலம் நோயை தீர்க்க முன் வந்தனர். மயிலிறகால் மன்னன் உடல் மீது மருந்து தடவ, அது கருகியது. மந்திர நீர் தெளித்தால் நெய் போல் வெப்பம் மிகுதியானது.

இதைக் கண்ட அரசியார்`சமணர்கள் செய்த தீ வைப்புதான் மன்னரின் உடல் வெப்பத்துக்கு காரணமாக இருக்கும். திருஞானசம்பந்தர் உங்களைக் கண்டால் நோய் தீரும்..'என்ற மன்னனிடம் கூறினாள். அதுகேட்ட அரசன்`என் நோயை யார் தீர்க்கிறார்களோ அவர்கள் பக்கம் நான்..' என்றான் வேதனையில். திருஞானசம்பந்தரை அரண்மனைக்கு அழைத்து வர சொன்னான் அரசன்.

அரசனின் அருகிலிருந்த சமணர்கள் `நீங்களே சடணத்தை கைவிட்டால் வேறு யார் காப்பாற்றுவார்கள்? அவரால் நோய் தீர்ந்தாலும் எங்களால்தான் தீர்ந்ததாகச் சொல்ல வேண்டும்...'என்று வேண்டினர்.

`மன்னனோ இருவருமே நோயை குணப்படுத்துங்கள். ஆனால் நான் பொய் சொல்ல மாட்டேன்...' என்றான்.

திருஞானசம்பந்தர் அரண்மனைக்கு வந்ததும் அவரை சமணர்கள் வாதத்துக்கு அழைத்தனர். அதற்கு அரசியார் முதலில் நோயை குணப்படுத்துங்கள். பிறகு வாதத்தை வைத்துக்கொள்ளலாம் என்றார்.

மன்னனும் `தனியாக வாதம் எதற்கு? யார் என்னுடைய நோயைத் தீர்க்கிறார்களோ அவர்களே... வென்றவர் ஆவர்...' என்றான்.

சமணர்கள்`நாங்கள் இடப்பக்கத்தில் உள்ள வெப்பு நோயைத் தீர்க்கிறோம்... ' என்று கூறி மயிலிறகால் மருந்தை தடவி மந்திரம்சொல்ல ஆரம்பித்தனர். மந்திரம் சொல்ல சொல்ல நோய் அதிகமாகியது.

அரசன் ஞானசம்பந்தரைப் பார்க்க அவர் `மந்திரமாவது திருநீறு' என்ற பதிகத்தைப் பாடி அரசனின் உடம்பில் வலப்பக்கம் திருநீறு பூசி விட, நோய் தீர்ந்து வெப்பம் தணியத் தொடங்கியது. ஆனால் இடப்பக்கம் இருமடங்கானது.

சமணர்களை மன்னன் வசைப்பாடியதோடு, ஞானசம்பந்தரை இன்னொரு பக்கமும் நோய் தீர்க்க வேண்டினான். மறு பக்கமும் ஞானசம்பந்தர் திருநீறு பூச, நோய் முற்றிலும் அகன்று குணமடைந்தான் மன்னன்.

சமணர்கள் அப்போதும் தோல்வியை ஒப்புக்கொள்ள மறுத்தனர். அவரவர் சமய உண்மைகளை எழுதி நெருப்பில் போட்டு யாருடையது வேகாமல் இருக்கிறதோ.. அவரே வென்றவர் ஆவார்... என்றனர்.

ஞானசம்பந்தரும் அதற்கு ஒப்புக்கொண்டார். தோற்பவர் கழுவில் ஏறி உயிர்விட வேண்டும் என்றான் மன்னன்.

அரசன் விறகு கொணர்ந்து தீ மூட்டச் செய்தான். `இறைவனுடைய நாமத்தை எரியில் இட்டால் பழுதின்றி நிற்கும்இது சத்தியம்..' என்ற கருத்துடைய பாடலை எழுதி தீயில் இடவும் அது எரியாமல் அப்படியே நின்றது. சமணர்கள் ஏடு எரிந்தது.

இரண்டு முறை தோற்றப் பிறகும் சமணர்கள் தோல்வியை ஒப்புக்கொள்ள மறுத்தனர். மூன்றாவது முறையாக ஆற்று நீரில் யாருடைய ஏடு அடித்து செல்லாமல் இருக்கிறதோ... அவரே உயர்ந்தவர் ஆவர்...என்று வாதத்துக்கு அழைத்தனர்.

வைகையாற்றில் சமணர்கள் விட்ட ஏடு ஆற்றோடு ஓட, ஞானசம்பந்தரின் ஏடு ஆற்றைக் கிழித்து எதிர்புறம் ஓடத் தொடங்கியது. வாதத்தில் தோற்ற சமணர்கள் சொன்னது போலவே கழுவில் ஏறி, உயிரை மாய்த்துக் கொண்டனர். வெப்பு நோய் தீர்ந்த மன்னன் அது முதல் சைவத்துக்கு மாறினான்.

கூன் பாண்டியன், அவன் மனைவி மங்கையர்க்கரசி, அமைச்சர் குலச்சியார் ஆகிய மூவரும் நாயன்மார்கள் வரிசையில் இடம் பிடித்தார்கள்.

https://t.me/Knox_e_Library

# 2. அதிவீர ராம பாண்டியன்

பிற்கால பாண்டிய மன்னர்களில் ஒருவன். பாண்டியர்களின் மூன்றாவது தலைநகராகிய கொற்கை நகரை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்தவன். நெல்வேலி மாறனின் முதலாவது மகன்.

நெல்வேலி மாறனுக்கு நீண்ட நாட்களாக குழந்தை பாக்கியம் இல்லாமல் போனதால் இராமநாத சுவாமியை வழிப்பட்டனர். அதன் காரணமாக அவர்களுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தனர். முதல் குழந்தைக்கு வரதுங்க ராமன் என்றும், இரண்டாவது குழந்தைக்கு அதி வீரராமன் என்றும் பெயர் சூட்டி மகிழ்ந்ததாக ஒரு செய்தி குறிப்பிடுகிறது.



அதி வீர ராமபாண்டியனுக்கு மாறன், குலசேகரன், பிள்ளை பாண்டியன், குணசேகர வழுதி என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு.

இம்மன்னன் சிறந்த புலவனும்கூட. தமிழில் நறுந்தொகை எனப்படும் வெற்றி வேற்கை என்னும் புகழ் பெற்ற நூலை எழுதியவன் இவ்வரசனே.

`எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்'
`அறிஞர்க்கழகு கற்றுணர்ந்து அடங்கல்'
`கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'
`அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்'
`துணையோடு அல்லது நெடுவழிப்போகேல்'
போன்ற நீதிநெறிப் பாடல்களை இயற்றிய அறிஞன். கல்வியின் அவசியத்தையும் கற்றவர் மேன்மையையும் பாண்டியன் பல பாடல்களில் அறிவுறுத்திக் கூறி இருப்பதன் மூலம் இவன் கல்வியின் சிறப்பை உணர்ந்தவன் என்பதை அறிய முடிகிறது. இல்லாமை, கல்லாமை, இழிவு, பொல்லாத பல நோய்கள் யாவும் இறைவன் புகழைச் சொல்லாதவர்களைத் தான் ஏழு தலைமுறைக்கும் துன்புறுத்தும் என்றும், உலகில் மற்ற எல்லா செல்வத்தை விடவும் உறவுகளே சிறந்த செல்வம் என்றும் இவர் கூறுகிறார்.

வட மொழி நூல்களான நைடதம், கூர்ம புராணம்(திருமாலின் அவதாரங்களில் ஒன்று) இலங்கபுராணம், காசிக்காண்டம், வாயுசங்கிதை, திருக்கருவை அந்தாதிகள் என வடமொழி நூல்களை இவன் மொழிப்பெயர்ப்பு செய்துள்ளதால் சமஸ்கிருத மொழியிலும் இவ்வரசன் புலமைப் பெற்று இருந்தான் என்பதை அறிய முடிகிறது.

சிவ பக்தி மிகுந்தவன் என்றாலும் திருமாலின் பெருமை கூறும் கூர்ம அவதாரத்தை எழுதியவன். புலவர்கள் பிழையோடு பாடும்போது ஒவ்வொரு பிழைக்கும் தலையில் குட்டி திருப்பி அனுப்புவானாம். அவர்கள் பிழையின்றி எழுதி வந்தால் மகிழ்வோடு வரவேற்று பொன்னும் பொருளும் வாரிக்கொடுத்துள்ளான். இடையில் இவனுக்கு தொழு நோய் வந்திருக்கிறது. அந்நோயிலிருந்து விடுபட திருக்கருவை என்ற தலத்திற்குச் சென்று அகோராத்திரம் என்னும் பெருமானை வழிப்பட்டான். பதித்துப்பந்தாதி பாடி பரமனருள் பெற்று தொழுநோய் நீங்கியதாகவும் கூறப்படுகிறது.

திருக்கருவை வெண்பா அந்தாதியில் பெண்களை பத்மினி, சித்தினி, சங்கினி, அத்தினி என நான்கு விதமாகப் பிரித்து அவர்களின் குணாதிசயங்கைள வரிசைப்படுத்தியுள்ளார்.

கி.பி. 1564 முதல் 1606 வரை இவன் அரசாண்டதாகக் கூறப்படுகிறது. வீரம், நேர்மை, தியாகம் முதலிய நற்பண்புகளைக் கொண்ட இவ்வரசன் ஆரம்பத்தில் சிற்றின்ப பிரியனாக இருந்துள்ளான். பிறகு மனம் திருந்தி பாடல்கள் புனைந்துள்ளான்.

https://t.me/Knox_e_Library

# 3. முதலாம் சடையவர்மன்

முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்(கி.பி. 1251-1268) . பாண்டிய நாட்டை சேர்ந்தவர். இவர் சேர, சோழ, பல்லவ, காகதீய, போச்சள என பல்வேறு நாட்டு மன்னர்களை போரில் வென்றவர். அதனால் அவருக்கு நிறைய பொன்னும், பொருளும், செல்வமும் கிடைத்தது. அந்தச் செல்வத்தின் பெரும்பகுதியை கோயில்களுக்கு நன்கொடையாகக் கொடுத்தார் . குறிப்பாக சிதம்பரம் நடராசர் கோயில், திருவரங்கத்தில் (ஸ்ரீரங்கம்) இருக்கக்கூடிய ரங்கநாதர் கோயில்.

திருவரங்க கோயிலில் சுந்தரப் பாண்டியன் 'துலாபார தானம்'செய்தார். துலாபார தானம் என்பது, தராசு தட்டில் ஒருவரை உட்கார வைத்து அவரின் எடைக்கு சமமான தங்கத்தை நன்கொடையாக கொடுப்பது. ஆனால் சுந்தரப் பாண்டியன் செய்த 'துலாபார தானம்' சற்று புதுமையானது. தனது பட்டத்து யானையை அலங்கரித்து, அதன் மீது அரசியுடன் ஏறி, தானும் அமர்ந்துக் கொண்டார். முன்புறம் யானைப் பாகன் அமர்ந்துக் கொண்டார். இவர்களின் எடைக்கு சமமான தங்க ஆபரணங்களை திருவரங்கக் கோயிலுக்கு நன்கொடையாகக் கொடுத்தார்.

அரசர், அரசி, யானை எல்லாவற்றையும் சேர்த்து அளக்கக் கூடிய தராசு கருவி அப்போது இல்லை. அதனால் அவர் என்ன செய்தார் தெரியுமா? காவிரிக்கரையோரம் ஒரு பெரிய நீராழி(குளம்) கட்டினார். அருகிலேயே குளத்தில் மிதக்கக் கூடிய படகு மாதிரியான ஒரு தெப்பத்தை உருவாக்கினார். அந்த தெப்பத்தின் மேல் யானை மீது அமர்ந்தபடி அரசன், அரசி, பாகன் மூவரும் ஏறினார்கள். யானை தெப்பத்தின் மீது ஏறியவுடன் அந்த தெப்பம் சிறிதளவு நீரில் அமிழ்ந்தது. அந்த தெப்பம் நீருக்குள் அமிழ்ந்த அளவை குறித்துக்கொண்டார்கள். பிறகு அதிலிருந்து யானையை இறக்கி விட்டனர். இப்பொழுது தங்க ஆபரணங்களை வைக்க ஆரம்பித்தார்கள். யானை நின்ற பொழுது எவ்வளவு தூரம் தெப்பம் அமிழ்ந்ததோ அந்த அளவு வரும் வரை தங்க ஆபரணங்களை வைத்துக்கொண்டே இருந்தார்கள். கடைசியாக யானை நின்ற பொழுது

அமிழ்ந்த அளவும் வந்தது. பிறகு செல்வங்களை எடுத்து கோயிலுக்கு கொடுத்தார்கள்.

# 4. வையாவி கோப்பெரும் பேகன்

இன்றைய பழனி மலைதான் பழங்காலத்தில் பொதினி என்றும் வையாவி என்றும் அழைக்கப்பட்டது. இப்பொதினியை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவன் ஆவியர் குடியில் பிறந்த பேகன்.

பெரும் வள்ளலாகத் திகழ்ந்தவன். ஒரு முறை இவன் பயணம் செல்லும் பாதையில் ஒரு நாள் மழை மேகம் திரண்டிருந்தது. மேகத்தைக் கண்ட மயிலொன்று தோகை விரித்து நடனம் ஆட... அவ்வழியே வந்த பேகன் மயில் குளிரால் நடுங்குவதாக எண்ணிக்கொண்டு தான் போர்த்தியிருந்த உயர்ந்த பட்டால் ஆன போர்வையை மயிலுக்கு போர்த்தி விட்டு வந்தான்.



இத்தகைய இளகிய மனம் கொண்ட பேகனின் மனைவி பெயர் கண்ணகி. கண்ணகியை விடு பிரிந்து சிறிது காலம் பரத்தை ஒருத்தியிடம் போய் தங்கி இருந்தான் பேகன். கணவனின் செய்கையால் கண்ணகி

மிகுந்த மன வருத்தமும், வேதனையும் அடைந்தாள். மன்னனை திரும்ப வரவழைக்கும் வழி தெரியாது கண்ணீர் உகுத்தாள்.

பேகன் பரத்தையிடம் குடும்பம் நடத்துவதை கேள்விப் பட்ட கபிலர்,அரிசில்கிழார்,பெருங்குன்றூர்கிழார் முதலிய புலவர்கள் பேகனிடம்சென்று பாட்டுப் பாடி அறிவுரைக் கூறினர்.

அரசன் புலவர்களுக்கு பொன்னும் பொருளும் பரிசாகக் கொடுக்க முன்வந்தான். ஆனால் புலவர்களோ அவன் பரிசை ஏற்க மறுத்து,உன் மனைவியோடு சேர்ந்து வாழ்ந்து, அவள் உதிர்க்கும் கண்ணீரை துடை. அதுவே எங்களுக்குப் போதும் என்று கூறினார்கள்.

புலவர்களிடம் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்த பேகன் மனம் திருந்தி தன் மனைவியோடு சேர்ந்து குடும்பம் நடத்தலானான்.இவன் எப்படி இறந்தான் என்பது தெரியவில்லை.

# 5. ஆதித்த கரிகாலன்

இரண்டாம் பரந்தக சோழன் என்னும் சுந்தர சோழனுக்கு மனைவியர் இருவர். முதல் மனைவி சுந்தரசோழன் பட்டம் சூடும் முன்பே இறந்து விட்டார். இரண்டாவது மனைவி வானவன் மாதேவி. இவருக்கும் சுந்தரசோழனுக்கும் ஆதித்த கரிகாலன், அருண்மொழி எனப்படும் இராஜராஜசோழன், குந்தவை மூன்று மக்கள் பிறந்தனர்.

இராஜராஜ சோழனுக்கு அண்ணன் ஆதித்த கரிகாலன். தன் தந்தைக்கு ஆட்சியில் உதவியாகவும், போரில் வெற்றிவாகை சூடுபவனாகவும் விளங்கினான். பாண்டியரை வென்று, ஈழத்துக்கும் படையனுப்பித் தென்புறக் காவலை பலப்படுத்திய சுந்தர சோழன், வடக்கு மண்டல காவலுக்கு தன் மூத்த மகன் ஆதித்த கரிகாலனை அனுப்பி வைத்தார்.



ஆதித்த கரிகாலன் தொண்டை (காஞ்சிபுரம்) நாட்டில் தங்கி பல்லவகுல சிற்றரசன் பார்த்திபேந்திரன், வல்லத்து இளவரசன் வந்தியதேவனுடன், வட எல்லையை பாதுகாத்து வந்தான்.

அத்துடன் புதிய நகரங்களை உருவாக்கி ஏரிகள் பலவற்றை வெட்டினான். புதுக்கோட்டை திருமையத்தில் சுந்தரசோழபுரம், வடாற்காடு பிரமதேசம் என்னும் ஊரில் சுந்தர சோழ பேரேரி என்னும் ஏரியை அமைத்தான். காவிரியின் குறுக்கே ஆரம்ப கால கல்லணையைக் கட்டியது மாவளத்தான் எனப்படும் கரிகாலன் என்றும் பிறகு அப்பணியை முடித்து வைத்தது ஆதித்தகரிகாலன் என்றும் கூறுகிறார்கள்.

சுந்தர சோழரும், ஆதித்த கரிகாலனும் பௌத்த மதத்தை பெரிதும் ஆதரித்தார்கள். தந்தையின் சார்பில் இலங்கைக்கு படையெடுத்துச் சென்ற இராஜராஜசோழன் அங்கே பௌத்தர்களுக்கு பொன்னும் பொருளும் வழங்கினான். (பௌத்த துறவி மாதேவடிகள் இராஜராஜசோழனின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது)

இந்நிலையில் தென்னார்க்காடு உலகபுரம் என்னும் ஊரில் சுந்தரசோழன் புத்தமதத்திற்காக பெரும்பள்ளி ஒன்றை கட்ட ஆரம்பித்தான். இதனால் இந்துக்களான ஒரு பிரிவினர் மத்தியில் ஆவேசமும், அதிர்ச்சியும் எழுந்தது. அரசன் புத்தத்தை ஆதரிப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

இந்நிலையில் விருந்தொன்றுக்குச் சென்ற ஆதித்த கரிகாலனை சூழ்ச்சி செய்து யாரோ கொன்று விட, சோழ நாடே சோகத்தில் மூழ்கியது. தன் மூத்த மகனின் அகாலமரணம் தந்தையாகிய சுந்தரசோழனை மிகவும் பாதித்தது. அந்த பாதிப்பிலேயே இரண்டு மூன்று மாதங்களில் இறந்து விட்டார்.

சுந்தரசோழனின் இறப்பிற்குப் பின் அவரது அண்ணன் மகன் உத்தமச்சோழன் அரியணை ஏறினான். அவன்தான் தனக்கு போட்டியாக ஆதித்த கரிகாலன் பதவிக்கு வந்துவிடக் கூடாது என்று கொன்று விட்டதாக கூறப்பட்டாலும் ஆதாரம் ஏதும் இல்லை. உத்தமச்சோழன் பெயருக்கு ஏற்றார்போல் உத்தமன் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் ஆதித்த கரிகாலனை கொன்றவர்களை தான் ஆட்சி செய்த பன்னிரண்டு ஆண்டுகள் வரை கண்டுபிடிக்கவில்லை உத்தமச்சோழன்.

அதன் பிறகு ஆட்சிக் கட்டிலில் ஏறிய இராஜராஜசோழன் தன் அண்ணனைக் கொன்றவர்களை கண்டு பிடித்தான்.

சோமன், இரவிதாசனான பஞ்சவன், பிரமாதிராசன், மலையனூரான்தேவதாசக் கிராமவித்தன், பரமேசுவரனான இருமுடிச்சோழ பிரமாதிராசன் என்னும் ஐவர்தான் ஆதித்த கரிகாலனை கொன்றவர்கள்

என்று கண்டு பிடித்ததோடு தண்டனையும் வழங்கினான் என்று காட்டு மன்னார் குடி கல்வெட்டு தெரிவிக்கிறது.

இக்கொலையாளிகளில் நால்வரும் சகோதரர்கள். அரசில் உயர்ந்த பதவியில் இருந்தவர்கள். அண்ணனைக் கொன்றவர்களை தண்டித்தான் இராஜராஜசோழன்.

ஆதித்த கரிகாலன் புத்த மதத்தை ஆதரித்ததுதான் கொலைக்கான காரணமாக கருத்தப்பட்டது.

# 6. முதலாம் குலோத்துங்க சோழன்

### *கி.பி. 1030 முதல் 1122 வரை*

இரண்டாம் இராஜராஜ சோழனின் மகள் குந்தவைக்கும் கீழை சாளுக்கிய(தெலுங்கர்கள்) விஜயாதித்தனுக்கும் பிறந்தவன் நரேந்திரன். தன்னுடைய சகோதரி மகனான இவனுக்கு இரண்டாம் ராஜேந்திர சோழன், தன் மகளை திருமணம் செய்து கொடுத்தான். அவளுடைய மகன்தான் முதலாம் குலோத்துங்க சோழன். கி.பி.1030 இல் கங்கை கொண்ட சோழபுரத்தில் பிறந்தவன். இளமையில் சோழ மரபுபடி தாத்தாவின் பெயரான இராஜேந்திரன் என்றும் பின் கீழை சாளுக்கிய மரபுபடி விஷ்ணுவர்த்தன் என்றும் அழைக்கப்பட்டான்.ஒன்பது வயதிலேயே திருவையாறு கோயிலுக்கு சில நன்கொடைகள் வழங்கியவன்.

இராஜராஜ சோழன், ராஜேந்திரசோழன்,இராசாதிராசன்,அவன் தம்பி இரண்டாம் ராஜேந்திரன், அவனது மகன் வீரராஜேந்திரன், இவனது மகன் அதிராஜேந்திரன் வரிசையாக தந்தை வழி வாரிசுகளின் அரசாட்சி முடிவுக்கு வந்த பின்பு, பெண் வழி வாரிசாக முடி சூட்டிக்கொண்டவன்தான் குலோத்துங்க சோழன்.

கங்கைகொண்ட சோழபுரத்திலேயே யானையேற்றம், குதிரையேற்றம், வாட்பயிற்சி, மற்போர் முதலியவைகளைக் கற்றான். கி.பி.1052 இல் தன் தாய்மாமன் இரண்டாம் ராஜேந்திரனின் மகள் மதுராந்தகியை திருமணம் செய்து கொண்டான்.

இவன் கி.பி. 1070 முதல் 1120 வரை அரசாண்டான். கி.பி.1054 இல் தன் தாய்மாமன்களோடு சேர்ந்து கொப்பத்தில் நடைப்பெற்ற மேலை சாளுக்கிய போரில் கலந்து கொண்டான். இதுவே இவனது முதலாவது போராகும்.

இவன் தந்தை வேங்கியின் அரசனாக நாற்பது ஆண்டுகள் அரசாண்டான். தந்தைக்குப் பின் குலோத்துங்கனால் அரியணை ஏறமுடியவில்லை. காரணம் இவனுடைய சிற்றப்பா விஜயாதித்தனின் மகன் சக்திவர்மன் வேங்கியின் வேந்தனாக முடிசூட்டிக்கொண்டான்.இதனைக் கேள்வியுற்ற குலோத்துங்கனின் மாமன் வீரராஜேந்திரன் போர் எடுத்துச் சென்று அவனை கொன்றான். பின் வேங்கிக்கு அரசனாய் கி.பி.1070 இல் முடிசூட்டிக்கொண்டான். அதற்கு முன்பாக சோழ நாட்டின் நல்லெண்ண தூதுவராக சீனாவிற்கு சென்று வந்தான்.

சோழ நாட்டு மன்னனாக இருந்த தாய்மாமன் மகன் அதிராஜேந்திரன் நோய்வாய்ப்பட்டு 1071 இல் இறந்து போகவும், தந்தை வழி வாரிசற்றுப் போன சோழ நாட்டிற்கு பெண் வழி வாரிசாக வந்து முடிசூட்டிக்கொண்டான் முதலாம் குலோத்துங்கன்.

இவனுக்கு கப்பம் கட்டும் அரசர்கள் பலர் இருந்தனர். அவர்களில் ஒருவன் கலிங்கத்தை ஆண்டவன்(இப்போதைய கிழக்கு ஒடிசா)அனந்தவர்மன். குலோத்துங்கனைப் பிடிக்காத சில சாளுக்கிய மன்னர்களின் உதவி இவனுக்கு கிடைத்தது. அந்த தைரியத்தில் திரைசெலுத்த மறுத்து போருக்கு சோழனை போருக்கு அழைத்தான். இதனால் அவன் மீது போர் தொடுக்கும் கட்டாயம் குலோத்துங்கனுக்கு ஏற்பட்டது.

கி.பி.1112 இல் காஞ்சிக்கு வந்து குலோத்துங்கன் தன் நண்பன் இப்போரை கருணாகர பல்லவ தொண்டைமானை தலைமையேற்று நட போகச் சொன்னான். தொண்டைமான் குலோத்துங்கனின் நண்பன் மட்டுமல்ல, படைத்தளபதியும் கூட.

கடுமையான இப்போரின் இறுதியில் சோழர்களுக்கு வெற்றி கிட்டியது.

போரில் கலிங்கத்து சிறந்த குதிரைகள், யானைகள், தேர், நவரத்தினங்கள் என சிறந்த பொருட்கள் சோழ நாட்டுக்கு எடுத்து வரப்பட்டன.

சோழனின் இவ்வெற்றியை ஜெயம் கொண்டார் என்னும் புலவர் கலிங்கத்துப் பரணி என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். பரணி என்பது போரில் ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனைப் பற்றி பாடுவது. ஒவ்வொரு பாடலுக்கும் பொன்னாலான ஒரு தேங்காயை அரசன் புலவனுக்கு பரிசளித்ததாக கூறப்படுகிறது.

ஆந்திர மாநிலம் கோதாவரி மாவட்டத்தில் உள்ள திராட்சாராமம் என்னும் ஊரில் உள்ள கோயில் கல்வெட்டில் `தன் வீரம் பாடப்பட்டோன்' என்று

குலோத்துங்கனின் 23 ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தில் கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது.

தலையில் கொண்டையோடு, பெரிய மீசையுடன் இரு கரம் கூப்பி வணங்கிய நிலையில் உடை வாள் கீழே வைக்கப்பட்டிருக்க, தலையில் நீண்ட அலங்காரத்துடன் கட்டப்பட்ட துணியுடன் இவ்வரசனின் சிலை ஒன்று கும்பகோணம் அருகே வண்டுவாஞ்சேரியில் (வண்டை வளம்பதி) உள்ளது.

சேர, சோழ பாண்டியருடன் போரிட்டு இவன் வெற்றி வாகை சூடினாலும் இலங்கையை விஜயபாகு என்பவனிடம் பறிகொடுத்தான். அதற்குக்காரணம் சோழ நாட்டைச் சுற்றி பகைவர்கள் கலகங்கள் செய்தபடி இருந்ததால் அவர்களை அடக்கவே அவனுக்கு நேரம் சரியாக இருந்தது.

இவன் இலங்கை சென்று தங்கியிருந்தபோது இனுவில் என்னும் ஊரில் தன் வெற்றிக்கு பக்கபலமாக இருந்த தன் நண்பன் கருணாகர தொண்டைமானின் பெயர் சொல்லும் விதமாக கருணாகரப்பிள்ளையார் என்

னும் கோயில் எழுப்பினான் என்பது குறிப்பிடத்தக்கது.

இவன் அரியணை ஏறிய நேரத்தில் ஈழத்தில விஜயபாகு வட இலங்கையில் இருந்த சோழரை விரட்டி நாட்டை பிடித்துக்கொண்டான். ஈழம் சோழரின் பிடியில் இருந்து கை நழுவிப் போய்விட்டது என்பதை உணர்ந்த குலோத்துங்கன் அவர்களுடன் சமாதானம் செய்து கொள்ளும் விதமாக விஜயபாகுவின் தங்கை மித்தாவை பெண் கேட்டு அனுப்பினான். ஆனால் விஜயபாகுவோ பாண்டிய மன்னன் குலசேகரபாண்டியனுக்கு தன் தங்கை மித்தாவை கொடுத்தான்.

விஜயபாகுவுடன் நல்லுறவு கொள்ள சோழன் முற்பட்டாலும் சோழ மக்கள் சிங்களரை வெறுத்தனர். சாளுக்கிய நாட்டிற்கு சோழநாடு வழியாகச் சென்ற இலங்கை தூதுவர்களை மூக்கு, காது அறுத்து விரட்டினர் சோழ மக்கள். அறுபட்டவர்கள் தங்கள் நாட்டு மன்னனிடம் போய் முறையிட அவனோ இலங்கையில் இருந்த சோழ நாட்டு தூதுவர்களை அழைத்து,`கடல் சூழ்ந்த தனியான ஒரு இடத்திலோ தனியாகவோ படையுடனோ வந்து உங்கள் மன்னனை வந்து என் வலிமையைச் சோதிக்கச் சொல்' என்று வஞ்சினம் கூறியதோடு தூதுவர்களுக்கு பெண் வேடம் போட்டு அனுப்பி வைத்தான்.

குலோத்துங்கன் ஈழ விடுதலையை ஏற்றுக்கொண்டதுடன் விஜயபாகுவின் மகளை மணந்து இலங்கையிலேயே தங்கியிருந்த குலசேகரபாண்டியனின் மகனான வீரப்பெருமாள் என்ற மானாபரணனுக்கு தன் மகள் சுத்தமல்லி என்பாளை திருமணம் செய்து வைத்தான். இவனுடைய காலத்தில் பாண்டியர்கள் எழுர்ச்சியுற்று ஆங்காங்கே கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

இவனுக்கு இராசராச மும்முடிச்சோழன், வீரசோழன், விக்ரமசோழன் மூவரும் வேங்கி மற்றும் சாளுக்கிய நாட்டை கவனித்துக்கொண்டனர்.

கம்போடியா(கடாரம்)நாட்டிற்குச் சென்று அங்கு அந்நாட்டு மன்னன் அர்சவர்மன் அளித்த அரியவகை கல் ஒன்றைக் கொண்டு வந்து சிதம்பரம் நடராசர் கோயில் மண்டபத்தில் பதிக்கச் செய்தான்.

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக சோழப்பேரரசை ஆண்ட குலோத்துங்கன் ஏறத்தாழ தன்னுடைய 92 வது வயதில் கி.கி.1112 இல் உயிர்நீத்தான்.

# 7. இரண்டாம் குலோத்துங்கன்

***கி.பி.1133 முதல் 1150 வரை***

இவன் முதலாம் குலோத்துங்க சோழனுக்கும் மதுராந்தகிக்கும் பிறந்த விக்ரமசோழனின் மகன் ஆவான். அதாவது முதலாம் குலோத்துங்கனின் பேரன் ஆவான்.

சைவனான இவ்வரசன் சிதம்பரம் நடராஜர் கோயிலுக்கு பல திருப்பணிகள் செய்தான். பக்தியின் காரணமாக தனது முடிசூட்டு விழாவை கோயிலிலேயே வைத்துக்கொண்டான் என்று சொல்லப்பட்டுகிறது.

சிதம்பரம் கோயிலைச் சுற்றி பெரிய தெருக்கள், மண்டபங்களை இம்மன்னன் எழுப்பினான்.கோயிலை பொன்னாலும் மணியாலும் அலங்கரித்தான். இப்படி கோயிலை விரிவும், அழகும் படுத்தும் போது சிவன் கோயிலில் பெருமாள் சிலை எதற்கு என்று நினைத்து அதை பெருமாளின் இருப்பிடமான கடலில் கொண்டு போய் போடச் சொன்னதாக ஒட்டக் கூத்தர் பாடிய தக்க யாக பரணி மூலம் அறிய முடிகிறது. இச்சிலை கி.பி.எட்டாம் நூற்றாண்டில் பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மனால் நிறுவப்பட்டது.

மன்னனுடைய இச்செயல் வைணவரான ராமானுஜரையும், அவரது சீடர்களையும் மிகவும் பாதித்தது. ராமனுஜரின் மனம் துன்புறுவதைக் கண்ட அவரது சீடர் கூரத்தாழ்வாரும் மற்றொருவரும் அரசனின் அவைக்குச் சென்று பெருமாள் சிலை அகற்ற எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் ஆழ்வாரும் அவருடன் வந்தவரும் கேட்கவில்லை. இதனால் அவ்விருவரின் கண்களை பிடுங்குமாறு உத்தரவிட்ட இரண்டாம் குலோத்துங்கன் அவர்களது குருநாதர் இராமனுஜரை நாடு கடத்த உத்தவிட்டான்.

பிறகு விஷ்ணு சிலை கடலில் போடப்பட்டது.

இம்மன்னன் மத வெறியனாக இருந்திருந்தால் நாடு முழுவதும் உள்ள பெருமாள் சிலையை அகற்றி இருப்பான். ஆனால் அப்படிச் செய்யாமல் அவன் பற்றுக்கொண்ட தில்லையில் மட்டும் அகற்றியதால் அது சிவன் மீது அவன் கொண்டிருந்த பக்தியின் வெளிப்பாடு என்று வரலாற்று நோக்கர்கள் கூறுகிறார்கள்.

இவன் ஒட்டக்கூத்தரிடம் தமிழ்ப்படித்தவன். பாடல் எழுதும் வல்லமை பெற்றவன். இசை நூல்கைள அறிந்தவன். அதனால் தூரக வித்தியா விநோதன், நித்திய கீதப் பிரமோசன், ஞானகம்பீரன் என ஓட்டக்கூடத்தரால் பாராட்டப்பட்டான். இவனது அவையில் பல புகழ்ப்பெற்ற புலவர்கள் கூடியிருந்ததால்

`கற்றவர்குடிபடை சூழ் கற்பக இளவனமே' என்று பாராட்டப்பட்டான்.

சீர்காழியில் திருஞானசம்பந்தர் சுவாமி கோயிலில் திருமுறை ஏடுகளை படியெடுக்கவும், பாதுகாக்கவும் உத்தரவிட்டான். இவனது அமைச்சரவையில் சேக்கிழார் முதன்மை அமைச்சராக இருந்தார். சேக்கிழாரை நாயன்மார் வரலாற்றை எழுதச் சொல்லி அதற்காக சேக்கிழார் சிதம்பரத்தில் தங்கி இருப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தான். அவர் நூலை எழுதி முடித்ததும் சிதம்பரம் சென்று சேக்கிழாரையும், நூலையும் யானை மீதேற்றி ஊர்வலமாக வரச் செய்து சிறப்பு செய்தான்.

இவனது மகள் அமராவதிக்கும் கம்பரின் மகன் அம்பிகாபதிக்கும் காதல் மலர்ந்து அக்காதலை ஏற்க கூடாதென்று அவைக்களப் புலவர் ஓட்டக் கூத்தர் அரசனை தூண்டி விட்டாரென்று கூறப்படுகிறது. இவர் குலோத்துங்கனின் குருவும் கூட. குருவின் வார்த்தைகளை அரசன் மதித்தான். ஒட்டக் கூத்தருக்கும், கம்பனுக்கும் மனப்புகை. அந்த புகையின் காரணமாகவே கூத்தர் இப்படி செய்தார் என்று கூறப்படுகிறது.

ஒட்டக்கூத்தரோ அம்பிகாபதி அறிஞர்கள், அமைச்சர்கள் முன்னிலையில் அவையில் நூறு பாடல்கள்(அந்தாதி) பாட வேண்டும். காதலோ, காமமோ கலக்கக் கூடாது. பாடலில் பக்தி சுவை இருக்க வேண்டும்.தவறினால் மரண தண்டனை என்ற நிபந்தனையை விதிக்கச் சொன்னார்.

அரசனும் தன் குருவின் பேச்சை தட்டாமல் அப்படியே அறிவித்தான்.

அம்பிகாபதி முதலில் அக்கால மரபுப் படி காப்பு பாடல் ஒன்றை பாடினான். காப்புப் பாடல் கணக்கில் எடுத்துக்கொள்ளப் படமாட்டாது.

அம்பிகாபதி பக்தி ரசம் சொட்டும் பாடல்கள் ஒவ்வொன்றாய் பாட, அமராவதி திரைமறைவில் இருந்து ஒவ்வொரு பூக்களாக எறிந்து எண்ணிய வண்ணம் இருந்தாள்.

அம்பிகாபதி தொன்னூற்றி ஒன்பது பாடல்கள் பாடி முடித்தபோது காப்பு பாடலையும் சேர்த்து தவறாக எண்ணி விட்ட அமராவதி, நூறு என்று கணக்கிட்டுக் கொண்டு அவைக்குள் ஓடிவர, அம்பிகாபதியும் தாம் வைத்த போட்டியில் வெற்றி பெற்று விட்டோம் என்றெண்ணி அதன் பிறகு அமராவதியைப் பற்றி காதல் பாடல் பாட,

போட்டியில் அம்பிகாபதி தோற்று விட்டதாக ஒட்டக் கூத்தரும் ,அரசனும் அறிவித்தனர்.

காப்பு பாடல் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது என்ற அற்ப காரணம் கூறி அம்பிகாபதி அமராவதி காதல் நிராகரிக்கப்ட்டது.

பிறகு அம்பிகாபதிக்கு அரசனின் ஆணைப்படி மரண தண்டனை வழங்கப்பட்டது.

அமராவதியும் பின்னர் இறந்து போனாள்.

இந்த அமராவதியின் தந்தைதான் இரண்டாம் குலோத்துங்கன் என்று சொல்லப்படுகிறது.

இரண்டாம் குலோத்துங்கன் தன்னுடைய மகனான இரண்டாம் இராசராசனுக்கு கி.பி. 1146 இல் இளவரசு பட்டம் சூட்டினான். அதன்பின் 1150 இல் இயற்கை எய்தினான்.

இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் (1133 முதல் 1150 வரை) திருவாமாத்தூர் கோவிலில், 16 பேர் தேவாரம் ஓதும் பணி செய்து வந்தனர். இந்தப் பதினாறு பேருக்கும் ஒரு சிறப்பு உண்டு. அதாவது இவர்கள் யாருக்கும் பார்வை தெரியாது. கண் தெரியாவிட்டால் என்ன? கடவுளைப் பாட நாவிருக்கிறதே என்று இவர்கள் தங்கள் திறமையை காட்டினார்கள்.

அரசனும் இவர்களது பாடலுக்கு மதிப்புக் கொடுத்து, அந்தக் கோவில் ஓதுவார்களாகப் பணியமர்த்தி இருக்கிறார். பார்வை தெரியாத அவர்களுக்கு வழிகாட்டுவதற்காக ஒருவர் இருந்தார். அவர் ‘கண்

காட்டுவார்’ என்று அழைக்கப்பட்டார். கோவில்களில், தேவாரம் பாடும் ஓதுவார்கள் ‘திருப்பாட்டு ஓதும் மகேசுரர்’ என்று அழைக்கப்பட்டனர். விழுப்புரம் மாவட்டம், திருவண்ணாமலை, செஞ்சி நெடுஞ்சாலையில் உள்ளது ‘திருவாமாத்தூர்’

# 8. மூன்றாம் குலோத்துங்கன்

இரண்டாம் குலோத்துங்கனுடைய மகன் இரண்டாம் ராசராசன். கி.பி.1150 இல் கங்கை கொண்ட சோழபுரத்தில் பேரரசனாக மூடிசூட்டிக்கொண்டவன். ஒட்டக்கூத்தரிடம் தமிழ்ப் பயின்ற இவன் 1162 இல் நோயுற்றான். அவனுடைய பிள்ளைகள் இருவருக்கும் அப்போது முறையே ஏழு வயது ஆறு வயது. அவர்களைக் கொன்று விட்டு ஆட்சியைக் கைப்பற்றவும் ஒரு கூட்டம் சதி செய்தது.

இராசராசன்தன் நம்பிக்கைக்குரிய திருச்சிற்றம் பலமுடையான் பெருமான் நம்பி பல்லவராயன் என்பவரை அழைத்து தன் மனைவி குழந்தைகளை பாதுக்காப்பான இடத்துக்கு அனுப்பி விட்டு எதிரிகளை அடக்கியதோடு சோழ அரசபரம்பரையில் வந்த இளைஞர்கள் சிலரை அழைத்து அதிலிருந்து எதிரிலி பெருமாள் என்பவனை தேர்வு செய்து அவனுக்கு ராசாத்திராசன் என்ற பட்டப் பெயர் சூட்டி இளவரசு பட்டம் சூட்டினான். தன்னுடைய பிள்ளைகள் தகுந்த வயது வந்ததும் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும் என்று கூறிவிட்டு 1173 இல் இரண்டாம் ராசேந்திரன் இறந்து போனான்.

தன் மன்னனின் ஆணைப்படி அவர்களின் புதல்வர்களை வளர்த்தான் இராசாத்திராசன். மூத்தவன் நல்லமன். கல்விவேள்வியிலும் சமய கொள்கையிலும் ஈடுபாடு கொண்டதால் இவன் வளர்ந்து துறவு வாழ்க்கையை மேற்கொண்டான்.

இளையவன் குமார மகீதரன் அரசியல் பயிற்சிப் பெற்று கி.பி.1178 இல் மூன்றாம் குலோத்துங்கன் என்ற பட்டப் பெயருடன் இளவரசு பட்டம் சூடிக்கொண்டான். இரண்டாம் இராசாத்திராசன் இரண்டு ஆண்டுகள் மூன்றாம் குலோத்துங்கனுடன் ஆட்சி செய்து விட்டு பின் ஆந்திரம் கொப்பத்துக்குச் சென்று ஆங்கேயே ஆட்சி செய்து இறந்து விட்டான்.

அரசின் நேரடி வாரிசு இல்லாத காரணத்தால் இராசாத்தி ராசன் காலத்தில் சோழ அரசில் அங்கம் வகித்த சிற்றரசர்கள் எல்லாம் சுதந்திர

மன்னர்களாக தங்களை அறிவித்து கிளர்ச்சியில் இறங்கினர். படைத்தலைவர்களும் அரசுக்கு பயப்படாமல் அவர்கள் சொல்வதை அரசன் கேட்க வேண்டும் என்ற மன நிலையில் இருந்தனர். இதனால் சோழ அரசின் நிலப் பகுதிகள் கொஞ்சம் கொஞ்சமாக கை நழுவிப் போய்க்கொண்டிருந்த நிலையில் மூன்றாம் குலோத்துங்கன் அரசனான்.

சிற்றரசர்களை வழிக்கு கொண்டுவருவதும் கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதும் அரசனுக்கு பெரிய வேலையாக இருந்தது. தெலுங்கு சோழர்கள் அரசுக்கு சவால் விட்டு காஞ்சியைக் கைப்பற்றிக்கொண்டனர். வெள்ளமும் , பஞ்சமும் நாட்டில் தலைவிரித்தாடியது. வரி கொடுக்க முடியாமல் மக்கள் அவதியுற்றனர்.

1177 இல் மதுரையை ஆண்ட வீரபாண்டியன் (குலசேகரபாண்டியனின் மகன்) சிடிங்களருடன் நட்புறவு கொண்டிருந்தான். இன்னொரு பாண்டிய மன்னன் சடையவர்மன் மகன் விக்ரமபாண்டியன் குலோத்துங்கனின் உதவியை நாடி வந்தான். இதனால் பெரும்படையுடன் சென்று தாக்கிய மூன்றாம் குலோத்துங்கன் வீரபாண்டியனை தோல்வியுற செய்தான். சிங்களப் படையும் இலங்கைக்கு ஓடியது.

ஆனால் குலோத்துங்கனிடம் தோல்வியுற்ற வீரபாண்டியனின் தாய் தன் மகனுக்கு படை உதவி செய்யக்கோரி நிசாங்கமல்லா என்ற சிங்கள தளபதிக்கு தூது அனுப்ப, அவனும் வீரபாண்டியனுடன் சேர்ந்து கொண்டு குலோத்துங்கன் மீது படையெடுத்துவர அவர்களை துரத்தி அடித்த குலோத்துங்கன் வீரபாண்டியனின் பட்டத்தரசியை சிறைப் பிடித்து தன்னுடைய அந்தப் புர பணிப்பெண்ணாக சேர்த்துக்கொண்டான். மறுபடியும் சிங்களர்கள் வீரபாண்டியனுக்கு உதவிக்கு வராமல் இருக்க இலங்கை வரை சென்று அடக்கினான். அதன் பின் வீரபாண்டியன் மன்னிப்புக் கோரியதால் நாட்டின் ஒரு பகுதியை அவனிடம் ஒப்படைத்து அவனை ஆட்சி செய்யும் படி பணித்தான்.

இவன் சைவத்ததை பின்பற்றினான். வேலூர் திருமால் கோயிலுக்கு மூன்று கிராமங்களை ஒன்றாக்கி குலோத்துங்க நல்லூர் என்று பெயரிட்டுஅவ்வூரில் வரும் வருமானத்தை கோயிலுக்கு கொடுத்தான்.சமணர்களுக்கு ஆதரவு கொடுத்து பல கொடைகள் செய்தான். காஞ்சியின் ஒரு பகுதி அப்போது சைன காஞ்சி என்று அழைக்கப்பட்டது. திருவொற்றியூர் கோயிலுக்கு மணிமண்டபம் அமைத்து அங்கே வடமொழி கல்லூரி ஒன்றை நிறுவினான்.

பவணந்தி முனிவரும் நன்னூல் ஆசிரியரும் இவன் காலத்தவர். சோழப்பரம்பரையில் வந்த மிகவும் புகழ்ப்பெற்ற அரசர்களில் இவனும் ஒருவன். மிகவும் சிக்கலான நிலையில் அரியணை ஏறினான். நாற்பது ஆண்டுகள் ஆட்சி செய்து கி.பி. 1216 இல் மூன்றாம் இராசராசனுக்கு பட்டம் சூட்டி விட்டு இரண்டு ஆண்டுகளில் இறந்து போனான். முடிவை நோக்கி சரிந்த சோழப் பேரரசை தன்னுடைய தனிப்பட்ட ஆற்றலினால் தடுத்து நிறுத்தியவன். சோழரின் கட்டடக்கலை, நுண்கலை, இலக்கியம், வரலாற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தவன்.

பாண்டியர், தெலுங்கு சோழர், கொங்கு சோழர், முதலியோர் கிளர்ச்சி செய்தபோது அவர்கள்i அடக்கி ஒடுக்கியவன்.

அரசர்களை வென்று அவர்களுடைய நாட்டை அவர்களிடமே ஒப்படைத்து திறை செலுத்தும் மன்னர்களாக்கி விட்டு வந்ததால் இவன் 2முடிவழங்கு சோழன்' என்று பாராட்டப் பட்டான்.

கி.பி.1218 இல் இறந்தான்.

# 9. பதிற்றுப் பத்து மன்னர்கள்

எட்டுத்தொகை நூல்களில் ஒன்று பதிற்றுப்பத்து. சேர மன்னர்கள் பத்துப் பேரைப் பற்றி, பத்துப் பத்துப் பாடல்களாக பாடப்பட்ட நூல் ஆதலால், பதிற்றுப் பத்து என்ற பெயர் வந்தது. பதினெண்மேல்கணக்கு நூல்களில் இதுவும் ஒன்று. கீழ் கணக்கு நூல்களைவிட, காலத்தால் முதலில் தோன்றியது. பத்து அரசர்களின் கொடை, வீரம், சிறப்பு ஆகியவற்றைக் கூறும் இந்நூலில், ஒவ்வொரு பத்திலும் உள்ள பாடல்களுக்குத் தனித்தனியாக தலைப்புகள் வைக்கப்பட்டுள்ளன. அந்தத் தலைப்புகள், பத்துப் பாடல்களில் இருந்து ஏதேனும் ஒரு வரியில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் உள்ள சில தலைப்புகள் 'அடுநெய் ஆவுதி', 'பூத்த நெய்தல்', 'சீர்கால் வெள்ளி.'நூலில் குறிப்பிடப்பட்டுள்ள சேர அரசர்கள் பற்றிப் பார்ப்போம்

முதல் பத்து பாடல்கள் உதியன் சேரலாதனைப் பற்றிப் பாடப்பட்டுள்ளன. இந்தப் பாடல்களில் ஒன்றுகூட கிடைக்கவில்லை. எழுதியவர் பெயரும் தெரியவில்லை. ஆனால், இந்த அரசர், தன் படை வீரர்களுக்கு சோறு கொடுத்ததாக குறிப்புகள் தெரிவிக்கின்றன. தன் வெற்றிக்காக போரிடச் செல்லும் வீரர்களை உற்சாகப்படுத்துவதற்காக, மன்னர்கள் விருந்து அளித்திருக்கிறார்கள். அப்படிக் கொடுத்த மன்னர்களில் இவர் மிகவும் குறிப்பிடத்தக்கவர். மன்னர்கள் தன் படைவீரர்களுக்கு கொடுக்கும் விருந்து, 'பெருஞ்சோறு' என்று அழைக்கப்படுகிறது.

இரண்டாம் பத்து, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பற்றியது. இவர் உதியன் சேரலாதனுக்கும், வேண்மாள் நல்லினி என்ற அரசிக்கும் மகனாகப் பிறந்தவர். இவரைப் பற்றி, குமட்டூர்க் கண்ணனார் பாடியுள்ளார். நெடுஞ்சேரலாதன் வடக்கே இமயமலை வரை படையெடுத்துச் சென்று வென்றவர். அதற்கு அடையாளமாக இமயத்தில்

வில்லைப் பொறித்தவர். போரில் பெற்ற பெருஞ்செல்வங்களைப் படைகளுக்கும், குடிமக்களுக்கும் அளித்துள்ளார்.

மூன்றாம் பத்து, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாடியது. இந்தப் பாடல்களை, பாலைக் கௌதமனார் பாடியிருக்கிறார். தன் நாட்டில் அவரவர்க்கு உரிய நிலத்தை பகுத்துக் கொடுத்து, ஆட்சி செய்திருக்கிறார், இம்மன்னர். நாடு வறட்சியால் வாடியபோதும், தன்னை நாடிவரும் பாணர், கூத்தர் முதலானவர்களுக்கு, அவர்கள் உள்ளம் மகிழ, பசியை நீக்கியிருக்கிறார்.

நான்காம் பத்து, களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரலை பற்றிப் பாடப்பட்டது. இந்தப் பாடல்களை, காப்பியாற்றுக் காப்பியனார் எழுதியுள்ளார். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும், வேளாவிக் கோமான் பதுமனின் மகள் பதுமன் தேவிக்கும் பிறந்தவர் இவர். தோற்றத்தால் பகைவரை நடுங்கச் செய்தவர். மிகுந்த செல்வத்தை கொண்டவராக இருந்தார். வறுமையில் தாழ்ந்தவர்களை உயர்நிலைக்குக் கொண்டு வந்தார். சான்றோர்களிடம் பணிவு கொண்டவராக இருந்தார். தன்னை நாடிவருபவரை மகிழ்ச்சியுடன் ஆதரித்தார். இரவலர்களை வேற்றிடம் செல்லாமல், தன்னிடமே தங்க வைத்து காத்திருக்கிறார்.

சேரன் செங்குட்டுவன் அல்லது கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பற்றி, ஐந்தாம் பத்தில் கூறப்படுகிறது. இவர் மீது, பத்துப் பாடல்களைப் பாடியவர் பரணர். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் இன்னொரு மகன்தான் சேரன் செங்குட்டுவன். தாய், சோழன் மகள் மணக்கிள்ளி. சேர நாட்டு கடல் பகுதியில், வணிகக் கப்பல்களைக் கொள்ளையடித்துத் தொல்லை செய்து வந்தனர் கடற்கொள்ளையர்கள். அவர்களைத் தன் கப்பல் படை கொண்டு அடக்கி, வெற்றி கண்டார். இதனால், 'கடல் பிறக்கோட்டிய' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். செங்குட்டுவன் பகைவரும் வியந்து பாராட்டும் கல்வி அறிவும், ஒழுக்கமும் உடையவனாக இருந்தார். கனவில்கூடப் பிறர் உதவியை எதிர்பார்க்காமல் வாழ்ந்தவர் என்று, இவரைப் பற்றி பாடல்கள் கூறுகின்றன. தன் வெற்றிக்குத் துணையான வீரர்களுக்கும் தனக்கும் ஒரே விதமான உணவை சமைக்கும்படி செய்து, உண்டிருக்கிறார் சேரன் செங்குட்டுவன்.

ஆறாவது பத்தில், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பற்றிப் பாடப்பட்டுள்ளது. இவரது பெற்றோர் நெடுஞ்சேரலாதன், வேளாவிக் கோமானின் மகள். புலவர்கள் காக்கை ப்பாடினியார், நச்செள்ளையார்

ஆகியோர் இம்மன்னனைப் பாடியுள்ளனர். குழந்தையைக் காக்கும் தாயைப் போல, ஆடு கோட்பாட்டுச் சேரலாதன், தன் குடிமக்களைப் பாதுகாத்தார். அறத்தையே விரும்பும் குணத்தை உடையவராக விளங்கினார். இவர் அவையில், குமரி முதல் இமயம் வரையிலும் உள்ள அனைத்து அரசரும் கூடியிருந்தனர். அவையில் சான்றோர்கள் நிறைந்திருந்தனர். பிற நாடுகளில் இருந்து வரும் வறியவரைத் தேரில் ஏற்றி வந்து, உணவை மிகுதியாக உண்ணக் கொடுக்கும் சிறப்புடையவர் என இவர் புகழப்பட்டுள்ளார்.

செல்வக் கடுங்கோ வாழியாதன், ஏழாம் பத்தின் தலைவன். இவன் பெற்றோர் அந்துவஞ்சேரல், பொறையன் தேவி. கபிலர் இந்த மன்னரை சிறப்பித்துப் பாடியிருக்கிறார். வறியவர்களுக்குப் பொருள் கொடுத்து உதவுவதால், செல்வம் குறைவது பற்றி கவலைப்பட மாட்டார். தொடர்ந்து உதவுவதால் உண்டாகும் புகழை நினைத்து, மகிழவும் மாட்டார். போர் மட்டுமே புகழ் என்று கருதாமல், வளங்களைப் பெருக்கி, நாட்டை செழுமையாக்கி இருக்கிறார்.

பெருஞ்சேரல் இரும்பொறை எட்டாம் பத்தின் தலைவர். இவரின் பெற்றோர், செல்வக்கடுங்கோ வாழியாதன், வேளாவிக் கோமான் பதுமனின் மகள். இவரைப் பாடியவர் அரிசில் கிழார். சோழர்களையும் பாண்டியர்களையும் ஒரே போரில் வென்றவர், இச்சேரன். வேள்வி செய்வதற்குரிய வேதங்களை, இம்மன்னன் முறையாகக் கற்றுள்ளார். பகைவர்களை முழுவதுமாக அழித்தவர். குதிரைப் படையும், காலாட் படையும் மிகுந்த வலிமை உடையனவாக இருந்தன. அதியமானின் தகடூர் கோட்டையை அழித்தவர் இந்த மன்னர்.

ஒன்பதாம் பத்தில், பாடப்படும் அரசன் இளஞ்சேரல் இரும்பொறை. பெருங்குன்றூர் கிழார் இந்த மன்னரைப் பாடியிருக்கிறார். இரும்பொறை பொன்னாலான தேரினை வைத்திருந்ததாக, ஒரு பாடல் குறிப்பிடுகிறது. அறம் பல செய்தவர். அறம் செய்ய இடையூறு வந்தால், அதனைப் போக்குவதற்கு போர் செய்திருக்கிறார். போரில் ஈடுபடுவதை மிக விருப்பமான செயலாக கொண்டிருந்தார்.

பத்தாவது பத்தின் பாடல்கள் கிடைக்கவில்லை. இயற்றிய ஆசிரியர் பெயரும் தெரியவில்லை. முதல் பத்து மற்றும் கடைசிப் பத்து பாடல்களின் சில வரிகள், தொல்காப்பிய உரையிலும், புறத்திரட்டு நூலிலும் மேற்கோள் பாடல்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றிலிருந்தே இந்தப் பாடல்கள் பற்றி சிறிது தெரிய வருகிறது.

# 10. இராஜேந்திரசோழன்

சோழ மன்னர்களில் மிகவும் புகழ்வாய்ந்தவனாகவும் இன்றைய ஆட்சி முறைக்கு வழிகாட்டியாகவும், தஞ்சை பெரியகோயிலை கட்டியவனுமான இராஜராஜசோழனுக்கு மகன்கள் இருவர். மகள்கள் இருவர்.

முதலாமவன் இராஜேந்திரசோழன். மற்றொருவன் பெயர் தெரியவில்லை. பெண்களில் சந்திரவல்லி என்னும் மாதேவடிகள். மற்றவள் இரண்டாம் குந்தவை. மாதேவடிகள்தான் பௌத்தமத சாமியார்களுள் ஒருவர்.



இராஜேந்திரசோழன் கி.பி.1012-இல் இளவரசுபட்டம் சூடினான். தன் தந்தை 1014-இல் மரணமடைந்த பிறகு(இராஜராஜசோழன் எப்படி இறந்தான் என்று தெரியவில்லை)மன்னனாகப் பொறுப்பேற்றுக் கொண்டான்.

மதுராந்தகன் என்னும் பட்டப் பெயரும் இவனுக்கு உண்டு.

பர்மா மீது போர்த்தொடுத்து அங்குள்ள பெகு என்னும் பகுதியை வென்றான். அப்போது அது கடார நாடு என்று அழைக்கப்பட்டது. கடாரத்தை வென்றதால் கடாரம் கொண்டான் என்றுஅழைக்கப்பெற்றான்.

இராஜேந்திரனுக்குமனைவியர் பலர் இருந்தனர். அவர்களுள் முக்கோக்கிழானடிகள், அரிந்தவன்மாதேவி, திரிபுவனமாதேவி,(வானவன் மாதேவி)வீரமாதேவி,பஞ்சவன் மாதேவி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களில் பட்டத்தரசி யார் என்றுதெரியவில்லை. ஆனால் வீரமாதேவியை மட்டும் தனது முதுமை வயதில் இராஜேந்திரன் மணந்தான்.

மேலைசாளுக்கியம், இலங்கை, பாண்டியநாடு போன்ற நாடுகளின் மீது இராஜேந்திரன் படையெடுத்து வெற்றி வாகை சூடினாலும், இவனது வெற்றிகளில் சிறப்பானதாக கருதப்படுவது வடநாட்டு வெற்றிதான்.

சிந்து நதிக்கரையிலுள்ள மாகணி தேசம், ஓட்டரதேசம், மகாநதியின்கரையில் இருந்த கோசலநாடு, வங்காள மாநிலத்தில் மதுனபுரி போன்ற நாடுகளை வென்றுஅந்நாட்டு மன்னர்களின் தலையில் கங்கை நீரை சுமந்து வந்துதான் அமைத்த புதிய ஏரியில் ஊற்றி சோழ கங்கை என்று பெயர் சூட்டினான். இன்றைக்கு அது பொன்னேரி என்று வழங்கப்படுகிறது. சோழ கங்கையை சுற்றி ஊர் அமைத்து அதற்கு கங்கை கொண்டசோழபுரம் என்று பெயர் சூட்டினான்.

தந்தை தஞ்சையில் பெரிய கோயில் கட்டியது போல், இங்கேயும் ஒரு கோயில் அமைத்தான். தஞ்சையைப் போன்று பெரியதாக இல்லாவிட்டாலும் அதிக கலைநயத்துடன் இருக்கும்படி பார்த்துக் கொண்டான். இராஜேந்திரன் 1012-இல் தான் இளவரசு பட்டம் சூட்டிக்கொண்டான். இவனது தந்தை இராஜராஜசோழனும் வயதான பிறகே பட்டத்துக்கு வந்ததால் இராஜேந்திரனுக்கும் எளிதில் பட்டம் கிடைக்கவில்லை. ஆனால் தந்தைக்காக பல போர்களை புரிந்திருக்கிறான்.

தான் அரசாட்சி ஏற்ற ஆறே ஆண்டுகளில் தன் மகன் இராசாத்தி ராஜனிடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டு நாடு சுற்றிப் பார்க்க தன் இளவயது மனைவி வீரம்மாதேவியுடன் போய்விட்டார் இராஜேந்திரன்.

தொண்டை நாடு வடாற்காடு(வேலூர்) மாவட்டம் பிரம்மதேசம் என்னும் ஊரில் பயணம் செய்து கொண்டிருந்தபோது மன்னர் இராஜேந்திரர் 1040-இல் மரணமடைந்து விட, அவருடன் பயணம் செய்துகொண்டிருந்த அவனது இளவயது மனைவி வீரமாதேவியும் தீயில் புகுந்து உடன் கட்டை ஏறி உயிர்விட்டாள் . வீரமாதேவியின் அண்ணன் இரு உயிர்களும் சாந்தியடைய அங்கேயே ஒரு தண்ணீர்ப்பந்தல் அமைத்தான்.

ஆலமரம் தன் நிழலில் சிறு புற்பூண்டுகளைத் தவிர பெரியதாய் எந்தச் செடியையும் வளர விடாது. ஆனால் இராஜராஜ சோழன் என்னும் மாபெரும் மன்னனுக்குப் பிறகு அரியணை ஏறிய இராஜேந்திரன் ஒரு சில ஆண்டுகளே ஆட்சி செய்தாலும் தன் தந்தைக்கு இணையாக போற்றப்படுகிறான் என்றால் அது அவனது வீரத்துக்கும், திறமைக்கும் கிடைத்த நற்பெயரே ஆகும்.

https://t.me/Knox_e_Library

# 11. இராஜாதி ராஜ சோழன்

இராஜராஜ சோழனின் முதல் பேரன். கங்கை கொண்ட இராஜேந்திரனின் மூத்த மகன்.

இராஜாதிராஜனுக்கு உலகுடைய பிராட்டி திரைலோக்கியமுடையாள் என மனைவியர் இருவர். தன் தந்தையான இராஜேந்திரசோழன் காலத்திலேயே இளவரசு பட்டம் சூட்டப்பட்டு 26 ஆண்டுகளில் தன் தந்தையின் பொருட்டு சேரர், சிங்களவர், மேலை சாளுக்கியர்(ஆந்திராவின் ஒரு பகுதி)ஆகியோருடன் போரிட்டு களம் பல கண்ட மாவீரன்.


ஆகவமல்லன்

ஜெயம் கொண்ட சோழன், ஆகவமல்ல குலாந்தகன், கல்யாணபுரம் கண்ட சோழன், விஜயராஜேந்திரன் என இவனுக்கு பல பட்டப்பெயர்கள். கி.மு. **1046**-இல் விக்ரம பாண்டியன் என்னும் இலங்கை மன்னனை வென்ற இராஜாதிராஜன், அதே ஆண்டு மேலைசாளுக்கிய மன்னர்களான கண்டர் தினகரம் நாரணன், கணபதி, மதுசூதனன் போன்ற மன்னர்களை வென்று சாளுக்கியரின் அரண்மனையை தீயிட்டு கொளுத்தினான்.

கி.பி. **1048**-இல் மூன்றாவது முறையாக சாளுக்கியருடன் கிருஷ்ணா ஆற்றங்கரையில் தெலுங்கவிச்சையன், போன்றோரை வென்று சிறைபடுத்தி மதில்களை இடித்து மாளிகைகளுக்குத் தீ வைத்தான். போரில் பிடிப்பட்ட ஒற்றர்கள் மார்பில் புறமுதுகிட்டு ஓடினான் ஆகவமல்லன் என்று எழுதி இழிவு படுத்தினான். தோற்றோடிய ஆகவமல்லனின் அமைச்சர் ஒருவரும் இராஜாதிராஜனிடம் தூதாக வந்தனர். ஆனால் அவர்களில் ஒருவனுக்கு மொட்டை அடித்து தலையில் ஆகவமல்லன் என்று எழுதியும் பிரிதொருவனுக்கு பெண்வேடம் இட்டு ஆகவமல்லி என்று எழுதியும் அனுப்பியதாக திருக்கழுக்குன்றம் கல்வெட்டு கூறுகிறது.

இப்படி போரில் வெற்றி கண்ட பழக்கப்பட்ட இராஜாத்திராஜன் தன் தம்பி இரண்டாம் ராஜேந்திரனுடன் படையெடுத்துச் சென்று கிருஷ்ணா ஆற்றங்கரையில் உள்ள கொப்பம் என்னும் இடத்தில் தோற்றோடிய அதே ஆகவமல்லனிடம் போரிட்டான்.

போரில் யானைகளை வெட்டி வீழ்த்திய இராஜாதிராஜனை, குறுநில மன்னர்களில் ஒருவனான மாரப்பெருமாள் தேவர் என்பவன் இராஜாதிராஜனை போர் களத்திலேயே வெட்டிக் கொன்றான்.

அண்ணன் இறந்தபிறகு அதே களத்தில் இரண்டாம் ராஜேந்திரன் படைக்கு தலைமை ஏற்று போரிட்டான். போரில் அம்புகள் தைத்து காயம் பட்டாலும் இரண்டாம் ராஜேந்திரன் ஆகவமல்லனை வெற்றி கொண்டான் தன் அண்ணனை கொன்றவர்களை பழி தீர்த்தான் இரண்டாம் ராஜேந்திரன்!

# 12. கோப்பெருஞ்சோழன்

உறையூரை தலை நகராகக் கொண்டு அரசாண்ட சோழ அரசன் கோப்பெருஞ்சோழன். இவனுக்கு பொத்தியை ஆண்ட பெருஞ்சோழன் என்ற பெயரும் உண்டு.

இவனது தந்தை வேல்பஃறடக்கை பெருநற்கிள்ளி. இவனுக்கும் சேர அரசன் நெடுஞ்சேரலாதனுக்கும் சண்டை மூண்டது. இருவரும் போர்களத்திலேலேயே மாண்டு விட்டனர்.

சண்டையினால் ஏற்பட்ட உயிரிழப்பையும் பெருந்துயரையும் நேரில் கண்ட கோப்பெருஞ்சோழன் போரையே வெறுத்தான். நாடுபிடிக்கும் ஆசையை வெறுத்து நல்வினை செய்வதில் நாட்டம் செலுத்தினான். சோழனுக்கு அந்த ஆசையில்லா விட்டாலும் அவனை சுற்றியிருந்தவர்கள் சும்மா இருக்கவில்லை.



இவன் மீது சேர அரசன் இளஞ்சேரல் இரும்பொறை போர் எடுத்து வந்தான். (இந்த சேர அரசன் தான் கோயில்களில் முதன் முதலாக

பூசாரியை நியமித்தவன். அதற்கு முன்பு வரை பக்தர்கள் நேரடியாக சாமியை பூசை செய்து வணங்கும் வழக்கம் இருந்து வந்தது)

சேர அரசனை போரில் எதிர்கொண்ட கோப்பெருஞ்சோழன், தனது நாட்டின் சில பகுதிகளை இரும்பொறையிடம் இழந்து தோல்வியடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. மனதளவில் போரைவெறுத்திருந்ததால் அவன் போரில் நிதானத்தை கடைப்பிடித்து நாட்டின் சில பகுதிகளை இழக்க வேண்டிய நிலைக்கு ஆளானான்.

கோப்பெருஞ்சோழனுக்கு மகன்கள் இருவர். அவர்கள் இருவருமே தந்தையின் பேச்சை கேட்கவில்லை. ஆகையால் அவர்கள் மீது போர்தொடுக்க முற்பட்டான் சோழன்.

`போரில் நீ தோற்றால் நாடு சொல்பேச்சு கேளாத மகன்களிடமே சென்று விடும். மகன்கள் தோற்று வாரிசற்ற நிலையில் உனக்குப் பிறகு இந்நாட்டை யார் ஆள்வார்கள்?இரண்டில் எது நடந்தாலும் உனது செயலால் பகையரசர் எள்ளி நகையாடுவர்' என்று புல்லாற்றூர் எயிற்றியனார் என்னும் புலவர் அரசனுக்கு அறிவுரை கூறினார். சோழன் மனம் வெறுத்து வடக்கிருந்து உயிர் விட முடிவு செய்தான்.

உண்ணா நோன்பிருந்து உயிர் துறப்பதே வடக்கிருத்தல் ஆகும்.

ஆற்றின் அருகே உட்கார்ந்துகொண்டு வடக்கிருந்தான் கோப்பெருஞ்சோழன். அவனுக்கு அருகே பிசிராந்தையார் என்னும் புலவருக்கும் இடம் ஒதுக்கித் தருமாறு கேட்டான் சோழன். பாண்டிய நாட்டில் பிசிராந்தை என்னும் ஊரில் இருக்கும் புலவரின் பெயர்தான் பிசிராந்தையார். பிராந்தையாரும், சோழனும் பார்க்காமலேயே நட்பு பூண்டிருந்தனர்.

சிலர் அவர் பாண்டிய நாட்டில் இருக்கிறார். அதுவும் நேரில் பார்த்தறியாதவர். அப்படி இருக்க உங்களுடன் வந்து உயிர் துறப்பார் என்று எப்படி நம்புகிறீர்கள்? என்று கேட்டனர்..

அதற்கு சோழன் கண்டிப்பாக புலவர் வருவார் என்று கூறினான்.

அரசன் கூறியது போலவே பிசிராந்தையார் வந்து சேர்ந்தார். ஆனால் அவர் வருவதற்கு முன்பு பட்டினி கிடந்து சோழன் இறந்து விட்டான்.

தன் நண்பர் இறந்து நடுக்கல் நாட்டப்பட்டிருப்பதைக் கண்ட புலவர், துயர் கொண்டு அதே இடத்தில் உட்கார்ந்து அவரும் உண்ணா நோன்பிருந்து உயிர்த் துறந்தார்.

நட்பிற்கு இலக்கணமாய் திகழும் இவ்வரசனுக்கு பொத்தியார் என்ற புலவரும் நண்பராக இருந்தார். அவரும் அரசனுடன் உயிர் துறக்க முடிவு செய்து உடன் வந்தார். ஆனால் அந்நேரத்தில் புலவரின் மனைவி கருவுற்றிருந்தாள். ஆகையால் `அவளுக்கு துணையாக இருந்து குழந்தைப் பிறந்த பிறகு வாருங்கள்' என்று அரசன் அறிவுரைக் கூறி அனுப்பி விட்டான்.

அதன்படியே பொத்தியாரும் குழந்தைப் பிறந்த பிறகு, அரசன் உயிர் நீத்த அதே ஆற்றங்கரைக்கு வந்து வடக்கிருந்து உயிர் துறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நட்பு உயிரையும் கொடுக்கும் என்பதற்கு இக்கதையே சான்று.

# 13. கணைக்கால் இரும்பொறை

தொண்டியை தலைநகராகக் கொண்டு ஆண்டவன். பெரும்படையோடும் புகழோடும் விளங்கியவன். பொறையர் குடி மன்னர்களில் கடைசி அரசன். கணைய மரம் போல் வலிமை மிக்க கால்ளை உடையவன் என்பதாலோ, கணைகள்(அம்பு)தாக்கி விழுப்புண்களை தழும்புகளாகக் கொண்டிருந்ததாலோ இப்பெயர் வந்திருக்க வேண்டும் என்று வரலாற்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

தனக்கு அடங்க மறுத்த மூவன் என்பவனுடைய பல்லைப் பிடுங்கி தொண்டிப் பட்டினத்தின் கோட்டைக் கதவில் பதித்தவன் கணைக்கால் இரும்பொறை. இவன் கொங்கு சேர அரசன் என்றும் அழைக்கப்படுகிறான்.



மீது சோழ நாட்டின் செங்கணான் என்பவன் போர்தொடுத்தான். போர் திருப்போர்புறம் என்னும் ஊரில் நடந்தது. போரில் கணைக்கால் இரும்பொறை தோல்வி அடைந்தான். சோழ அரசனால் சிறை பிடிக்கப்பட்டு குடவாயில்(குடவாசல்) கோயிலில் கொண்டுபோய் அடைக்கப்பட்டான்.

கணைக்கால் இரும்பொறைக்கு நாக்கு வறண்டு போனது. ஆகையால் சிறைக்காவலர்களிடம் குடிப்பதற்கு தண்ணீர் கேட்டான்.

காவலர்கள் எதிரி நாட்டு மன்னன் தானே என்று ஏளனமாக நினைத்தனர். உடனே நீர் தராமல் தாமதமாகக் கொண்டுப் போய் கொடுத்தனர்.

தாமதமாகக் கொடுத்த தண்ணீரை மானம் கருதி வாங்க மறுத்தான் கணைக்கால் இரும்பொறை. தாமதமாக தரப்பட்ட தண்ணீர் தனக்குத் தேவை இல்லை என்று கருதினான் கணைக்கால். தன் வீரத்துக்கும் மானத்துக்கும் இழுக்கு நேர்ந்ததாகக் கருதி உயிர் வாழ்வதை விட இறப்பதே மேல் என்று கருதிய கணைக்கால் உணவு, நீர் எதுவும் அருந்தாமல் சிறையிலேயே உயிர்த் துறந்தான்.

கணைக்கால் இரும்பொறை பாட்டு எழுதும் வல்லமை பெற்றவன்.

` குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்

'ஆள் அன்று' என்று வாளின் தப்பார்...' என்னும் புறநானூற்றுப் பாடல்(74) இவன் பாடியதே.

Knox e_Library

Click Here
Join Now

# 14. திருமுடிக்காரி

திருக்கோயிலூரை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவன் திருமுடிக்காரி.கடை ஏழு வள்ளல்களில் ஒருவனாகப் போற்றப்படுபவன்.

ஈகையிலும், வீரத்திலும் சிறந்துவிளங்கியவன். சான்றோர் பலரால் பாராட்டுப் பெற்றவன். காரி என்ற வலிமையான குதிரை ஒன்றை வைத்திருந்தவன். சேர, சோழ, பாண்டியர்க்கு உற்றத் தோழனாய் விளங்கியவன்.

ஒரு முறை கபிலர் என்னும் பெரும் புலவர் காரியை காணச் சென்றார். அவன் தனக்கென்று எதுவும் வைத்துக்கொள்ளாமல் தினமும் வரும் புலவர்களுக்கு வாரி வழங்கிய காரி, கபிலருக்கு மட்டும் எதுவும் தராமல் காலத்தைக் கடத்தினான். இதனால் கோபம் கொண்ட புலவர்`தகுதி அறிந்து வழங்காத காரியின்செயல் எனக்கு மட்டும் இழிவன்று. பெரும் புலவர் அனைவருக்குமே இழிவான செயலாகும். மனத்தில் விருப்பம் இல்லை என்று கூறாமல் ஈகை செய்யலாம். உன்னிடம் விருப்பம் உள்ளது. ஆனால் தகுதி அறியும் தன்மை இல்லை.... எல்லோரையும் ஒரே மாதிரியாக எண்ணும் மனோ பாவத்தை மாற்றிக் கொள்..' என்று கோபத்தோடு கூறினார்.



காரி கபிலரின் பெருமையை உணர்ந்து அவரது கோபம் தணியும் வகையில் சிறப்புகள் பல செய்தான்.

இவனது முள்ளூர் மலையை பகை வேந்தர்கள் முற்றுகையிட, அவர்களுடன் போரிட்டு வெற்றி வாகை சூடினான் காரி.

காரி சேர அரசன் பேருஞ்சேரல் இரும்பொறையுடன் சேர்ந்து கொண்டு, கொல்லி மலையை அரசாண்ட ஓரியை கொலை புரிந்தான். வெற்றி உலா வந்த காரியை கொல்லி மலை மக்கள் கோபத்துடன் பழித்து கூறினர்.

தன் நண்பன் கொலை செய்யப்பட்டது அறிந்து கோபம் கொண்ட தகடூரை ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சி, காரி மீது தீராத கோபம் கொண்டு படை எடுத்துச் சென்று காரியின் படைகளை சிதறி ஓடச் செய்தான்.

உயிருக்கு பயந்து சேர அரசன் பெருஞ்சேரலிடம் மறுபடியும் தஞ்சம் புகுந்தான் காரி. சிறிது காலம் அவனுடனே இருந்து பெரும் படையுடன் அதியமான் மீது மீண்டும் படையெடுத்து வந்து தன்நாட்டை கைப்பற்றியதோடு, அதியமானையும் போரில் கொன்று விட்டான்.

இவ்வரசன் சேரர்க்கும், சோழர்க்கும் மாறி, நிலையின்றி ஆதரவு தெரிவித்ததால் கோபம் கொண்ட சோழ அரசன் கிள்ளி வளவன் கோபம் கொண்டு அவனது இரு குமாரர்களையும் தேர் ஏற்றி கொல்ல முற்பட்டான்.

இதனை அறிந்த புலவர் கோவூர்கிழார் குழந்தைகளின் கள்ளம் கபடமற்ற தன்மையை விளக்கி, அவர்களை அரசனிடமிருந்து காப்பாற்றினார். அவர்கள்தான் பின்னாளில் வளர்ந்து பாரியின் மகள்களை திருமணம் புரிந்தனர்.

# 15. பாரி வள்ளல்

கடையேழு வள்ளல்களில் முதலாவதாக திகழ்பவன். பரம்பு மலையை தலைநகராகக் கொண்டு வாழ்ந்தவன். முன்னூறு ஊர்களுக்கு தலைவன். பாரியின் பரம்பு செல்வ செழிப்பு மிக்கது. உழவர் உழாமலேயே மூங்கில் நெல்லும், பலாப்பழம், வள்ளிக் கிழங்கும், தேனும் பாலும் கிடைத்தன.வரகு, தினை, எள், அவரை முதலிய பயிர்கள் மழைக்கு தானாக வளரும் ஊராக இருந்தது பாரியின் பரம்பு மலை.

இம்மலை இப்போதுள்ள திருக்கோயிலூருக்கு அருகில் இருந்தது என்று ஒரு சாராரும், சிவகங்கைக்கு அருகில் இருந்தது என்று மற்றொரு சாராரும் கருத்து தெரிவிக்கின்றனர். ஆனால் கபிலர் பெண்ணை ஆற்றங்கரையில் உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்ததால் தென்னாற்காடு பக்கத்தில் பரம்பு இருந்திருக்க வேண்டும் என்ற கருத்தும் நிலவுகிறது.



ஒரு முறை பாரி  காட்டுப் பாதையில் தேரில் சென்று கொண்டிருந்தான். வழியில் முல்லைக் கொடி ஒன்று பூத்து காற்றில் அசைந்து ஆடிக்கொண்டிருந்தது. படர்வதற்கு மரமோ, கொம்போ இன்றி அது அசைவதைக் கண்ட பாரி , தான் பயணம் செய்த தேரையே அதன்

அருகில் நிறுத்தி, கொடியை எடுத்து அதன் மீது படர விட்டு அரண்மனைக்கு நடந்தே சென்றான்.

பாரியின் உயிர் நண்பராக விளங்கியவர் கபிலர். இவரால் பழக்கப்பட்ட சில பறவைகள்(கிளிகள்) வெகுதூரம் பறந்து சென்று நெற்கதிர்களை கொய்து வந்து கோட்டைக்குள் போடும் வல்லமை வாய்ந்தவை. இதனால் போர்காலங்களில் கோட்டையை எதிரிகள் முற்றுகையிட்டாலும் ஓரளவு உணவு தட்டுப்பாட்டை நீக்க முடியும். இயற்கை உணவு பல கிடைத்த பாரியின் பரம்பு மலையை மூவேந்தர்கள் பொறாமைக் கொண்டு அடிக்கடி போர்த் தொடுத்த வண்ணம் இருந்தனர். பாரியும் அவர்களை போரில் விரட்டியடித்து வெற்றி வாகை சூடிய வண்ணம் இருந்தான்.

தனித்தனியாகச் சென்றால் பாரியிடம் தோற்று விடுவோம் என்றுணர்ந்த மூவேந்தர்கள் ஒன்று சேர்ந்து பெரும் படையை திரட்டி வந்து ஊருக்கு வெளியே காத்திருந்தனர். பாரிக்கு தன் வலிமை மாற்றான் வலிமை தெரியுமாதலால் மூவேந்தர்களையும் ஒரே நேரத்தில் எதிர்கொள்வது கடினம் என்றுணர்ந்து கோட்டைக்குள் இருந்தபடியே காலத்தைக் கடத்தினான்.

கபிலர் சேர, சோழ, பாண்டியரை நையாண்டி செய்து கவிதை எழுதினார். பாரியிடம் போர் தொடுக்காமல் நீங்கள் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் வந்து பரிசு கேட்டிருந்தால் நாட்டையே தானமாகக் கொடுப்பான் பாரி என்றார். ஆனால் அவ்வரசர்கள் கபிலரின் கவிதையை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. தொடர்ந்து நாட்கணக்கில் மாதக் கணக்கில் முற்றுகை போராட்டம் தொடர்ந்தது. இதனால் கோட்டைக்குள் உணவு தானியமும், நீர் இருப்பும் குறைந்து போயிற்று. பறவைகள் நெல் எடுத்து வருவதையும் அறிந்து, மூவேந்தர்கள் அதை தடுத்து விட்டனர்.

இதனால் கோட்டையிலிருந்து வெளியே வந்த பாரி மூன்று அரசர்களுடனும் போரிட்டு களத்திலேயே வீர மரணம் அடைந்தான். பாரியின் மரணத்துக்குப் பின் தங்களை பரிகாசம் செய்து கவிதை எழுதிய கபிலரை நாடு கடத்தினர். பாரியின் மகளிர் அங்கவை, சங்கவை இருவருடனும் கனத்த இதயத்துடன் கபிலர் நாட்டை விட்டு வெளியேறினார்.

நாட்டை விட்டு வெளியேறிய அவர் பாரிமகளிருக்கு திருமணம் செய்ய பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டார். விச்சிக்கோ என்னும் அரசனிடம் பாரிமகளிரை திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்டார் கபிலர். அவன்

மூவேந்தர்களுக்கு பயந்து மறுத்து விட்டான். அத்துடன் கபிலர் தன்னை மீண்டும் வந்து பார்க்க முடியாதபடி கதவை அடைத்து விட்டான்.

அன்று முதல் விச்சிக்கோவையும் அவன் வழித்தோன்றல்களையும் புலவர்கள் பாட மறுத்தனர். கடைசியில் கபிலர் ஔவையாரிடம் பாரிமகளிரை ஒப்படைக்கும்படி ஒரு பார்ப்பனரின் பாதுகாப்பில் விட்டுவிட்டு, அருகே இருந்த தென்பெண்ணை ஆற்றங்கரையில் இருந்த கல் மீது அமர்ந்து, பாரியை நினைத்துருகி உயிர்த்துறந்தார்.

ஔவையின் முயற்சியால் காரியின் மகன்கள் சோழிய ஏனாதித்திருக்கண்ணன், தேர்வன் மலையன் என்ற அண்ணன் தம்பிகள் இருவரும் பாரிமகளிரை திருமணம் செய்து கொண்டனர்.

# 16. அதியமான் நெடுமான் அஞ்சி

தகடூரை (தருமபுரி)தலைநகராக் கொண்டு அரசாண்ட மன்னர்கள் அதியமான் பரம்பரைகள். இவர்களில் நெடுமிடல் அஞ்சியின் மகன் நெடுமான் அஞ்சி. தமிழ்நாட்டுக்கு கரும்பை கொண்டு வந்தது இவனது பரம்பரையே.

நெடுமான் அவையில் அரசவைப் புலவராக இருந்தார் ஔவையார். ஒரு முறை காட்டில் வேட்டையாடச் சென்ற போது கருநெல்லி மரம் ஒன்று கஞ்சன் மலை உச்சியில் இருப்பதை பார்த்து விட்டான். பூவும், பிஞ்சுமாக இருந்த அந்த மரத்தைச் சுற்றி ஆட்களை அனுப்பி காவலுக்கு போட்டான்.



மழையில் உதிர்ந்தது போக கடைசியில் ஒரே ஒரு நெல்லிக்கனி மட்டுமே அந்த மரத்தில் நின்றது. அதை காவலர்கள் கொண்டு வந்து அரசனிடம் கொடுத்தனர். உடம்பிலுள்ள அனைத்துவிதமான நோய்களை குணப்படுத்தவும் ஆயுளை நீடிக்கக் கூடிய வல்லமையும் அக்கருநெல்லிக்கனிக்கு உண்டு என்பதால் அதியமான் அக்கனியை தான் உண்ணாது ஔவைக்கு கொடுக்க நினைத்தான். ஔவையார் அதை சாப்பிட்டால் நீண்ட நாட்கள் உயிர் வாழ்ந்து நிறை பாடல்கள் எழுதுவார் என நினைத்து அதை ஔவைக்கு உண்ணக் கொடுத்தான்.

முருகனிடம் சுடாத பழம்கேட்ட ஔவையார், இங்கே அரசன் கொடுத்த நெல்லிக்கனியை வாங்கி சாப்பிட்டு விட்டார். அவர் சாப்பிட்டு முடித்த பிறகுதான் அக்கனியின் பலனைப் பற்றிக் கூறினான் அதியமான்.

ஔவையார் அதியமானின் அன்பை நினைத்து நெகிழ்ந்து போற்றினார்.

சேலம் கொல்லி மலையை ஆண்டவன் வல்வில் ஓரி. அதியமானின் நண்பன். இவனை திருக்கோயிலூரை ஆட்சி செய்த காரி போரில் தோற்கடித்து கொன்று விட, ஆத்திரமுற்ற அதியமான், தன் நண்பனைக் கொன்றவனை ஓட...ஓட... விரட்டினான். ஓடிய காரி சேரமன்னன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையிடம் தஞ்சம் புகுந்தான். காரியும் இரும்பொறையும் சேர்ந்து சிறிது காலத்தில் பெரும்படையோடு அதியமானின் நாடு நோக்கி வந்தனர்.

அடிக்கடி நேரும் போரால் மக்கள் இன்னல் பட்டு வந்தனர். இந்நிலையில் மறுபடியும் ஒரு போர் நடப்பதை விரும்பாத அதியமான் அதை தவிர்க்க எண்ணினான். ஆனால் சேரனும், காரியும் தொடர்ந்து முற்றுகையிட்டபடி இருக்கவே போர்களம் நோக்கிப் போனான் அதியமான். போரில் காயம் பட்ட அதியமான் அக்காயத்துக்கு மறந்திடாமல், மானம் கருதி மனம் வருந்தி உயிர் நீத்தான்...மென்மையும், கருணையுள்ளமும் கொண்ட அதியமான்.

அதியமானின் பிரிவை எண்ணி ஔவையார் கையறுநிலை பாடல்கள் பல எழுதினார்.

அதியமானின் மகன் பொகுட்டெழினி. தந்தைக்காக குதிரை மலை என்னும் பகுதியை ஆண்டுக்கொண்டிருந்தான். தந்தையின் நாடு பகை சூழ்ந்தது கண்டு ஓடோடி வந்தான். சேரனும், காரியும் பெரும் படையோடு நிற்கிறார்கள்...நீ அங்கே போகாதே என்று புலவர்கள் சிலர் எடுத்துக் கூறியும் பொகுட்டெழினி கேட்கவில்லை. வெற்றியும்,தோல்வியும்

வீரர்க்கு சமமே என கருதி போருக்குச் சென்றான். அவனும் நாட்டுக்காக போரில் உயிர் நீத்தான்.

# 17. ஒல்லையூர் பூதப்பாண்டியன்

மதுரையை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர்கள் பாண்டிய மன்னர்கள். இவர்கள் பரிதி, இளம்வழுதி, மாறன், பாண்டியன் என்கிற குடிபெயர்களில் அழைக்கப்பட்டனர்.

இந்த பூதப் பாண்டியன் பேரழகும் பெரும்புலமையும் வாய்ந்தவன். பெருங்கோப்பெண்டு என்னும் அரசியை மனைவியாகப் பெற்றவன். மாபெரும் வீரன். மாவன், ஆந்தை, அந்துவன் சாத்தன், ஆதவன் அழிசி போன்றவர்களை உயிர்த்தோழரகளாகக் கொண்டவன்.



இவனுக்கும் சேர,சோழ மன்னர்கள் சிலருக்கும் பகைமை உண்டாயிற்று. போரில் அவ்விருவரும் ஒன்று சேர்ந்து கொண்டு இவன் மீது படையெடுத்து வந்தனவர்.

அவர்கள் மீது வஞ்சினம் கூறி போருக்குச் சென்ற பூதப்பாண்டியனை சேரனும்,சோழனும் சேர்ந்து கொன்று விட்டனர். அவனது உடலை சுற்றத்தார் எடுத்துச் சென்று தீ மூட்ட, அவனது மனைவியும் புலமையும் வாய்ந்தவளுமான பெருஞ்கோப்பெண்டு தானும் தீயிடைப் புகுந்து உயிர் மாய்த்துக்கொள்ளப்போனாள்.

புலமை வாய்ந்த அவளை இழக்க மனமில்லாத தமிழ்ச்சான்றோர் பலர் அவளை தீயில் விழாமல் பிடித்துக்கொண்டனர். அதுகண்ட பெருங்கோப்பெண்டு,

`பல்சான்றீரே...பல்சான்றீரே..

செல்க என சொல்லாது ஒழிக என விலக்கும்

பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே...'

என நீளும் பாடலில், சான்றோர்களே... உன் தலைவனோட நீயும் மடிந்து செல் எனக் கூறாது அதனை தடுக்கும் விதமாக சூழ்ச்சி செய்யும் சான்றோரே, என் கணவன் இறந்த பிறகு தாமரைகள் பூத்துள்ள குளிர்ந்த நீர்ப் பொய்கையும், சுடுகின்ற தீயும் எனக்கு ஒன்றுதான் என்ற கூறி தீயில் பாய்ந்து உயிர்நீத்தாள்.

பல போரினால் தமிழ் சமுதாயம் பாடல் எழுதும் மன்னர்களையும் இழந்திருப்பது தமிழுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பன்றி வேறென்ன சொல்ல?

# 18. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

பாண்டிய மன்னன் பசும்பூண்பாண்டியனின் மகனாக கருதப்படுபவன். நீதி தவறாத அரசன். தமிழ்ப்புலமைப் பெற்றவன். ஆசிரியர்களைப் பெரிதும் போற்றி, பேருதவி செய்தவன். கல்வியின் மேன்மை உணர்ந்தவன்.

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த கோவலன் மனைவி கண்ணகியிடம் கருத்து வேறுபாடு கொண்டு ஆடல் மங்கை மாதவியிடம் பொருட்கள் அனைத்தையும் இழந்து கடைசியில் மனைவியிடம் வருகிறான். தன் காற்சிலம்பை கழற்றி விற்று வாணிபம் செய்யும்படி கண்ணகி கூறுகிறாள். அதன்படி தன்னுடைய காற்சிலம்பில் ஒன்றை கணவனிடம் தருகிறாள்.



இருவரும் மதுரை நோக்கி செல்கின்றனர். கண்ணகியை புறநகரில் விட்டு விட்டு கோவலன் மட்டும் மதுரை நகருக்குள் செல்கிறான். அங்கே காற்சிலம்பை விற்க முற்படும்போது அரண்மனைக் காவலனால் சிறைபிடிக்கப்படுகிறான்.

பாண்டிய அரசியின் காற்சிலம்பு ஒன்று திருடு போய்விட்டது என்றும் அத்திருடன் கோவலன்தான் என்றும் அவன் பழி சுமத்துகிறான். கோவலன் தான் நிரபராதி என்று நிருபிக்க வாய்ப்பு தராமலேயே ஆராயாமல் அரண்மனையில் திருடியவன் என்று குற்றம் சுமத்தப்பட்டு கொலை செய்யப்படுகிறான்.

சிலம்பு விற்கச் சென்ற கணவன் கொலையுண்ட செய்தி மனைவி கண்ணகியை எட்டுகிறது.அவள் ஒற்றை காற்சிலம்புடன் அரண்மனைக்குள் புகுந்து தன் கணவன் கள்வன் அல்ல என்கிறாள். அதற்கு ஆதாரமாக தன்னிடமிருந்த காற்சிலம்பை உடைத்து அதனுள் இருக்கும் மாணிக்கப் பரல்களை மன்னனிடம் காட்டுகிறாள். களவு போன ராணியின் காற்சிலம்பில் முத்துப் பரல்கள் இருந்தன.

இதை அறிந்த நெடுஞ்செழியன் அரண்மனைக் காவலர்களின் பேச்சை நம்பி ஆராயாமல் நீதி வழங்கியது கண்டு உள்ளம் வருந்தினான். அநியாயமாக ஓர் உயிரைக் கொன்று விட்டோமே என்று துடித்தவன், அரியணையிலிருந்து மயங்கி கீழே விழுந்து இறந்து போனான். கணவன் இறந்தது கண்டு அவன் மனைவியும் அதிர்ச்சியில் உயிர்துறந்தாள்.

இவ்விருவரின் இறப்புக்குப் பின், இவர்களது மகன் சித்திரமாடத்து துஞ்சிய நன்மாறன் ஆட்சிக்கு வந்தான். கரிகாலன், சேரன்செங்குட்டுவனைப் போன்று இந்த நன்மாறனும் இளவயதிலேயே அரியணை ஏறியவன் என்பது குறிப்பிடத்தக்கது.

இவன் காலத்தில் பாண்டிய நாடு மழையின்றி வளம் குன்றி காணப்பட்டது. கோவலன் இறக்க காரணமாக இருந்தவன் பொற்கொல்லன். அதனால் தன் தாய் தந்தையர் இறந்தனர் என கருதிய நன்மாறனின் கோபம் பொற்கொல்லர் பக்கம் திரும்பியது. ஆகையால் பல பொற்கொல்லரை இவன் பலியிட்டதாகவும் கூறப்படுகிறது. அதனால் கண்ணகி சாபம் தணிந்து நாடு வளம்பெற தொடங்கியதாகவும் கூறப்படுகிறது.

# 19. திருமலை நாயக்கர்

மதுரை நகரை அழகுப் படுத்தி கலை நகராக்கியவர். மதுரையை ஆண்ட நாயக்கர் பரம்பரையின் ஐந்தாவது மன்னர். முத்து கிருஷ்ணப்ப நாயக்கரின் இரண்டாவது மகன்.

திருமலை நாயினு அய்யுலுகாரு, இதுதான் திருமலை நாயக்கரின் முழுபெயர். தனது முப்பத்தொன்பதாவது வயதில் மன்னரானார் நாயக்கர்.

திருமலை நாயக்கரின் காலத்தில் மதுரை, திண்டுகல், திருநெல்வேலி, திருவனந்தபுரத்தின் ஒரு பகுதி, இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர்... ஆகிய பகுதிகளைக் கொண்ட பெரிய நாடாக இருந்தது.

https://t.me/Knox_e_Library



திருமலை நாயக்கரின்காலத்தில் திருச்சிராப்பள்ளி தலைநகராக இருந்தது. அப்போது அவர் தீராத மண்டை சளி நோயால் அவதிபட்டு வந்தார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் திருவிழாவில் கலந்து கொள்ள திருமலை நாயக்கர் புறப்பட்டபோது நோய் அதிகமாகி தொல்லை கொடுத்தது. அதனால் நாயக்கர் பயணத்தை தொடராமல் திண்டுகல்லில் இரவு தங்கினார்.

அன்றிரவு சிவபெருமான் சித்தர் வடிவில் கனவில் வந்து, திருச்சியிலிருந்து தலைநகரை மதுரைக்கு மாற்றி அங்கையர்க்கண்ணிக்கும், சொக்கநாத பெருமானுக்கும் வழிபாடு, திருவிழா முதலியன செய்துவந்தால் நோய் தீரும் என திருநீற்றை வாயில் போட்டு விட்டு மறைய, கி.பி.1934-இல் தலைநகரை மதுரைக்கு மாற்றினார். அதுமுதல் அவர் நோய் நீங்கியதாகக் கூறப்படுகிறது.

கி.பி.1659-இல் திருமலைநாயக்கருக்கும், மைசூர் மன்னன் கந்திருவ நரசராஜாவுக்கும் மூக்கறுப்பு போர் நடந்தது. அதாவது மைசூர் மன்னன் போரில் சிறைபிடித்தவரின் மூக்குகளை அறுக்குமாறு கட்டளையிட்டிருந்தான்.

ஆனால் வீரர்களோ தங்கள் கையில் கிடைத்த ஆண், பெண்,குழந்தைகளின் மூக்குகளைஅறுத்து கோணிப் பைகளில் நிரப்பி வெற்றிச் சின்னங்காளாக மைசூருக்கு அனுப்பி வைத்தார்கள். சேலம் மாவட்டத்தையும் பிடித்துக் கொண்டார்கள். ஊரில் நுழைந்து கொள்ளை அடித்ததோடு தீயிட்டும் கொழுத்தினர். மக்களை துன்புறுத்தினர்.

இப்போர் நடந்தபோது திருமலை நாயக்கர் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் கிடந்தார். ஆகையால் பக்கத்து நாடான இராமநாதபுரம் மன்னன் இரகுநாதசேதுபதிக்கு மடல் எழுதினார். அவரும் 35,000 வீரர்களை மைசூர்படையை எதிர்க்க அனுப்பி வைத்தார். பெரும் சண்டை மூண்டது. போரில்24,000 க்கும் மேற்பட்டோர் இருதரப்பிலும் இறந்தனர். மைசூர் படைகள் தன் நாட்டை நோக்கி ஓடியது.

இதனால் மகிழ்ந்துபோன திருமலைநாயக்கர் தன் நாட்டின் திருச்சூழியல், பள்ளிமடம், திருப்பூவனம் முதலிய ஊர்களை இரகுநாதசேதுபதிக்கு பரிசாகக்கொடுத்தார். மேலும் இரகுநாதசேதுபதி மதுரைக்கு கட்டவேண்டிய கப்பமும் இனி கட்டவேண்டியதில்லை என்றார்.

மைசூர் வீரர்கள் மூக்கறுத்து சென்றதால் நாட்டில் பலபேர் மூக்கின்றி திரியும் கொடுமையைக் கண்ட திருமலைநாயக்கர் தன் தம்பி முத்தியாலு நாயக்கர் என்ற குமார முத்து நாயக்கரை மைசூருக்கு படையுடன் அனுப்பி, அங்கு அகப்பட்ட முதியவர், பெண்கள், குழந்தைகள் என

மூக்கறுத்துக்கொண்டே போனார்கள். மைசூர் மன்னனையும் சிறைபடுத்தி அவனது மூக்கையும் அறுத்தார்கள். அப்போது திருமலைநாயக்கருக்கு வயது எழுபத்தைந்து.

திருமலைக்கு மொத்தம் இருநூறு மனைவிகள் என்று சொல்லப்படுகிறது. அத்துடன் நாயக்கரின் மரணம் குறித்தும் பல்வேறு தகவல்கள் சொல்லப்படுகின்றன. இவர் கோயில் பூசாரி மனைவியோடு தொடர்பு கொண்டிருந்தார். அப்படி போய் வரும்போது கிணற்றில் தவறி விழுந்து இறந்து விட்டார் என்று ஒரு செய்தியும், பூசாரியின் ஆட்கள் நாயக்கரை கோயிலுக்கு வரவழைத்து அங்கே கோயிலில் இருந்த நிலவறையில் அவரை அடைத்து வைத்து வெளிவராதபடி பெரிய கல்லொன்றை முகப்பில் வைத்து மூடி விட்டு`திருமலைநாயக்கர் மீனாட்சியம்மன் பொற்பாதங்களில் ஒன்றுபட்டுவிட்டார் 'என்று மற்றொரு தகவலும், முதிர்ந்த வயதில் இயற்கையாக மரணமடைந்தார் என்று வேறொரு கருத்தும் நிலவுகிறது. திருமலை நாயக்கர் 1662-இல் இறந்து போனார். எப்படி இறந்தார் என்பதில் மட்டும் தெளிவில்லை.

# 20. கிழவன் சேதுபதி

## *ஆட்சிக் காலம்: கி.பி. 1671 முதல் 1710 வரை*

கிழவன் இரகுநாத சேதுபதி இராமநாதபுரத்தை ஆட்சி செய்த மன்னர்களில் முக்கியமானவர். கிழவன் என்பதற்கு, 'உரிமை கொண்டவன்' என்பது பொருள். கிழவன் சேதுபதி காலத்தில் திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்தவர் சொக்கநாத நாயக்கர். (பின்னர் தலைநகரை மதுரைக்கு மாற்றினார்) சொக்கநாதர் மனநலம் சரியில்லை என்று கூறி, அவரின் உறவுகள் சொக்கநாதரை சிறைவைத்து விட்டனர். சொக்கநாதரின் தம்பி அலகாத்திரியை நாட்டின் மன்னராக்கினர்.

சொக்கநாத நாயக்கரை விடுவிக்க அரண்மனைக்குள் நுழைந்த முகமதியப் படைத்தலைவர் ருஸ்தும்கான், சொக்கநாதரை விடுவித்தார். அதோடு, அவரைப் பொம்மை மன்னராக்கி, தானே நாட்டை நிர்வாகம் செய்யத் தொடங்கினார். இத்தகவலை அறிந்த கிழவன் சேதுபதி, பெரும்படையுடன் சென்று, சொக்கநாதரை விடுதலை செய்தார். ருஸ்தும்கானை விரட்டியடித்தார்.

சேதுபதியின் வீரத்துக்கு மதிப்பளித்து, ஏராளமான பொன்னும் பொருளும் அளித்தார் சொக்கநாதர். ஆனால், அதன்பிறகு இரகுநாத சேதுபதி தனக்குக் கட்டுப்படவில்லை என்றுகூறி சொக்கநாதர், சேதுபதியைத் தாக்க பெரும்படையை அனுப்பினார். கிழவன் சேதுபதி தஞ்சை மன்னர் ஷாஜி உதவியுடன், சொக்கநாதரின் படைகளை விரட்டியடித்து, தன் நாட்டின் பகுதிகளைப் பாதுகாத்துக் கொண்டார். சொக்கநாதர் இறந்த பின்னும் இராணி மங்கம்மாள் சேதுபதி மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு படையை அனுப்பினார். அந்தப் போரில் மங்கம்மாளின் படைத்தளபதி நரசய்யாவைக் கொன்று, சேதுபதியே வென்றார்.

தன் முன்னோர் அமைத்த மண் கோட்டையையும், அரண்மனையையும் அகற்றிவிட்டு, புதிய கற்கோட்டை, அரண்மனையை உருவாக்கியவர் இரகுநாத சேதுபதி.

சேதுபதி, இரகுநாத சத்திரம் என்ற ஊரை உருவாக்கினார். தன் பெயரில் நாணயங்களை வெளியிட்டார். இராமேஸ்வரம் செல்லும் பக்தர்களுக்காக தோணித் துறையில் சத்திரம் கட்டிக் கொடுத்தார். டச்சுக்காரர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு கடல்வழி வணிகத்தை மேம்படுத்தினார்.

# 21. விஜயரங்க சொக்கநாதன்

மதுரையை ஆட்சி செய்த ராணி மங்கம்மாளின் பேரன். மங்கம்மாவின் மகன் முத்து வீரப்பனின் மகன். அவள் இறப்புக்குப் பின் 1706-இல் ஆட்சிக்கு வந்தான் விஜயரங்க சொக்கநாதன். தெய்வ பக்தி மிகுந்தவன். ஆகையால் நாட்டு மக்களின் நலனை விட கோயில் கோயிலாக சாதி தரிசனம் செய்ய வேண்டி யாத்திரை போனதே அதிகம். மடங்களுக்கு பொன்னையும், பொருளையும் வாரி வழங்கினார்.

மன்னரின் பக்தியை அமைச்சர் நரவப்பய்யாவும், வேங்கடராகவாச்சாரியாவும் அரசரின் பொறுப்பின்மையை சாதகமாகப் பயன்படுத்தி செல்வத்தை கொள்ளையடித்தனர். மன்னர் வழங்கிய சலுகைகளை எல்லாம் மறைத்து மக்கள் மீது வரிகளாக திணித்தனர்.



**1710-**முதல் **1720** வரை மதுரையில் கடும் பஞ்சம் நிலவியது. மக்கள் கடும் துன்பத்துக்கு ஆளானார்கள். சேலத்தையும், கோயமுத்தூரையும் மைசூர் மன்னன் கைப்பற்றிக்கொண்டான்.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை விஜயரங்க சொக்கநாதன் தன் பரிவாரங்களுடன் திருவரங்கம் திருவானைக்காவல், திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம் என தல யாத்திரைப் போனார். போகும் ஊர்களில் எல்லாம் கோயில்களுக்கு பொன்னும் பொருளும் வாரி கொடுத்தார்.

கோயில் ஊழியர்கள் முன்பு சாமிக்குக் கொடுத்த ஆடை, அணிகலன்கள் எல்லாம் காணாமல் போயிட்டன என்று கோயில் நிர்வாகிகள் கூறியபோதும்`எப்படி களவு போனது' என்று கூட கேட்காமல் மீண்டும் அணிகலன்களையும், ஆடைகளையும் அள்ளிக் கொடுத்தான் விஜயரங்க சொக்க நாதன். துறவியாக இருக்க வேண்டியவர் அரசராக இருந்தார். நல்லவராக இருந்தவர் நாட்டை ஆட்சி செய்வதில் வல்லவராக இல்லை.

நாடு அழிவுப் பாதையில் போவதைக் கூட கவனிக்காமல் சதாகாலமும் சாமி கும்பிடுவதிலேயே இருந்த விஜயரங்க சொக்கநாதர் 1732-இல் இவ்வுலக வாழ்வை விட்டு மறைந்தார்.

# 22. மீனாட்சி அரசி

விஜயரங்க சொக்கநாதரின் மனைவி மீனாட்சி. இவ்விருவருக்கும் வாரிசு இல்லாத காரணத்தால் விஜயரங்கன் இறந்த பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாள்.

மீனாட்சிக்கு உலக அனுபவம் இல்லை. சூழ்ச்சிகள் நிறைந்த அக்கால அரசியல் வாழ்வை அவளால் புரிந்து கொள்ள முடியாமல் போனது. மதுரை நாட்டுக்கே ராணியான பிறகும் சூழ்நிலை அவளை அலைகழித்தது மீனாட்சியின் உடன் பிறந்த சகோதரன் வெங்கட பெருமாள் அவளுக்கு ஆட்சியில் உதவிபுரியலானன்.

தத்தெடுத்த விஜயகுமாரனின் தந்தை பங்காரு திருமலை அரசியை வீழ்த்திவிட்டு மன்னனாகும் ஆசை மனதில் புகுந்து ஆட்டிப் படைத்தது. அதற்கு தளவாய் வேங்கடாச்சாரியும் துணை நின்றான். கூட இருப்பவர்களே குழி தோண்டுவது அரசிக்கு தெரியாமல்போனது. முதலில் சூழ்ச்சியால் அரசியை வீழ்த்த முயற்சி செய்தனர். அது முடியாமல் போகவே நாட்டில் கலகத்தை உண்டு பண்ணினார்.



ஆற்காடு நவாப் மதுரையில் நடைபெறும் கலகத்தை புரிந்து கொண்டு பெரும்படை ஒன்றை தன் மகன் சப்தர் அலிகான் மருமகன் சந்தா சாகிப்புடன் திருச்சிக்கு பங்காரு அனுப்பினான். திருமலை 30 லட்சம்

தருவதாகவும் திருச்சியை தனக்கு பிடித்துக் கொடுக்கும்படியும் கேட்டான். அதன்படி திருச்சி கோட்டையை நவாப் படைகள் தாக்கின. ஆனால் மீனாட்சி கோட்டையில் பாதுகாப்பை அதிகரித்து இருந்ததால் அம்முயற்சி தோல்வியடைந்தது.

ஆனால் அதன் பிறகு சப்தர் அலிகான் சும்மா இருக்கவில்லை. மீனாட்சியையும் பாங்காரு திருமலையையும் பேச்சு வார்த்தைக்கு அழைத்தான். மீனாட்சி போகவில்லை ஆகையால் கோபமுற்ற நவாப் திருச்சியை பிடித்து பங்காருவுக்கு தருவதாகவும் அவனிடம் முப்பது இலட்சம் வாங்கி வரும்படியும் சாகிப்பிடம் கூறி படையை திருச்சிக்கு அனுப்பினான்.

விஷயம் கேள்விப்பட்ட மீனாட்சி ஒரு கோடி ரூபாய் தருவதாகவும் பங்காருவுடன் செய்த உடன்படிக்கையை கைவிடுமாறும் கோரினாள். அவனும் திருக்குரான் மீது சத்தியம் செய்தான். மீனாட்சி அவனை நம்பி கோட்டைக்குள் அனுமதித்தாள்.

கோட்டையின் பலம், பலவீனத்தை கண்டுகொண்டான் நவாப்பின் மருமகன் மீனாட்சியையும் சாட்சிகாரன் காலில் விழுவதை விட சண்டைகாரன் காலில் விழுவதே மேல் என கருதி பங்காரு திருமலையோடு உடன்படிக்கை ஒன்றும் செய்துகொள்ள, இனிமேல் இவ்விருவரையும் மோதவிட முடியாது என்று உணர்ந்தான். அதற்காக சூழ்ச்சி ஒன்றையும் செய்தான்.

**1736** -இல் திருச்சிக்கு மீனாட்சியை வரவழைத்த சந்தா சாகிப், அங்கே அரசியை சிறை வைத்தான். நான் மதுரையை ஒரு கோடி ரூபாய்க்கு வாங்க வரவில்லை. ஆட்சி செய்யவே வந்தேன்...!என்று கூற மீனாட்சிக்கு நவாப்பின் வஞ்சனை புரிந்தது. தன்னை காப்பாற்றிக் கொள்ளும் வழி தெரியாமல் திகைத்தாள்.

வஞ்சகர்களால் கொலையுண்டு இறப்பதைவிட தானே நஞ்சுண்டு இறப்பது மேல் என்றெண்ணி விஷம் குடித்து இறந்து போனாள். பங்காரு திருமலையும் சிவகங்கைக்கு ஓடிவிட்டான். தத்துபிள்ளையின் தகப்பனாலும், ஆற்காடு நவாப்பின் சூழ்ச்சியாலும் மீனாட்சி அரசியின் மரணத்தோடு மதுரை நாயக்க மன்னர்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

# 23. ராணி துர்காவதி

மத்தியப் பிரதேசம் பழங்காலத்தில் கோண்ட்வானா என்று அழைக்கப்பட்டது. ரஜபுத்திர மன்னர்கள் அப்பகுதியை ஆட்சி செய்து வந்தனர். 1556ஆம் ஆண்டு ராணி துர்காவதி என்பவர் ஆட்சி செய்து வந்தார். துர்காவதி சண்டேள இனத்தில் பிறந்தவள்.

வீரத்தின் விளைநிலமாக விளங்கிய ராணி துர்காவதி வாள் வீச்சு, கத்திச்சண்டை, குதிரை ஏற்றம் போன்றவற்றோடு காட்டிற்குச் சென்று புலிகளை வேட்டையாடுவது ராணிக்கு மிகவும் படித்தமான பொழுதுபோக்குகளில் ஒன்றாக இருந்தது.



கோட்வானா பகுதியை சங்கிரமஷா என்பவர் ஆட்சி செய்து வந்தார். அவரது மகன் தலபத்ஷா. வீரத்தில் சிறந்து விளங்கிய தலபத்ஷா ராணி துர்காவதியை விரும்பினான். ஆனால் துர்காவதியின் தந்தை மகோபா

மன்னர் தன்னைவிட குலம் தாழ்ந்த தலபத்ஷாவுக்கு பெண் தர மறுத்தார். இதனால் தலபத்ஷா கோபம் கொண்டான்.

இந்நிலையில்துர்கா தன்னை விரும்புவதை ஒற்றர் மூலம் அறிந்த தலபத்ஷா பெரும்படையுடன் ராணிதுர்காவதியின் தந்தை நாடான மகோப நாட்டின் மீது பெரும்படையுடன் போர் எடுத்துச் சென்றான். கடுமையான போருக்குப் பின் வெற்றி வாகை சூடிய தலபத்ஷா துர்காவை அழைத்துக் கொண்டு தன் நாட்டிற்குத் திரும்பினான்.

துர்காவை திருமணம் செய்து கொண்டு மகிழ்வோடு நாட்டை ஆண்டு வந்தான் தலபத்ஷா. கணவருக்கு ஆலோசகராகவும் ஆட்சிக்கு துணையாகவும் நின்றாள் துர்காவதி. இவர்களின் அன்புக்கு அடையாளமாக ஓர் ஆண் மகவு பிறந்தது. அதற்கு பீர்நாராயணன் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

மூன்று ஆண்டுகள் துர்காவதியின் மகிழ்வான வாழ்க்கை ஓடிய நிலையில், திடீரென தலபத்ஷா ஒரு நாள் இறந்து போனான். காதலோடு ஓடி வந்துகைப் பிடித்த கணவன் கண்ணிமைக்கும் நேரத்தில் காற்றோடு கரைந்து போக, துர்காவதி கண்கலங்கி நின்றாள். கணவன் அவள் கற்ற வீரம் அவளுக்கு கைக்கொடுத்தது.

குதிரைப்போர், வாட்போர், துப்பாக்கிச் சுடுதல், யானை ஏற்றம் என அனைத்திலும் தேர்ச்சிப் பெற்ற துர்காவதிதன் மகன் பீர்நாராயணனுக்கு பட்டம் சூட்டி அவன் சார்பில் நாட்டை ஆளும்பொறுப்பை ஏற்றாள்.

கணவரை விட திறமையிலும் நிர்வாகத்திலும் சிறந்து விளங்கினாள் ராணி. அதனால் ராணியின் புகழ் பக்கத்து நாடுகளுக்கெல்லாம் பரவியது. இரவு பகல் பாராமல் நாட்டு நலனையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு ஆட்சி செய்து வந்தாள்.

ராணி இடம் இருபதாயிரம் குதிரைப்படை வீரர்களும், ஆயிரக்கணக்கில் யானைப்படை, பல்லாயிரக்கணக்கில் காலாட்படையும் இருந்தன.

ராணி போர்களத்தில் புலியாக பாயக்கூடியவள். இவளின் வாள் சுழற்சிக்கு பயந்து பல வடநாட்டு மன்னர்கள் தானாக முன் வந்து கப்பம் கட்ட ஆரம்பித்தனர்.பஸ்பகதூர்ஷா என்ற மால்வா மன்னரை ஒரு போரில் நேரடியாக களத்தில்தோற்கடித்து வெற்றி மாலை சூட்டிக்கொண்டாள் துர்காவதி.

துர்காவதியின் புகழ் வடநாடு முழுக்க பரவியது. அப்போது டெல்லியில் முகலாயர் ஆட்சி நடந்துகொண்டிருந்தது. முகலாய மன்னர் அக்பர் இந்தியா முழுவதையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டுவர நினைத்தார். அதற்காக சிறிதும் ஈவு இரக்கமின்றி போர் நெறிமுறைகளை மீறி கொலைவெறியாட்டம் நடத்தி, ஒவ்வொரு நாடாக பிடித்துக்கொண்டு வந்தார் . அவர் துர்காவதியின் புகழை விரும்பவில்லை. தன் படை தளபதி ஆசிப்கான் தலைமையில் 1564-ஆம் ஆண்டு ஒரு பெரும்படையை அனுப்பி வைத்தார்.

துர்காவதி நினைத்திருந்தால் அக்பரின் பெரும்படைக்கு பயந்து கப்பம் கட்டி இறக்கும் வரை ராணியாக உயிர்வாழ்ந்திருக்கலாம். ஆனால் துர்காவதியின் குருதியில் ஊறிக்கிடந்த வீரம் அதற்கு இடம்தரவில்லை. அவள் முகலாயப்படையை எதிர்கொள்ள பெண் புலியாய் புறப்பட்டாள் போர்களத்துக்கு.

போர் களத்தில் புயலாக அம்பு வீசினாள் துர்காவதி. அவள் அம்புக்கு இறையாகி பல வீரர்கள் சிறு குருவி என சுருண்டு விழுந்தனர். இந்நிலையில் குதிரை மீது அமர்ந்து அம்பு எய்து கொண்டிருந்த துர்காவதியை ஆசிப்கான் பார்த்து விட்டான். அவன் ராணியை நோக்கி ஒரு அம்பை எய்த அது ராணியின் இடது தோள் பட்டையில் பாய்ந்தது. ராணி படுகாயமடைந்தாள். இடது கை அடிப்பட்ட நிலையில் ஒரு கையால் அம்மை தொடர்ந்து செலுத்து முடியவில்லை ராணியால். எதிரிகளிடம் சிறைப்பட்டு மானத்தை இழக்க விரும்பவில்லை. கையில் குறுவாள் ஏதுமற்ற நிலையில் யானைப்பாகன் ஒருவனிடமிருந்து அங்குசத்தைப் பிடுங்கிய துர்காவதி அதை தன் வயிற்றுக்குள் செலுத்திக்கொண்டு கி.பி.1605-இல் வீரமரணம் அடைந்தாள்.

ராணியின் மரணத்துக்குப் பின் அவள் குழந்தை இளவரசன் வீர நாராயணனை மைதானத்தில் நடுவே படுக்க வைத்து ஆயிரக்கணக்கான குதிரைகளை இளவரசனின் மீது ஓட விட்டு கொடூரமான முறையில் கொலைச்செயலை அரங்கேற்றினான் அக்பரின் படைதளபதி.

ராணியின் இறப்புக்குப் பின் அவள் நாட்டில் குவிந்து கிடந்த தங்கக்குவியலையும், வைடூரியங்களையும் முகலாயப்படை சூறையாடிச்சென்றது. பின்னர் அந்நாட்டுக்கு ஆசிப்கான் கவர்னராகவும் நியமிக்கப்பட்டான்.

# 24. சித்தூர் ராணி பத்மினி

ராஜஸ்தான் மாநிம் மேவாரில் உள்ள தலை சிறந்த கோட்டைகளில் ஒன்று சித்தூர் கட் எனப்படும் சித்தூர்கோட்டை. மலை மீது அமைந்துள்ளதுதான் இக்கோட்டையின் சிறப்பு.

எத்தனையோ ராஜாக்கள் இக்கோட்டையில் இருந்து ஆட்சி செய்திருந்தாலும் இன்றளவும் சித்தூர் என்று சொன்ன உடனேயே நினைவுக்கு வருபவர் ராணி பத்மினிதான்.

கி.பி. 1303 ஆம் ஆண்டு இக்கோட்டையை ராஜா ரத்தன் சிங் என்ற ரஜபுத்திர மன்னன் ஆட்சி செய்து வந்தார். தன் குடிகளை போற்றும் சிறந்த அரசனாகவே ராஜாரத்தன் சிங் இருந்து வந்துள்ளார்.



சித்தூர்கோட்டை இயற்கையாகவே ஏழு பாதுகாப்பு அரண்களைக்கொண்டதாக அமைந்து இருந்தது. இதனால் டெல்லியை

அப்போது ஆட்சி செய்து வந்த முகலாய மன்னர்களால் சித்தூர் கோட்டையை கைப்பற்ற முடியவில்லை.

இதற்கிடையே ராஜா ரத்தன் சிங்கால் நாட்டை விட்டே துரத்தி அடிக்கப்பட்ட ஒருவன், நேராக டெல்லியில் உள்ள அலாவுதீன் சில்ஜியிடம் போய் பத்மினி போன்ற பேரழகி உன் பக்கத்தில் இல்லாத போது நீஎன்ன பேரரசன்? என்று ராணியின் அழகைப் பற்றி தூண்டி விட அலாவுதீனுக்கு ராணி பத்மினியை பார்த்து விட வேண்டும் என்ற ஆவல் எழுந்தது.

தன் படைகளோடு போருக்குப் புறப்பட்டான் அலாவுதீன். ஆறுமாதம் நடந்த கடுமையானப் போரில் அலாவுதீனுக்கு தோல்வியே மிஞ்சியது. அவன் ராஜா ரத்தன் சிங்கிற்கு ஒரு தூது அனுப்பினான்.

பத்மினியை தன் சகோதரியாக நினைப்பதாகவும் ஒரு முறையேனும் அவரை கண்ணால் பார்த்து விட்டு திரும்பிச் சென்றுவிடுவதாகவும் தெரிவித்து இருந்தான். ராஜாவும் இதை உண்மை என்று நம்பி ராணியிடம் கூறினான். ஆனால் ராணி இதை நம்பவில்லை என்பதோடு அலாவுதீனைப் பார்க்க மறுத்து விட்டாள்.

தனது அழகை மட்டுமே காண அரண்மனைக்குள் அந்நிய ஆடவன் ஒருவன் வருவதா? என்ற கோபம் கூட ராணியின் மறுப்பிற்கு காரணமாக இருந்திருக்கலாம்.

போர் தொடர்ந்து நடைபெறுவதை ராஜா ரத்தன்சிங் விரும்பாமைக்கும் அவனை அரண்மனைக்கு அழைத்து இருக்கலாம்.

ராணியை நேரடியாக கில்ஜிக்கு காட்டாமல் பத்மினியின் அரண்மனைக்கு அருகில் இருக்கும் ஏரியின் நடுவில் அமைந்துள்ள மாளிகை ஜல்மகால்.இம்மாளிகையின் கடைசிப் படிக்கட்டில் ராணி நின்று கொண்டு தண்ணீரில் பிம்பத்தைக் காட்ட, அந்த பிம்பத்தை நூறு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ஒரு மண்டபத்தின் கண்ணாடியில் பிரதிபலிக்கச் செய்து அதில் ராணியின் அழகை அலாவுதீன் பார்க்கும்படி செய்தனர்.

ராணியை சகோதரியாக நினைப்பதாக கடிதமெழுதிய அலாவுதீன் அவளின் நிழலைப் பார்த்தே பத்மினியை அடையாமல் விடுவதில்லை என்று தீர்மானித்துக்கொண்டான். அவனை வழியனுப்ப வந்த ராஜா ரத்தன்சிங்கை ஏற்கவே தயார் செய்து வைத்திருந்த தன் வீரர்களுடன் ராஜாவை கடத்திக்கொண்டு போய் விட்டான்.

ராஜா உயிருடன் வரவேண்டும் என்றால் ராணி டெல்லிக்கு வரவேண்டும் என்று நிபந்தனை வைத்தான். இதனை கேள்வியுற்ற ரஜபுத்திரவீரர்கள் கில்ஜியின் கீழ்த்தரமான எண்ணத்துக்கு பாடம் புகட்ட எண்ணினர். அவனது குறுக்கு வழியையே பயன்படுத்த திட்டம் தீட்டினர். ராணி வருவாள் என்று செய்தி அனுப்பினர். பெண் வேடமிட்ட வீரர்கள் பல்லக்கில் உட்கார்ந்து சென்று ராஜாவை சண்டையிட்டு மீட்டு வந்தனர்.

ராஜாவை மீட்டு வந்தவர்களில் ராணியின் மாமா கோராவும் அவரது பன்னிரண்டு வயது மகன் பாதலும் குறிப்பிடத் தக்கவர்கள்.

மாற்றான் மனைவி மீதுஆசைப்படுவது தவறு என்று கில்ஜிக்கு புரியவே இல்லை. கத்தியும், ஆட்சியும் இருந்தால் எதை வேண்டுமானால் செய்யலாம் என்ற எண்ணத்தில் மிதந்தான் கில்ஜி. அவன் பெரும் படையைத் திரட்டிக்கொண்டு வந்து மலைமேல் இருக்கும் சித்தூர் கோட்டையை கைப்பற்ற எண்ணினான். தொடர்ந்து கோட்டைக்கு கீழே முற்றுகையிட்டு அத்தியாவசியப் பொருட்கள் எதையும் மேலே எடுத்துச் செல்ல முடியாதபடி தடுத்து விட்டான்.

தன் மனைவியை காக்கும் பொருட்டு நடைபெற்ற போரில் ராஜா இறந்தே போய்விட்டான். இச்செய்தி மேலே கோட்டையில் இருந்த ராணி பத்மினிக்கு எட்டியது. தன் கணவன் இறந்து விட்டான் என்ற செய்தியைக் கேட்டு துடிதுடித்த ராணி கில்ஜியின் கையில் அகப்படாமல் இருக்க தீயில் விழுந்து இறப்பது என்ற முடிவினை எடுத்தாள். ராணி மட்டுமன்றி அங்கே இருந்த பதினாறாயிரம் பெண்களும் பெரிய தீயினை வளர்த்து அதே பாய்ந்து உயிரை மாய்த்துக்கொண்டனர்.

கில்ஜியின் படைகள் உள்ளே நுழைந்தபோது அவர்களுக்கு கையில் கிடைத்தது சாம்பல் குவியலும் எரிந்த நிலையில் இருந்த எலும்புத் துண்டுகளும்தான்.

ஒரு பெண்ணுக்காக நடந்த போரில் ஒரு சாம்ராஜ்ஜியத்தின் பதினாராயிரம் பெண்கள் தீக்குளித்து இறந்தது உலகில் வேறு எந்த நாட்டிலும் நடந்திராத சரித்திர உண்மை.

# 25. ராணி சென்னம்மா

கர்நாடக மாநிலம் பெல்காம் பகுதியில் உள்ள கிட்டூரை தலைமையிடமாகக் கொண்டு சுற்றியிருந்த 350 கிராமங்களின் சமஸ்தானத்துக்கு ராஜாவாக இருந்தவர் மல்லசராஜா. தனது பதினேழாவது வயதில் 1782-இல் பட்டம் சூட்டிக்கொண்ட ராஜா 1816 வரை அரசாட்சி செய்தார்.

கிட்டூர் செழுமையான வருவாய் மிகுந்த சமஸ்தானம் என்பதால் ஆங்கிலேயருக்கு அதன் மீது ஒரு கண் இருந்து வந்தது. இந்நிலையில் ஏற்கனவே ஒரு முறை கிட்டூர் மீது போர் தொடுத்து தோற்றுப் போன திப்புசுல்தான் முன்பை விடவும் பெரும்படை ஒன்றை திரட்டிக்கொண்டு போய் மல்லச ராஜாவை கைது செய்து கபாலதுர்கா என்ற இடத்தில் சிறைவைத்தார் திப்பு.



சிறையிலிருந்து ராஜா தப்பித்து சிறிது காலம் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தார். அதற்குள் கிட்டூர் மகாராஸ்டிரா பேஷ்வா மன்னர்களின் கீழ் இருந்தது. அவர்களிடம் கப்பம் கட்ட ஒப்புக்கொண்டு மீண்டும் ஆட்சி செய்ய ஆரம்பித்தார் ராஜா. திப்புசுல்தானை ஒழித்துக்கட்ட விரும்பிய ஆங்கிலேயர்கள் மகாராஷ்டிரா பேஷ்வாக்களை துணைக்கு அழைத்தனர்.

இந்திய மன்னர்களுக்குள் மாறி, மாறி பகைமையை உண்டு பண்ணிக்கொண்டிருக்கும் ஆங்கிலேயருக்கு பாடம் புகட்ட விரும்பினார் கிட்டூர் ராஜா. அதற்காக பக்கத்து நாட்டு ராஜாக்களை எல்லாம் அவர் ரகசியமாய் சந்தித்துப் பேசி பெரும் படை ஒன்றை திரட்ட ஆரம்பித்தார்.

அப்படி சந்தித்த மன்னர்களில் காகட்டி சமஸ்தானத்தைச்சேர்ந்த தூலப்ப கௌடேவும் ஒருவர். அவர் மகள்தான் சென்னம்மா. சென்னம்மாவைக் கண்டதும் மல்லசராஜா திருமணம் செய்துக்கொள்ள விரும்பினார். ஏற்கனவே ருத்ரம்மா என்பவரை மணந்திருந்தாலும் அக்காலத்தில் ராஜாக்கள் நட்பு வேண்டியும், பகைமையைப் போக்கவும் பல பெண்களை மணப்பது வழக்கமாக இருந்தது.

முதல் மனைவிக்கு சிவலிங்க ருத்ரசர்ஜா, வீரருத்ரசர்ஜா என்ற மகன்கள் இருந்த நிலையில் சென்னம்மாவை மணந்த பிறகு அவர் மூலமாக ஒரு மகன் பிறக்க அக்குழந்தைக்கு சிவபசவராஜ் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர். சென்னம்மா தன் கணவரின் ஆட்சிக்கும் நிர்வாகத்திறனுக்கும் உறுதுணையாக நிற்க, முதல் மனைவி ருத்ரா துறவு பூண்டார்.

இந்நிலையில் ருத்ராவின் இளையமகனும், சென்னம்மாவின் ஒரே மகனும் நோய்கண்டு அடுத்தடுத்து இறந்து போக, ராஜாவும் இரண்டு ராணிகளும் துயர்கொண்டார்கள்.

மல்லசராஜா பேஷ்வாக்களுக்கு கப்பம் செலுத்தி வந்தாலும் அது ஏனோ அவர்களுக்குப் பிடிக்கவில்லை. **1809**-இல் ராஜாவை அழைத்த பேஷ்வா மன்னர் மல்லசராஜாவை சிறையில் வைத்து விட்டார். சிறையில் நோய் முற்றிய நிலையில் விடுதலை செய்யப்பட்ட ராஜா சில நாட்களிலேயே இறந்து விட்டார்.

மன்னரின் மறைவுக்குப் பிறகு ருத்ராவின் மூத்த மகன் பட்டத்துக்கு வந்தாலும் இளவரசனிடம் திறமை இல்லை. நாட்டிற்குள் பலர் சூழ்ச்சி செய்தனர். அரண்மனையில் இருந்துகொண்டே சிலர் ஆங்கிலேயருக்கு உளவு வேலை செய்தனர். சில ஆங்கிலேய அதிகாரிகள் இளவரசனிடம் `ஆண்டுக்கு ஒன்றே முக்கால் கோடி ரூபாயை கப்பமாக செலுத்த வேண்டும்'என்ற படிவத்தில் கையெழுத்து வாங்கி இருப்பதும் சென்னம்மாவுக்கு காலதாமதமாய் தெரியவர, அவர் சீறும் சிங்கமாய் சிலிர்த்து எழுந்தார்.

மக்களை வாட்டி, வதக்கி, வறுமையில் தள்ளி, வரும் வருமானத்தை அனைத்தையும் ஆங்கிலேயருக்கே கப்பமாகக் கட்டினால் நாட்டின் நிலை என்னாகும் என்று யோசித்த சென்னம்மா, உடனடியாக நாட்டின் நிர்வாகத்தை தான் எடுத்துக்கொண்டு இளவரசனையே தொடர்ந்து ஆட்சி செய்ய பணித்தார். வரவு செலவை சரிசெய்து நாட்டின் படைபலத்தை பெருக்கினார்.

இந்நிலையில் இளவரசன் ருத்ரசர்ஜாவும் இறந்து போக, நேரடி வாரிசு இல்லை என்பதைக் காரணம் காட்டி ஆங்கிலேயர் கிட்டூரை தங்கள் ஆட்சியின் கீழ் எடுத்துக்கொள்ள முயன்றனர். தத்து எடுத்துக்கொள்ளவும் ஆங்கிலேயரின் அனுமதி வாங்கவேண்டும் என்ற கட்டாயச் சூழலே அப்போது நிலவியது.

ராணி சென்னம்மா **1824-**ல் சிவலிங்கப்பா என்ற குழந்தையை சுவீகாரம் எடுத்ததாய் ஆங்கிலேயருக்கு கடிதம் எழுதினார். அவர்களோ ஆத்திரத்துடன் கிட்டூருக்கு வந்து கஜானாவை பூட்டி சீல் வைத்தனர். கோட்டை முழுக்க ஆங்கிலேய அதிகாரிகளை நியமித்தனர். தன் அரண்மனைக்குள் புகுந்து தன் நாட்டு மக்களை எவனோ ஒருவன் ஆட்சி செய்வதா என்ற ஆத்திரம் சென்னம்மாவுக்கு எழுந்தது. அடிமைத்தனமாக வாழ்ந்து விட்டுப் போகவும் அவரது சுதந்திர எண்ணம் அதற்கு இடம் தரவில்லை. அதனால் ஆங்கிலேயருடன் நேருக்கு நேர் மோதுவது என்று முடிவு செய்தார்.

**1824-**இல் கோலாப்பூர் சமஸ்தானத்தின் உதவியுடன் ஆங்கிலேயப்படை வீரர்களுடன் சென்னம்மாவின் வீரர்கள் மோதினர். ஆங்கிலேய கலெக்டர் தாக்கரே என்பவர் இப்போரினைக் காண்பதற்கு ஆங்கிலேய பெண்கள், குழந்தைகளை அழைத்து வந்து ஓரிடத்தில் வைத்திருப்பது கிட்டூர் வீரர்களுக்குத் தெரியவர அவர்கள் குழந்தைகளையும், பெண்களையும் சிறைப்பிடித்தனர். இதை அறிந்த சென்னம்மா அவர்களை விடுவிக்க சொன்னார்.

இரண்டு பீரங்கிகளை கோட்டையருகே கொண்டு வந்து நிறுத்திய ஆங்கிலேய கலெக்டர், சென்னம்மா தனது படைவீரர்களுடன் சரணடைய வேண்டும், இல்லையெனில் கோட்டை தரைமட்டமாக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்தான். ஆனால் அந்த இரண்டு பீரங்கிகளையும் கிட்டூர் வீரர்கள் கைப்பற்றிக்கொண்டனர்.

ஆகையால் மேலும் இரண்டு பீரங்கிகளை ஆங்கிலேயர் கொண்டு வந்து போருக்கு வித்திட்டனர். ராணி சென்னம்மா போர் உடையில் கோட்டை மீது நின்றுக்கொண்டு தன் வீரர்களுக்கு ஆணையிட, ஆங்கிலேய தளபதிகள் இருவர் போரில் கொல்லப்பட்டனர். தங்களது தளபதிகள் கொல்லப்பட்டது கண்டு கலெக்டர் தாக்கரேவுக்கு அதிர்ச்சி. அதனால் அவன் ராணி சென்னம்மாவை நோக்கி தனது குதிரையைச் செலுத்த இதைக் கண்ட ராணியின் மெய்க்காப்பாளன் பாலப்பா தன்னுடைய துப்பாக்கியால் கலெக்டரை சுட அவன் போரில் மாண்டு போனான்.

ஆங்கிலேயரின் படையை வீழ்த்தி, ராணி சென்னம்மா தலைமையிலான கிட்டூர் வீரர்கள் வெற்றிவாகை சூடினர். ஸ்டீவன்சன், எலியட் என்னும் இரண்டு அதிகாரிகள் பிணையக் கைதிகளாகவும் பிடிக்கப்பட்டனர். தோற்ற ஆங்கிலேயர்கள் பிணைய அதிகாரிகளை மீட்க ஒருபக்கம் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டே மறுபக்கம் மும்பை, பூனே, கோலாப்பூர் , பெல்லாரி, சென்னை ஆகிய இடங்களில் இருந்து பெரும்படையை வரவழைத்து கிட்டூரை முற்றுகையிடுமாறு செய்தனர்.

சென்னம்மாவை அடிப்பணிந்துபோகும்படி கட்டளையிட்டனர். ஆனால் சென்னம்மா செவிசாய்க்கவில்லை. தன் வளர்ப்பு மகனுக்கு கோலாகலமாக முடிசூட்டு விழா நடத்தினார்.

இதற்கிடையில் தங்களது இரண்டு அதிகாரிகளை மட்டும் விடுவித்தால் போதும் போர் தொடுக்கமாட்டோம் என்று உறுதியளித்த ஆங்கிலேயரின் பேச்சை உண்மை என்று நம்பிய ராணி அவர்களை விடுதலை செய்ய, அடுத்த கணமே ராணி உட்பட அனைவரும் சரணடைய வேண்டும் என்று கட்டளை யிட்டான் சாப்ளின் என்ற அதிகாரி.

`அடிபணிவது அடிமைகளின் செயல் சிங்கம் சென்னம்மாள் அதை ஒருபோதும் செய்ய மாட்டாள்' என்று கர்ஜித்த ராணி போர்களத்தில் குதித்தாள். பல்வேறு இடங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெரும்படை முன்பு சென்னம்மாவின் விடுதலைப்படை கடைசியில் தோற்க நேர்ந்தது.

சென்னம்மா **1824** டிசம்பர் ஐந்தாம் தேதி ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஐந்து ஆண்டுகள் சிறையில் வாடிய சென்னம்மா **1829**-பிப்ரவரி இரண்டில் தன் உடல் கூட்டை சிறை கம்பிகளுக்கு நடுவே விட்டு விட்டு, சுதந்திர ராணியாக விண்ணுக்குப் பறந்து விட்டார்.

# 26. சத்திரபதி சிவாஜி

சாயாஜி போஸ்லே, ஜீஜாபாய் தம்பதியருக்கு இரண்டாவது குழந்தையாகப் பிறந்தவர்தான் மராட்டிய சக்கரவர்த்தி சத்திரபதி சிவாஜி. பூனாவில் உள்ள சிவநேரிக்கோட்டையில் பிறந்தவர். இவரது தந்தை சுல்தானியர் மற்றும் முகலாய மன்னர்களிடம் தளபதியாக இருந்தவர்.

இந்து நாடான பாரதத்தை முகலாய மன்னர்களும், சுல்தானியர்களும் ஆட்சி செய்வது சிவாஜிக்கு பெரும் கோபத்தையும் வருத்தத்தையும் உண்டு பண்ணியது. சிறுவயது முதலே போர்க்கலைகள் அனைத்தும் கற்றவர் ஆதலால் தம் கருத்துக்களை பிரதிபலிக்கக் கூடியவர்களை ஒன்றிணைத்து பெரும்படை ஒன்றை திரட்டினார். முகலாயர்கள் கையில் நாடு முழுவதும் சிக்குண்டு கிடக்கும்போது சிறுபடையை வைத்துக்கொண்டு எப்படி மீட்பது என்றார் பயிற்சியாளர் தாதாஜி கொண்டதேவ்.

https://t.me/Knox_e_Library



`அவர்கள் மலையாக இருந்தால் நாம் உளியாக மாறி தகர்ப்போம்' என்றார் சிவாஜி. படைவீரர்களை தானே தேர்ந்தெடுத்தார். சிவபெருமான் முன்பு கை விரலை வாளால் அறுத்து உறுதி பூண்டார். பூனேவின் சுதந்திர அரசனாக தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். பிறகு படிப்படியாக ஒவ்வொரு கோட்டையாகப் பிடித்து மராட்டியத்தின் மாபெரும் மன்னராக உயர்ந்தவர் சிவாஜி.

நெறிபடுத்தப்பட்ட நிர்வாகத்தின் மூலம் பேரரசராக உயர்ந்தவர். முகலாயரின் கட்டாய மதமாற்றத்தை முற்றிலும் எதிர்த்தவர். கொரில்லா போரில் கைதேர்ந்தவர். முகலாயர்களை விட சிவாஜியிடம் சிறிய அளவிலான படையே இருந்தது. ஆனாலும் அவர்களின் ஒவ்வொரு கோட்டையாக கைப்பற்றி வந்தார்.

பிஜப்பூர் சுல்தான் மன்னன் அப்சல்கான் சிவாஜியை பிணமாகவோ, உயிருடனோ பிடிக்க சபதமேற்று சென்றான். அவ்வாறு செல்லும் முன் தன் மனைவியர் அனைவரையும் கொன்று விட்டுப் போனான். காரணம் போரில் தான் இறந்து விட்டால் தன் மனைவியர் வேறு யாரையும் மணந்து கொள்ளக் கூடாது என்ற எண்ணத்திலேயே அவன் அப்படிச் செய்ததாகக் கூறப்படுகிறது.

அப்சல்கான் சிவாஜியை பிடிக்க வருவதற்கு முன் வழியில் தென்பட்ட பெண்கள், குழந்தைகள் என அனைவரையும் வெட்டி வீழ்த்தினான். குறிப்பாக இந்துக்களை இரக்கமின்றி கொலை செய்தான். சிவாஜியின் குல தெய்வமான பவானியின் சிலையை தூளாக்கி தான் செல்லும் பாதையில் தூவும்படி உத்தரவிட்டான். அப்சல்கானின் அட்டூழியங்கள் சிவாஜியின் செவிகளை எட்டியது.

சிவாஜியை போரில் வெல்ல முடியாது என்று கருதிய அப்சல்கான் தந்திரமாக பேச்சுவார்த்தைக்கு அழைத்து கொலைசெய்ய திட்டமிட்டிருந்தான். இச்செய்தி சிவாஜிக்கு தெரிந்து போனது. ஆகையால் தன் உடல் முழுக்க இரும்பு கவசத்தை அணிந்து கொண்டு அதன் மீது போருக்கான உடையை அணிந்தார். கைகளில் புலி நகம் ஒன்றை அணிந்து கொண்டு,சிறிய கத்தி ஒன்றையும் இடுப்பில் மறைத்து வைத்துக்கொண்டார். பின்னர் அப்சல்கானைப் பார்க்க தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுவான இடத்துக்குச் சென்றார் .

சிவாஜியை பிடிக்க பெரிய கூண்டு ஒன்றை தயாராக வைத்திருந்தான் அப்சல்கான். இவ்விருவரின் சந்திப்பின் போது உடன் யாரையும்

வைத்துக்கொள்ளவில்லை. இருவரின் பாதுகாவலர்களும் வெளியிலேயே நின்றனர்.

முகமதிய முறைப்படி சிவாஜியை கட்டிப்பிடித்து வரவேற்பதாக கூறி ஆரதழுவினான் அப்சல்கான். தழுவும்போது இடது கையால் சிவாஜியின் கழுத்தை நெறித்து தன் தோளில் அழுத்திப் பிடித்துக்கொண்டு வலது கையால் மறைத்துவைத்திருந்த குறுவாளை சிவாஜியின் வயிற்றில் குத்தினான் அப்சல்கான். சிவாஜி இரும்பு கவசம் அணிந்திருந்ததால் அவருக்கு ஒன்றும் ஆகவில்லை. பிறகு அவனது பிடியில் இருந்து மீழ்வதற்காக புலிநகத்தால் அவனை தாக்கிய சிவாஜி இடுப்பில் வைத்திருந்த சிறிய கத்தியை எடுத்து அவனது வயிற்றில் குத்த, அவன் குடல் சரிந்து அலறியபடியே தரையில் சாய்ந்தான்.

அவனது அலறல் சத்தம் கேட்டு கூடாரத்துக்கு வெளியே இருந்த பாதுகாவலன் சையத் பாண்டா சிவாஜியை தாக்குவதற்காக ஓடிவர, அவனை சிவாஜியின் மெய்க்காப்பாளன் ஜீவாமகாலா கோடாரி போன்ற ஆயுதத்தால் தாக்கிக் கொன்றான்.

1666-இல் ஔரங்கசீப் தனது ஐம்பதாவது பிறந்த நாள் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக சத்திரபதி சிவாஜிக்கு அழைப்பு விடுத்தான். அழைப்பை ஏற்று சிவாஜி அவ்விழாவிற்குச் சென்றார். ஆனால் ஒரு சக்கரவர்த்திக்கு உரிய மரியாதையை தராமல் ராணுவதளபதிகள் நிற்கும் இடத்துக்கு பின்புறமாக சிவாஜியை நிற்கும் படி அவமதித்தான் ஔரங்கசீப். தன்மானத்துக்கு இழுக்கு நேர்ந்ததை எண்ணி வருந்திய சிவாஜி ஔரங்கசீப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து அவையிலிருந்து வெளியேறினார். அவரை வெளியேற விடாமல் கைது செய்த ஔரங்கசீப் ஆட்கள், ஆக்ராவில் வீட்டுச் சிறையில் சிவாஜியை அடைத்து வைத்தனர். பின்னர் வேறு இடத்துக்கு மாற்றி சிவாஜியை கொன்று விடவும் திட்டமிட்டனர். இதை அறிந்த சிவாஜி தனக்கு கடுமையான நோய் வந்தது போல் நடிக்க ஆரம்பித்தார். இந்நடிப்பு பல மாதங்களுக்கு தொடர்ந்தது. சிவாஜியின் உடல் நிலை குணமாக வெளியில் இருந்து பழங்கள் கூடைகளில் தருவிக்கப்பட்டன. சிவாஜி உண்ட மிச்ச பழங்களை ஆக்ரா சன்னியாசிகளுக்கு தானமாக கொடுக்கப்பட்டது.

பழக்கூடைகள் உள்ளே வரும்போதும் போகும் போதும் சோதனை செய்த பிறகே அனுமதிக்கப்பட்டன. இப்படி தொடர்ந்து வருவதும் போவதும் ஒரு கட்டத்தில் வழக்கமாகி விடவே, காவலாளிகள் கூடைகளை சோதனையிடுவது குறைந்து போனது. இச்சந்தர்ப்பத்தை

பயன்படுத்திக்கொண்ட சிவாஜியும், அவரது ஆறுவயது மகன் சாம்பாஜியும் பழக்கூடையில் உட்கார்ந்து கொண்டு தப்பித்துச் சென்று விட்டனர்.

1676-இல் சிவாஜி செஞ்சிக்கோட்டையையும் வேலூர் கோட்டையையும் கைப்பற்றினார்.

இந்தியாவில் இருந்த முகலாய சக்திகளுக்கு எதிராக இந்து பேரரசை நிறுவியவர். இந்து ராஜ்ஜியத்தை உருவாக்கினார் என்றாலும் பிற மத தலங்களுக்கும், மக்களுக்கும் மரியாதையும் பாதுகாப்பும் கொடுத்தார்.

சுதந்திரம், சகோதரத்துவம், நிகரில்லா தைரியம் இதுவே சிவாஜியின் சொத்தாக இருந்தது. சிவாஜிக்கு ஒன்றிற்கு மேற்பட்ட மனைவியர் இருந்தனர்.

1627 பிப்ரவரி 19-இல் பிறந்த சிவாஜி 1680-இல் ஏப்ரல் மூன்றாம் தேதி இரத்த பெருக்கு நோயால் இறந்து போனார்.

# 27. கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி

கடைச்சங்கத்தை நடத்திய கடைசி மன்னர் இவர். இவர் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனின் மகன்.

"கானப்பேரெயில்" என்னும் கோட்டை உள்ள பகுதியை, வென்றதால் இப் பெயர் பெற்றார்.

'கடந்த' என்றால், வெற்றிக்கொண்ட என்பது பொருள்.

சேர அரசன் மாரி வெண்கோவும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் இவருக்கு நண்பர்களாக இருந்தனர்.

இம்மூவரும் ஒன்றாய் அமர்ந்து பேசிக்கொண்டிருப்பதைக் கண்ட ஔவையார் மகிழ்ந்து, பாடல் (புறநானூறு — 367) எழுதினார்.

அகநானூற்றைத் தொகுப்பித்தவர் இவர்தான்.

ஔவையார் என்ன பாடினார்?

'வானத்து நட்சத்திரங்கள் இன்னும் பெருக வேண்டும். மழைத்துளிகள் இன்னும் பெருகிப் பொழிய வேண்டும். சூரியனும் நிலவும் பூமிக்குச் சொந்தமானது என்றாலும், அவை இரண்டும் சேர்ந்து வருவதில்லை. ஆனால், நீங்கள் மூவரும் ஒன்றாய்க் காட்சி தருகிறீர்கள். இந்த உலகம் உங்களுடையது. ஆட்சி உங்களுடையது. நீங்கள் எல்லோருக்கும் வாரி வழங்க வேண்டும். உங்களுக்கு வழங்கப்பட்ட வாழ்நாள் எல்லாம் வழங்கவேண்டும். இவ்வாறு வாழ்ந்து பிறரை வாழச்செய்வதுதான் நல்வினை' என்று போற்றுகிறார். அக்காலத்தில் மூவேந்தர்களுக்கு இடையில் அடிக்கடி சண்டை நடப்பது வழக்கம். அந்த வழக்கத்தை மாற்றிய இந்த வேந்தர்களை ஔவையார் மகிழ்ந்து போற்றினார்.'

# 28. கிருஷ்ண தேவராயர்

*(கி.பி.1487 முதல் 1530 வரை)*

நரச நாயக்கருக்கும், நாகலா தேவிக்கும் கி.பி.1487 ஆம் ஆண்டு, கர்நாடக மாநிலம் அம்பியில் பிறந்தவர். துளு(தெலுங்கு) வம்சத்தைச் சேர்ந்த இவரது தந்தை நரச நாயக்கர் சாளுவ நரசிம்ம தேவராயர் என்ற மன்னரிடம் தளபதியாக இருந்தார். நரசிம்ம நாயக்கன் இறப்புக்குப் பின் அவரது இரு மகன்களில் ஒருவன் கொல்லப்பட்டு விட, சிறுவனான இன்னொரு மகனை சிறையில் அடைத்து விட்டு அரசின் மொத்த நிர்வாகத்தையும் கவனித்து வந்தார் கிருஷ்ணதேவராயரின் தந்தையான நரச நாயக்கர். உண்மையான மன்னர் பரம்பரை அத்துடன் முடிவுக்கு வர, தளபதியாக இருந்த நரச நாயக்கரும் அவரது வாரிசுகளும் மன்னர் பரம்பரையாக ஆளத் தொடங்கினர்.

நரச நாயக்கருக்குப் பின் கிருஷ்ணதேவராயரின் அண்ணன் வீர நரசிம்மன் முடிசூட்டிக்கொண்டார். நான்கு ஆண்டுகளில் வீர நரசிம்மன் இறந்து போனார்.

அப்படி தன் அண்ணனுக்குப் பின் அரியணை ஏறியவர்தான் கிருஷ்ணதேவராயர். ஜுலை 26, 1509 முதல் இவர் தன்னுடைய ஆட்சியைத் தொடங்கினார். அப்போது அவருக்கு வயது இருபத்தைந்து.

கிருஷ்ணதேவராயர் பொறுப்பேற்றப்போது விஜயநகரை போர்மேகங்கள் சூழ்ந்திருந்தன. உம்மத்தூர் ஸ்ரீரங்கப்பட்டிணம் ஆகிய பகுதிகளின் ஆளுநர்கள் அரசரை எதிர்த்து போருக்கு தயாராகினர். பாமினிப் படைகள் விஜயநகரை தாக்க தயாராகிக்கொண்டிருந்தன. ஒரிசாவின் மன்னரும் முஸ்லிம்களுடன் சேர்ந்து கொண்டு மன்னரை எதிர்க்க துணிந்தார். அதனால் தான் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில் படை பலத்தைப் பெருக்குதிலேயே பெரும் செல்வத்தை செலவிட்டார் கிருஷ்ணதேவராயர்.

அவரது படையில் ஏறத்தாழ ஏழு லட்சம் காலாட்படையினரும், எண்பத்திரண்டாயிரம் குதிரைப் படை வீரர்களும், ஐநூறுக்கும் மேற்பட்ட யானைகளும் இருந்தன

கிருண்ஷதேவநாயர் மேற்கொண்ட முதல் போர் பாமினிப் போர்.கோல்கொண்டா என்னுமிடத்தில் நடந்த போரில் பிஜப்பூர் சுல்தான்களை முறியடித்து ரெய்சூர்,முட்கல் ஆகிய கோட்டைகளை கைப்பற்றினார். கிருஷ்ணா நதி படுக்கை, கோதாவரி நிலப்பகுதி மற்றும் தென் குமரி வரை இவரது ஆட்சியின் எல்லை நீண்டது. இவர் தனது நிலப்பகுதியை ஆறு மண்டலங்களாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு பிரதி நிதியை அனுப்பி ஆளச் செய்தார்.

`அமுதமால்யதா' என்ற தெலுங்கு நூலை எழுதினார். இந்நூல் ஆண்டாள் இயற்றிய திருப்பாவையின் மொழிப்பெயர்ப்பு என்று கூறப்படுகிறது. இவரது அவையை திம்மண்ணா, பெத்தண்ணா என்ற பெரும் புலவர்களும் மற்றும் விகடக்கவி தெனாலிராமனும் அலங்கரித்தார்கள்.

நடுத்தர உயரமும், சிவப்பு நிறமும், அழகியத் தோற்றமும் கொண்ட இவர் சிதம்பரம் வடக்கு ராஜ கோபுரத்தைக் கட்டிக்கொடுத்தார். அப்போது அவரது சிலையும் அங்கே பொறுத்தப்பட்டது. திருப்பதியிலும் இவருக்கும் இவரது மனைவியர் திருமலாதேவி, சின்னதேவி இருவருக்கும் செம்பு சிலைகள் உள்ளன.

`கிருஷ்ணதேவராயர் நீதி நெறி வழுவாதவர்.. கடுமையான உடற்பயிற்சி மூலம் மேனியை பாது காத்தவர். குதிரை ஏற்றத்தில் சிறந்தவர். ஆபத்தைக் கண்டு அஞ்சாதவர். தன்னுடைய வீரர்களிடத்தில் அன்பும், அக்கறையும் கொண்டவர். போரில் தன் வீரர்கள் அடிப்பட்டால் அவர்களுக்கு தானே நேரடியாகச் சென்று முதலுதவி அளித்தவர்' என்று இம்மன்னனைப் பற்றி பேய என்னும் வெளிநாட்டு அறிஞர் தன்னுடைய பயண நூலில் புகழாரம் சூட்டியுள்ளார்.

கலை மற்றும் கட்டிடக் கலைக்கு முக்கியத்துவம் கொடுத்தவர். ஏராளமான கோயில் கோபுரங்களை எழுப்பியவர், புதுப்பித்தவர். நீர்ப்பாசனத்துக்கு வேண்டி பல அணைகளைக் கட்டியவர்.காஞ்சிபுரம், சிதம்பரம், திருவண்ணாமலை போன்ற ஊர்களில் உள்ள பல்வேறு கோயில்களை எழுப்பியும் புதுப்பித்தும் தந்தவர். திருமால் மீது அதிக பக்தியும் ஈடுபாடும் கொண்டதனால் திருப்பதி கோயிலுக்கு தங்கம், வெள்ளி,

**வைரம் என பல்வேறு ஆபரங்களையும் காணிக்கைகளையும் கோடிக்கணக்கில் கொடுத்தார்.**

# 29. அசோகர்

## *கி.மு.273 முதல் கி.மு. 236 வரை*

மௌரிய பேரரசை நிறுவியவர் சந்திரகுப்தர். அவது புதல்வர் பிந்து சாரர். பிந்து சாரருக்கு பதினாறு மனைவிகள். அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் நூற்றியோரு பேர்.

அந்த நூற்றியோரில் சுசிமன், இரண்டாவது மகன் அசோகன், மூன்றாவது மகன் விகத்சோகன்.(திட்சியன்)

பிறக்கும் போது அசோகருக்கு பிரியதர்ஷி என்று பெயரிடப்பட்டது. பிரியதர்ஷி என்றால் காட்சிக்கு இனியவன் என்று பொருள். புத்தமதம் தழுவிய பிறகு தேவனாம்பிரியா என்றும் அசோகர் என்றும் அழைக்கப்பட்டார். தேவனாம்பிரியா என்றால் தேவர்களுக்கு இணையானவன் என்பது பொருளாகும்.

அசோகர் தனது பதினெட்டாவது வயதில் அவந்தி நாட்டின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். ஆளுநர் பதவி அக்காலத்தில் அரச குமாரர்களுக்கே வழங்கப்பட்டது.

ஆளுநர்கள் அரசர்களுக்கு கீழ்ப்படிந்து நடத்தல், மக்களின் நன்மைகளுக்காக உழைத்தல், அரசர்களின் ஆணைகளை உடனுக்குடன் நிறைவேற்றுதல் ஆளுநர்களின் கடமையாகும். அரசரின் அனுமதியின்றி எந்த செயலிலும் ஈடுபடக்கூடாது. இவர்களுக்குவருட ஊதியமாக பன்னிரண்டாயிரம் வழங்கப்பட்டது.

தட்சசீலத்தின் மக்களை பிந்து சாரரின் அமைச்சர் ஒருவர் இழிவாகப் பேசிவிட, இதனால் அம்மாநிலத்தில் கலகமும் குழப்பமும் ஏற்பட்டன. இதை அடக்குவதற்காக பிந்துசாரர் தனது மூத்த மகன் சுசிமாவை அனுப்பாமல் அசோகரை அனுப்பியது அவரது திறமையின் மீது தந்தைக்கு இருந்த நம்பிக்கையையே காட்டுகிறது.

அசோகரும் கலகத்தை அடக்கி மாநிலத்தில் அமைதியை ஏற்படுத்தினார்.இதன் காரணமாக தட்சசீலத்தின் இளவரசனாக அசோகர் நியமிக்கப்பட்டார்.

அசோகரின் தாய் சுபத்ராங்கி என்றும் தம்மாவென்றும் சிங்களரின் நாட்குறிப்பு புத்தகம் குறிப்பிடுகிறது.

அசோகர் முதலில் சாக்கிய இளவரசி மகாதேவியை மணந்தார். அசோகருக்கு மொத்தம் ஐந்து மனைவி என்று வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

அவர்கள் மகாதேவி, அசந்தமித்திரை, கருவாகி, பத்மாவதி, திசியாட்சிதை ஆகியோராவர்.

அசோகரின் புதல்வர்களில் மகேந்திரனும், சங்கமித்திரையும் புத்த மதத்தைப் பரப்புவற்காக கீழ் திசை நாடுகளுக்கு அனுப்பப் பட்டனர்.

குணாளன் என்ற மகன்தான் அசோகருக்குப் பிறகு மன்னராகவும், அதன் பின் அவனது மகன் தசரதன் மகுடம் சூட்டியதாகவும் மகாவம்சம் தெரிவிக்கிறது.

தன் தந்தை கி.மு.273 இல் இறந்து விட அதன் பிறகு நான்கு ஆண்டுகள் அதாவது கி.மு. 269 இல் தான் அசோகர் மன்னனாக மகுடம் சூட்டிக்கொண்டார்.

இந்த இடைப்பட்ட நான்காண்டுகளில் என்ன நடந்தது என்பதை அறிய தெளிவான குறிப்புகள் இல்லை. காரணம் அசோகர் அரச பதவிக்காக தன் அண்ணன் சுசிமா மற்றும் தம்பிகள் தொன்னூற்றி ஒன்பது பேரையும் கொன்று விட்டதாகவும் கடைசி தம்பி திஷியா தவிர பிறர் அனைவரையும் கொன்று ஆட்சியை கைப்பற்றியதாக புத்த நூல்கள் கூறுகின்றன. இதில் அசோகர் ஒரு அணியாகவும், பிற சகோதரர்கள் ஒரு அணியாக நின்றதாகவும் அந்நூல் தெரிவிக்கிறது. இதன் காரணமாக இவர் சந்த சோகா அதாவது கொடிய அசோகன் என்று அழைக்கப்பட்டதாகவும் அந்நூல் கூறுகிறது.

ஆனால் அசோகர் ஆட்சிக்கு வந்து பதினேழாம் ஆண்டு கல்வெட்டு குறிப்புகளில் தமது சகோதர, சகோதரிகள் உயிருடன் இருப்பதாகவும், அவர்களை தான் பேணிக்காப்பதாகவும் குறிப்புகள் உள்ளன.

புத்த மதத் தலைவர்கள்தான் அசோகர் புத்தம் தழுவுவதற்கு முன் கெட்டவரைப் போல சித்தரித்தனர். அம்மதத்தை தழுவியப் பின்

நல்லவர் என்று ஒப்புக்கொண்டு எழுதியதாக ஒரு சில வரலாற்று அறிஞர்கள் சந்தேகம் எழுப்புகின்றனர்.

அசோகர் ஆரம்பத்தில் வேட்டையாடுதல், வேடிக்கை விழாக்களில் பங்கேற்றல், ஆடல் பாடல்களில் கவனம் செலுத்துதல், தன் ஆட்சியை விரிவுபடுத்த போர் புரிதல் என சராசரி ஒரு அரசனைப் போல் இருந்தாக திவ்விய வதனம் என்னும் புத்த நூல் கூறுகிறது.

அசோகர் தமது எட்டு அல்லது ஒன்பதாவது ஆண்டு ஆட்சியில் கலிங்கத்தின் மீது போர்தொடுத்தார். போர் தொடுத்ததற்கான காரணம் புரியவில்லை. கலிங்கம் தற்போதைய ஒடிசா மாநிலத்தில் உள்ளது.

கி.மு. **261** ல் கலிங்கப்போர் நடந்தது. கலிங்கர்கள் தோற்றனர். கலிங்கத்து அரசன் பெயர் தெரியவில்லை. ஒரு லட்சம் மக்கள் இறந்தனர். ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மக்கள் சிறைப்பிடிக்கப்பட்டனர். பல மக்கள் வீணே மாண்டனர். எங்கு பார்த்தாலும் இரத்த ஆறு ஓடியது.

உலகில் நடைப்பெற்ற பல்லாயிரக்கணக்கான போர்களில் இது ஒன்று என்றாலும், ஒரு பேரரசனை ஆட்சி அதிகாரம்,புகழ், பணம் எல்லாவற்றிலிருந்தும் அறவழிக்கு திருப்பி ஆன்மீகத்துக்கு மாற்றியது இப்போர் எனலாம்.

போரில் இறந்த மக்கள் குவியலையும், அவர்கள் படும் துன்பத்தையும் நேரில் கண்ட அசோகரின் மனம் மாறியது. இனி போரிடுவதில்லை என்று மன உறுதி பூண்டு புத்த மதம் தழுவியதாக அவரது பதிமூன்றாவது கல்வெட்டு கூறுகிறது.

அசோகரை மத மாற்றம் செய்த புத்த மத துறவியின் பெயர் உபகுப்தர்.

இதன் பிறகு அசோகர் அறப்பணிகள் மட்டுமே செய்தார். இனி போரிடுவதில்லை என்ற தமது எண்ணத்தை பல்வேறு நாடுகளுக்கு தெரிவிக்க நல்லெண்ணத் தூதர்களை அனுப்பினார்.

அறப்போரும், அன்பும் மட்டுமே பேரின்பத்தை தரும், மக்கள் யாவரும் நம் குழந்தைகள். அவர்களைக் காப்பது நம் கடமை என்பது அவரது போதனையாக மாறிப்போனது.

அவர் ஒரு போர் வீரனாக இல்லாமல் முனிவர் போல் மாறிப்போனார். தாய், தந்தை, மூத்தோரை மதித்தல், உடன் பிறந்தோரிடம் அன்பாக நடக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு அறக்கொள்கைகளை அவரது பன்னிரண்டாம் கல்வெட்டு கூறுகிறது.

மேற்கே குஷ் மலைப் பிரசேத்தில் தொடங்கி கிழக்கே பிரம்ம புத்திரா நதி, வடக்கே இமய மலை அடிவாரம், தெற்கே சென்னை வரை இவரது ஆட்சி நீண்டிருந்தது என்று ஏ.வி. ஸ்மித் கூறுகிறார்.

நாட்டின் வருவாய் முழுவதையும் புத்த மதம் பரப்பவே செலவிட்டார். கி.மு. 240 ஆம் ஆண்டில் மூன்றாவது புத்த மாநாட்டை பாடலி புத்திரத்தில் (பாட்னா)கூட்டினார் என்று மகாவம்சம் ஆசிரியர் மகானாமன் கூறுகிறார்.

தனது நிலப்பரப்பை ஐந்து மாநிலங்களாகப் பிரித்து அதற்கு தட்சசீலம், உஜ்ஜயினி, வர்ணகிரி, தோஷாலி, பாடலி புத்திரம் என தலைநகரங்களை அமைத்தார்.

அசோகர் சிறந்த நிர்வாகி. கலைகளின் மீது தீவிர ஈடுபாடும் பற்றும் இருந்தது. அசோகர் காலத்தில் சாரநாத் ஸ்தூபி உட்பட 84 நான்காயிரம் ஸ்தூபிகள் கட்டப்பட்டன.

37 ஆண்டுகள் ஆட்சி செய்த அசோகர் தன் கடைசிக் காலத்தில் பௌத்த துறவியாகி மடாலயங்களில் தங்கினார். 72 வயதில் தன் கடைசி வாழ்வை முடித்துக்கொண்டார்.

# 30. முதலாம் ஏகோஜி (வெங்கோஜி)

தஞ்சையில் மராட்டியர்(இராட்டிரகூடர்) ஆட்சியை ஏற்படுத்திய முதல் மன்னன். சத்திரபதி சிவாஜியின் மாற்றாந்தாய் மகன், தம்பி முறை வேண்டும். வெங்கோஜி என்று வேறு பெயரும் இவருக்குண்டு. கி.பி. 1676 முதல் 1682 வரை தஞ்சையை ஆட்சி செய்தார்.

தஞ்சையை நாயக்கர் வம்சத்தை சேர்ந்த விஜயராகநாயக்கர் என்பவர் ஆட்சி செய்து வந்தார். மதுரையை சொக்க நாதநாயக்கர் ஆட்சி செய்தார். மதுரை நாயக்கர், தஞ்சை நாயக்கரின் மகளை பெண் கேட்க, தஞ்சை நாயக்கர் மறுத்து விட்டார்.

தனக்கு பெண் தர மறுத்த தஞ்சை மன்னன் மீது மதுரை நாயக்கருக்கு கோபம் கொப்பளித்தது.

விளைவு? இருவருக்கும் போர் மூண்டது.

தஞ்சை நாயக்கர் போருக்குச் செல்லும்முன் 'தான் வெற்றி பெற்று திரும்பா விட்டால் அனைவரும் இறந்து விடுங்கள்' என்று அதற்கான ஏற்பாட்டை செய்து விட்டுப்போனார்.

போரில் தஞ்சை மன்னனும் அவனது மூத்த மகன் மன்னார் தாசும் தலை துண்டிக்கப்பட்டு இறந்து போக, அவனது மனைவியர், மற்றும் குழந்தைகள் அனைவரும் சொன்னது போலவே மாண்டு போனார்கள். ஆனால் விஜயராகவரின் மனைவியருள் ஒருவர் தனது நான்கு வயது செங்கமலதாசுவை வேலைக்காரப் பெண் ஒருவரிடம் கொடுத்து நாகப்பட்டினத்தில் ஒருவரிடம் ஒப்படைக்கச் சொல்லி விட்டு இறந்து போனாள்.

விஜயராகவர் இறந்ததும் மதுரை நாயக்கர் தன் தம்பி அழகிரியை தஞ்சைக்கு மன்னராக்கி கப்பம் கட்டச் செய்தார். அழகிரியின் அமைச்சன் இராயசம் வெங்கண்ணா. இவர் அழகிரியை தூண்டிவிட்டு உங்கள்

அண்ணனுக்கு கட்டுப்பட்டு ஆட்சி நடத்தாமல் சுதந்திராமாக செயல் படுங்கள் என்று அறிவுறுத்தினான். அழகிரியும் அதையே விரும்பினான். இடையில் அழகிரி வெங்கண்ணாவை மதிக்கவில்லை.

இதனால் கோபம் கொண்ட வெங்கண்ணா குழந்தையாக நாகப்பட்டினத்துக்கு அனுப்பப்பட்ட செங்கமலதாசுவை மன்னனாக்க விரும்பினான். இதற்காக பிஜப்பூர் சுல்தானிடம் உதவிக்கேட்டுச் சென்றான். சுல்தான் தனது படை தளபதி ஏகோஜியை பெரும்படையுடன் தஞ்சைக்கு அனுப்பி வைத்தான்.

தஞ்சை அருகே அய்யம்பேட்டையில் நடந்த போரில் அழகிரி தோற்க, செங்கமலதாசு பட்டம் சூட்டிக்கொண்டான். ஆனால் அவன் பொறுப்பேற்று ஒரு வருடம் ஆன நிலையில் அவனும் தன்னை மதிக்க வில்லை, தன்னை வளர்த்த நாகப்பட்டின வியபாரிக்கு முக்கிய மந்திரி பதவியும், தளவாய் பதவியும் கொடுத்தான் என்ற காரணத்துக்காக கோபம் கொண்டான் வெங்கண்ணா.

பரிசு பொருட்களுடன் ஏகோஜி குடந்தையில் தங்கி இருந்தார். அவரை சந்தித்த வெங்கண்ணா செங்கமலதாசு மீது போர் தொடுக்க கூறினான். ஏகோஜியும் படையுடன் சென்று அவனை வீழ்த்தி கி.பி. 1676 இல் தஞ்சைக்கு முதல் மராட்டிய மன்னனாக முடிசூட்டிக்கொண்டான்.

இப்படித்தான் தஞ்சையில் மராட்டியர் ஆட்சி தொடங்கியது.

ஏகோஜிக்கு தீபாபாய், அன்னுபாய், கங்காபாய் என்று மூன்று மனைவியர். சகஜி, துளஜா, சரபோஜி என மூன்று பிள்ளைகள்.

சிவாஜிக்கு ராஜகுருவாக இருந்த ராமதாசர்தான் ஏகோஜிக்கும் ராஜகுரு.

சோழர்களின் மரபுகள் அனைத்தையும் அழியாமல் பாதுகாத்தான் ஏகோஜி.

ஏகோஜிக்கு வடமொழி, தெலுங்கு, தமிழ், மராட்டி என பல மொழிகள் தெரியும்.

கி.பி. 1676 இல் சிவாஜியுடன் கொள்ளிடத்தை கைப்பற்றும் போரில் முதலில் வெற்றி பெற்றாலும் பின்னர் தோல்வியுற்றார். சிவாஜி பிஜப்பூர் சுல்தானிடம் தஞ்சை உட்பட தாம் வெற்றிப் பெற்ற பகுதிகளுக்கு தானே ஆட்சி செய்யும் உரிமையைப் பெற, வெறுப்புற்ற ஏகோஜி துறவி போல் வாழ ஆரம்பித்தான் `இப்படி எல்லாம் இருக்க வேண்டாம்' என்று தன்

Knox e_Library



சகோதரனுக்கு அறிவுரை கூறி கடிதம் எழுதினான் சிவாஜி. தன் அண்ணனுக்கு கப்பம் கட்டும் மன்னனாக இருந்தார் ஏகோஜி.

# 31. மன்னர் பாஸ்கர சேதுபதி

## *(1868 முதல்1903 வரை)*

இராமநாதபுரத்தை ஆண்ட முத்து ராமலிங்க சேதுபதி, முத்தாள் நாச்சியார் தம்பதிகளின் புதல்வர்தான் பாஸ்கர சேதுபதி. இவரது சகோதரர் தினகர். சேதுபதி 1868 நவம்பர் மூன்றாம் தேதி பிறந்தார்.

இந்நிலையில் இராமநாதபுரம் அரண்மனையை ஆங்கிலேயர்கள் எடுத்துக்கொண்டதுமில்லாமல், அதை சமஸ்தானமாக்கி விட்டார்கள். பாஸ்கர சேதுபதி பிறந்த ஐந்தே ஆண்டுகளில் அவரது தந்தையும் (1873) இறந்து விட்டார்.

அவரை வளர்க்கும் பொறுப்பை ஆங்கில அரசாங்கம் எடுத்துக்கொண்டது. அவரை சென்னைக்கு கொண்டு வந்து எழும்பூரில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் சேர்த்து கல்வி புகட்டியது.

பாஸ்கர சேதுபதி ஆங்கிலம், தமிழ் மொழிகளோடு இசை, விளையாட்டு என்று தன் திறமைகளை வளர்த்துக்கொண்டார். டென்னிஸ், பியானோ வாசித்தல், ஓவியம் வரைதல் ஆகியவற்றின் மீது அதிக ஈடுபாடு இருந்தது. நம் நாட்டின் மொழி, கலாச்சாரம் ஆகியவற்றின் மீது ஆழ்ந்த பற்றும் நம்பிக்கையும் கொண்டிருந்தார்.

கி.பி.1888 ஆம் ஆண்டு எம்.ஏ. பட்டப்படிப்பை முடித்த சேதுபதி தன்னுடைய சமஸ்தானத்துக்கு திரும்பினார். தனது இருபத்தொன்றாவது வயதில் சமஸ்தானப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். மன்னருக்கு முதலில் மங்களேஸ்வரி, சிவபாக்கியம், சிவகாமசுந்தரி என மூன்று பெண்களுடன் திருமணம் நடைபெற்றிருக்கிறது. முதல் இரு மனைவியர் இறந்த பிறகு திருமணம் செய்தாரா? அல்லது இருக்கும்போதே செய்தாரா என்பது விளங்கவில்லை.

பாஸ்கரசேதுபதிக்கு இந்திய அரசு `மகாராஜா' என்று பட்டம் கொடுத்து கௌரவப்படுத்தியது.

அமெரிக்காவில் அனைத்து மத கூட்டம் நடைபெறுவதாகவும், அதில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறும் பாஸ்கர சேதுபதிக்கு அழைப்பு வந்தது. ஆனால சேதுபதிக்கு அதில் தான் கலந்து கொள்வதை விட தன்னை விட ஆன்மிகத்திலும், பேச்சிலும், செயலிலும் சிறப்புற்று விளங்கும் சுவாமி விவேகானந்தர் கலந்து கொண்டால் நன்றாக இருக்கும் என்று யோசித்தார்.

தன்னுடைய யோசனையை தனக்கும், விவேகானந்தருக்கும் பொதுவான நண்பராக விளங்கிய சுப்பிரமணி ஐயர் மூலம் தெரிவிக்க, முதலில் யோசித்து சொல்வதாகச் சொன்ன விவேகானந்தர், பின்னர் சம்மதம் தெரிவித்தார்.

விவேகானந்தர் பயணிக்க தேவையான செலவுகள் அனைத்தையும் பாஸ்கர சேதுபதியே ஏற்றார். 1893 ஆம் ஆண்டு விவேகானந்தர் கன்னியாக்குமரியில் இருந்து கடல்வழியாக அமெரிக்காவிற்குப் பயணமானார்.

விவேகானந்தரின் தோற்றம் மட்டுமல்ல, அவருடைய பேச்சும் ஆங்கிலேய மக்களை கவர்ந்தது. நான்காண்டுகளுக்குப் பின் 1897 இல் பாம்பன் துறைமுகத்தில் விவேகானந்தர் வந்திறங்கிய போது மன்னர் பாஸ்கரசேதுபதி விவேகானந்தரின் பாதங்களை தரையில் பட விடாமல், தன் தலையில் வைத்து இறங்குமாறு பணித்தார்.

அத்துடன் விவேகானந்தர் பயணிக்க கொண்டு வந்த அலங்கார வண்டியை மாடுகளுக்குப் பதிலாக மன்னரும், அரண்மனை ஊழியர்களும் ஊர்வலமாக இழுத்துச் சென்றனர்.

பீரங்கிகள் முழுங்க ஒரு மன்னரை வரவேற்பது போல் அரண்மனைக்குள் அழைத்துச் சென்றனர். கலியுகத்து ராஜரிஷி என்று பாஸ்கருக்கு பட்டமளித்தார் விவேகானந்தர்.

தன் அன்பிற்கும் மதிப்பிற்கும் பாத்திரமான விவேகானந்தர் இறந்த போது மிகவும் மனம் உடைந்து போனார் மன்னர்.

புலவர்களுக்கும், கோயில்களுக்கும் மிகுந்த தான தருமங்களை வாரி இரைத்தார். திருவாவடுதுறை மடத்துக்கு இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களை தானமாக வழங்கினார். இப்படி வருவோர்க்கெல்லாம் தான தருமங்கள்

செய்வதைக் கண்ட சிருங்கேரி மடத்தின் சாமிகள் மன்னரிடம், `உங்கள் அரண்மனையை எனக்கு தானமாகக் கொடுங்கள்' என்று கேட்டார்.

உடனே பாஸ்கர சேதுபதி `தானமாக கொடுத்து விட்டேன். எடுத்துக்கொள்ளுங்கள்' என்று கூறியதோடு அரண்மனையை விட்டும் வெளியேறி விட்டார். சாமிகள் மனம் நெகிழ்ந்துப் போய் அரண்மனையை திரும்ப மன்னரின் மகன் முத்துராமலிங்க சேதுபதிக்கே தானமாகத் தந்து விட்டார்.

பாஸ்கர சேதுபதி மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் துவங்க காரணமாக இருந்தார்.1901 ல் துவங்கப்பட்ட இச்சங்கத்தில் உ.வே. சாமிநாத ஐயர், இரா.இராகவ ஐயங்கார், பரிதிமாற்கலைஞர், பின்னாத்தூர் நாராயணசாமி போன்றோர் இச்சங்கத்தில் அங்கம் வகித்தனர். இச்சங்கம் மூலம் சிறந்த புலவர்களுக்கும், இலக்கியங்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

சேதுபதிக்கு முதுகில் கட்டி வந்து தொல்லைக் கொடுத்தது. இதனால் அவர் அடிக்கடி திருவாவடுதுறை மடத்தில் போய் தங்கி விட்டார். 1903 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் தேதி தனது முப்பத்தைந்தாவது வயதிலேயே இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டார் மன்னர் பாஸ்கரசேதுபதி.

மதுரையிலிருந்து ராமேஸ்வரம் சென்ற முதல் இரயிலில் தான் பாஸ்கர சேதுபதியின் பூத உடல் கடைசியாகப் பயணித்தது.

# 32. இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர்

மதுரையை திருமலை நாயக்கர்(1623..59), தஞ்சையை ரகுநாதநாயக்கர்(1600..45), விஜயநகரப்பேரரசை வங்கேடபதி காலத்தில் செஞ்சியை ஆட்சி செய்த நாயக்கர் மன்னர்தான் இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர். தஞ்சை , மதுரை நாயக்க மன்னர்களைப் போல் செஞ்சி நாயக்க மன்னர்களால் புகழ் எய்த முடியவில்லை செஞ்சியை ஆட்சி செய்த மன்னர்களில் சிறப்புடன் ஆட்சி இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கரே ஆவார்.

இவரின் தந்தை வையப்ப கிருஷ்ணப்ப கொண்டம நாயக்கர். தந்தையின் மரணத்துக்குப் பின் தன்னுடைய தாய் மாமனால் சிறை வைக்கப்பட்டார் கிருஷ்ணப்பர். மன்னரின் மகன் சிறையில் வாடுவதை விரும்பாத மக்களும், மன்னரின் நண்பர்களும் அவரை சிறையிலிருந்து தப்பித்துப் போக உதவினர்.

விடுதலையாகி வெளியில் வந்த கிருஷ்ணப்பர் தன் மாமனை சிறை செய்து அவரது கண்களைப் பிடுங்குமாறு உத்தரவிட்டார்.

இவர் விஜயநகர பிரதிநிதியாக செஞ்சியை ஆட்சி செய்தாலும் கப்பம் கட்ட மறுத்தார். தான் ஒரு சுதந்திர மன்னனாக இருக்க விரும்பினார்.

இந்நிலையில் விஷயநகர மன்னன் வேங்கடபதி மீது கோல்கொண்டா சுல்தான்கள் போர்த்தொடுத்து வந்தனர். விஜயநகர மன்னனுக்கு உதவி புரியாமல் தானும் கலகத்தை தூண்டி விட்டார் விருஷ்ணப்பர். இதனால் கோபம் கொண்ட விஜய நகர அரசர் இவரைத் தூக்கி சிறையில் போட்டு விட்டார். பின்னர் திருச்சி ரகுநாத நாயக்கர் வேண்டுகோளுக்கு இணங்க இவர் விடுதலை செய்யப்பட்டார்.

இதனால் ரகுநாதநாயக்கருக்கு நன்றிக் கடனாக தன் மகளை மணமுடித்துக்கொடுத்தார் செஞ்சி மன்னர்.

கிருஷ்ணப்பருக்கு கீழ் படிந்த மன்னர்களாக வேலூர் லிங்கம்ம நாயக்கரும், தேவிக்கோட்டை சோழக மன்னரும் ஆட்சி புரிந்தனர்.

இம்மன்னன் காலத்தில் செஞ்சிக்கு வருகைப் புரிந்த பிமெண்டா என்ற ஏசு கழகப் பாதிரியார் `செஞ்சி மிகப்பெரிய நகரமென்றும் மன்னரைச் சுற்றி தினமும் 200 அந்தணர்கள் பில்லி சூனியம் அண்டாதிருக்க புனித நீரை தெளித்த படி இருந்தனர். கழத்தில் நீண்ட தங்கச் சங்கிலியும், முத்து மாலையும், ரத்தினமாலையும் அணிந்தும், தலைமுடியை கொண்டையிட்டு, தங்க ஜரிகை போட்ட பட்டு உடுத்தி, பட்டு விரிக்கப்பட்ட இருக்கையில் சாய்ந்து அமர்ந்து தங்களை வரவேற்றதாக' குறிப்பிடுகிறார்.

வெளிநாட்டினரை அனுப்பும் போதும், வரவேற்கும்போதும் வெற்றிலைப் பாக்கு கொடுத்து உபசரித்தான்.

குலோத்துங்கச் சோழன் கடலில் தூக்கிப் போட்ட கோவிந்தராஜன் சிலையை இந்த கிருஷ்ணப்ப நாயக்கர் எடுத்து பிரதிஷ்டை செய்து சிதம்பரம் கோயிலில் வைத்தான். இதனை தில்லைவாழ் அந்தணர்கள் சிலர் எதிர்த்தனர். ஆனால் மன்னன் கேட்கவில்லை. மன்னனுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பொருட்டு இருபது பேர் கோயில் கோபுரத்தின் மேல் ஏறி கீழே விழுந்து உயிர் விட்டனர். இதனால் கோபம் கொண்ட கிருஷ்ணப்பர் கலகம் செய்பவர்களை துப்பாக்கிக் கொண்டு சுடுமாறு உத்தரவி பிரப்பித்தான். இதில் சிலர் உயிர் நீத்தனர். கிருஷ்ணப்பர் வைணவத்தை சேர்ந்தவராக இருந்தாலும் சிவனை கும்பிடும் சைவத்தையும் ஆதரித்தார். திண்டிவனத்தில் சிவன் கோயில் ஒன்றும் சித்தானூரில் சமண கோயில் ஒன்றும் இவன் கட்டுவித்தான்.

விஜய நகருக்கு கப்பம் கட்ட மறுத்ததால் வேங்கடபதி இவன் மீது படையெடுத்து வந்தான். செஞ்சிக்கோட்டைக்கு வெளியே அப்படைகளை தடுத்து போரிட்டான் மன்னன். ஆனால் போரில் கிருஷ்ணப்பரால் வெற்றி பெற முடியவில்லை.

விஜயநகர மன்னன் தோற்ற மன்னனை காலில் விழுமாறு பணித்தான். இதனால் வெறுத்துப்போன கிருஷ்ணப்பர் இனிமேல் இந்த நாடும் வேண்டாம், பதவியும் வேண்டாம் என்று வெறுத்தான். மதுரை மன்னர் திருமலை நாயக்கரும், திருச்சி மன்னர் ரகுநாதரும்தான் இவரை தேற்றி ஆறுதல் படுத்தினர்.

இதன் பின் விஜயநகர அரசியிலும் பல்வேறு குழப்பங்கள், கலகங்கள்நடந்தேறியதன் விளைவாக செஞ்சிக்கோட்டை பிஜப்பூர்

**சுல்தான்கள் வசம்( 1649 ) சென்று விட்டது.**

# 33. விஜயராகவ நாயக்கர்

தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர் இரகுநாத நாயக்கருக்கும், கலாவதிக்கும் பிறந்தவர்தான் விஜயராகவ நாயக்கர். தன்னுடைய எண்பது வயதுவரை மன்னராக கோலோச்சியர். இவரது அவையில் ரங்கஜயம்மா என்ற பெண்பாற் புலவர் அவைகளப்புலவராக அலங்கரித்திருக்கிறார். பின்னர் அவர் அரசனையே மணந்திருக்கிறார்.

கீழா நெலலிக்கோட்டை, சாக்கோட்டை, அறந்தாங்கிக் கோட்டை, திருமயம் போன்ற கோட்டைகளை உருவாக்கியவர் இம்மன்னனே.

இவர் சிறந்த கல்விமானாகவும், பக்தி மானாகவும் திகழ்ந்தார். சாகித்யராயன் என்ற பட்டத்துடன் முப்பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். பிரகலாதா சரித்திரம் என்ற நூல் இவர் எழுதிய நூல்களில் ஒன்று. தெலுங்கு நாடகம், காவியங்களையும் இயற்றியுள்ளார். இவரது அவையில் இருந்த ரங்காஜம்மா ஒரே நேரத்தில் நூறு பாடல்களை இயற்றக் கூடியவராகவும், எட்டு மாழிகளில் புலமைப் பற்றவராகவும் விளங்கினார்.

விஜயராகவ நாயக்கர் தீவிர வைணவ பக்தர். ஸ்ரீரங்கம் ரங்கநாதன் மீது தீராத பற்று உள்ளவர். மதுரை மன்னார்குடி இராஜகோபால் சாமி மீது அதித பக்தி கொண்ட காரணத்தால் தன்னை மன்னாரு தாசன் என்று அழைத்துக்கொண்டார். அதன் காரணமாகவே தன் மகனுக்கு மன்னாரு தாசன் என்று பெயரிட்டார். நாணங்களையும் இவ்வரசன் வெளியிட்டுள்ளார்.

இவருடைய ஆட்சிக்காலத்தில் மதுரை, செஞ்சி மன்னர்களும், முகமதியர்களும் தொடர்ந்து தொல்லைகள் கொடுத்து இவரை நிம்மதி இழக்கச் செய்தனர்.

மதுரைக்கு 1660 ஆம் ஆண்டு பதினாறு வயதான சொக்கநாதர் ஆட்சி பொறுப்புக்கு வந்தார். ஆட்சிக் கட்டிலில் ஏறியதும் தஞ்சை மீது படையெடுத்து வந்தார். சிறுவனாக இருப்பதால் எளிதில் வீழ்த்தி விடலாம்

என விஜயராகவ நாயக்கர் எண்ணினார். ஆனால் அவரது எண்ணத்துக்கு மாறாக சொக்க நாதர் வெற்றி பெற்றார். தஞ்சை மன்னர் தோற்றுப்போனார். இதனால் சில சமாதான உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டன.

ஒரு சிறுவனிடம் தோற்றுப் போனதை தஞ்சை மன்னர் அவமானமாகக் கருதினார். இரண்டாண்டுகள் கழித்து 1663ல் பிஜப்பூர் சுல்தான் தெற்கு நோக்கிப் படையெடுத்து வந்தபோது அவர்களுடன் சேர்ந்து கொண்ட விஜயராகவ நாயக்கர், சொக்கநாதரின் நிலப்பகுதியான திருச்சியில் படையுடன் முற்றுகையிட்டார். ஆனால் சொக்கநாதர் படையெடுத்துச் செல்லாமல் பிஜப்பூர் சுல்தானுக்கு பணம் கொடுத்து சாமாதான உடன்படிக்கைகளைச் செய்து கொண்டார்.

சுல்தான் படைகள் அகன்றதும் அவனுடன் கூட்டு சேர்ந்து தன்னை எதிர்க்க வந்த விஜயராகவநாயக்கர் மீது மறுபடியும் போர்த் தொடுத்து வெற்றி பெற்றதோடு தஞ்சைப் பகுதின் வல்லம் கோட்டையை மதுரை நிலப்பகுதியில் சேர்த்துக்கொண்டார் சொக்க நாதர். என்றாலும் மீண்டும் 1664 இல் படையைத் திரட்டிப் போய் தன்னுடைய நிலப்பகுதியை மீட்டுக்கொண்டார் விஜயராகவநாயக்கர்.

கி.பி. 1664 முதல் 1673 வரை தஞ்சைக்கும் மதுரைக்கும் இடையே எந்த படையெடுப்பும் நடைபெறாமல் இருந்தது. ஆனால் 1674 தன்னுடைய எதிரியான லிங்கம நாயக்கருக்கு, விஜயராகவ நாயக்கர் உதவினார் என்ற காரணத்துக்காக மதுரை மன்னர் சொக்கநாத நாயக்கருக்கு அளவில்லாத கோபம் ஆர்த்தெழுந்தது.

இருப்பினும் விஜயராகவ நாயக்கரின் மகள் மோகனாங்கி எனப்படும் மங்கம்மாவை சொக்க நாதர் பெண் கேட்டு அனுப்ப, இவர் மறுத்தார்.

ஏற்கனவே தஞ்சை அரண்மனையில் இருந்து சொக்கநாதரின் பரம்பரையான திருமலை நாயக்கருக்கு ஒரு பெண் கொடுத்தார்கள். ஒரு பிரச்சனையில் கணவன் மனைவிக்கு இடையே ஏற்பட்ட வாய் தகறாரில் தஞ்சைப் பெண் தன்னுடைய நாட்டை உயர்வாகவும், மதுரையை இழிவாகவும் பேசி விட, இதனால் கோபமுற்ற திருமலை நாயக்கர் அப்பெண்ணை கொன்று விட்டான். இதன் காரணமாகவும், சொக்கநாதர் பரம்பரை தளபதியாக இருந்து பின் மன்னர் பரம்பரையாக வந்தவர்கள் என்ற காரணத்துக்காவும் விஜயராகவ நாயக்கர் மதுரை சொக்கநாதருக்குப் பெண் தர மறுத்ததாகக் கூறப்படுகிறது.

இதனால் ஆத்திரமுற்ற சொக்க நாதர் தஞ்சை மீது போர்த்தொடுத்தார். போரில் விஜயராகவநாயக்கரும் அவரது மகன் மன்னாருதேவனும் இறந்து போனார்கள். பின் மங்கம்மாவை மணந்து கொண்டார் சொக்கநாதர்.

இவர் இந்து கோயில்களுக்கு நிறைய முக்கியத்துவம் கொடுத்ததால் இவர் மீது வெறுப்புற்ற மனுச்சி என்ற வெளி நாட்டுக்காரர் இவருக்கு 700 மனைவியர் மற்றும் 7000 மனைவி போன்ற உறவுடைய பெண்கள் இருந்தாக பொய்யாய் எழுதி வைத்துள்ளதாகவும் வரலாற்று ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

நம் வரலாற்றை நாம் எழுதாமல் பிறர் எழுதும் போதுதான் பிழைகள் ஆரம்பமாகின்றன.

# 34. திப்பு சுல்தான்

மைசூர் மன்னன் ஹைதர் அலிக்கும், பக்ருன்னிசாவுக்கும் **1750** ஆம் ஆண்டு பிறந்ததான் திப்பு சுல்தான். ஹைதர் அலி ஆரம்பத்தில் மைசூர் ராஜா கிருஷ்ணராஜாவிடம்i குதிரை வீரனாக இருந்து பின் மன்னரானவன்.

கி.பி.**18** ஆம் நூற்றாண்டில் பலகீனமாக இருந்த மைசூர் அரசைப் பாதுகாக்கும் பொறுப்பை படைதளபதி ஹைதர் அலியிடம் ஒப்படைத்தார் மைசூர் மன்னர். ஹைதர் மராட்டியரை விரட்டியதோடு ஸ்ரீரங்கத்திலிருந்து தானே ஆட்சிப் புரியத் தொடங்கினான்

தன் தந்தை **1782** இல் இரண்டாவது மைசூர் போரில் மரணமடைந்து விட, அவரது மறைவுக்குப் பின் மன்னராகப் பொறுப்பேற்றுக்கொண்டவன் திப்பு. திப்பு ஹைதர் அலியின் இரண்டாவது மகன்.

திப்பு பொறுப்பேற்றபோது நாடு முழுவதும் ஆங்கிலேயரின் ஆதிக்கம் மேலோங்கி இருந்தது.

இருநூறு ஆண்டுகள் ஆட்டு மந்தையாக வாழ்வதை விட இரண்டு நாட்கள் சீறும்புலியாக வாழ்வதே சிறந்தது என்று சூளுரைத்தவன் திப்பு. ஆங்கில ஏகாத்திபத்தியத்தை அடியோடு ஒழித்து விட்டுத்தான் பஞ்சணையில் உறங்குவேன் என்று சபதமெடுத்தவன்.

திப்பு ஒழுக்கமுள்ளவன். சமயப்பற்று மிகுந்தவன். அரசியல் திறமை வாய்ந்தவன். அரபி, உருது, கன்னடம், பாரசீக மொழிகளை பேசியவன். சிறந்த நிர்வாகி. வருமான இழப்பைப் பற்றி கவலைப் படாமல் பூரண மதுவிலக்கை அமல்படுத்தியவன்.

நாட்டை வஞ்சகத்தாலும், சூழ்ச்சியாலும் அவர்கள் சுற்றி வளைத்தபோது எதிர்த்துப் போரிட்டு மடிந்தவர் பட்டியிலில் திப்பு சுல்தானும் ஒருவர்.

தோல்வி நெருங்கும் போது மன்னர்கள் சரணடைவது அல்லது போர்க்களத்தை விட்டு ஓடிவிடுவது பெரும்பாலான மன்னர்களின்

வழக்கம். ஆனால் திப்பு தமிழ் மன்னர்களைப் போன்று கடைசிவரை தன்னுடைய எதிர்ப்பைக் காட்டி போர்க்களத்திலேயே மாண்டான்.

இறைவன் அரசு என்று தன்னுடைய ஆட்சியை அறிவித்துக்கொண்டவன், அடிமைப்படுத்தும் ஆங்கிலேயரை விரட்ட அனுப்பப்பட்ட வீரன் என்று தன்னை பிரகடனப்படுத்திக்கொண்டான். தன்னுடையப் படைக்கு புனிதப் படை என்றே அவர் பெயரிட்டு அழைத்தான்.

நிர்வாக வசதிக்காக வருவாய் மற்றும் நிதித்துறை, ராணுவத்துறை, சட்டத்துறை, வணிகம், கடல், நிதிகாப்பகம் மற்றும் நாணயம் என ஏழு துறைகளாகப் பிரித்து ஆட்சி செய்தான்.

உள்ளாட்சிகள் சிறப்பாக நடைபெற ஒவ்வொரு பகுதிக்கும் ஆட்சித் தலைவர், ராணுவத் தலைவரை நியமித்திருந்தான்.

திப்பு தமது ஆட்சிக்காலத்தில் கடல் சார்ந்த பகுதியை `யான் சுபா' எனவும், மலைப்பகுதியை `தாரன்சுபா'எனவும் சமவெளியை`காப்ரா' எனவும் மூன்று வகைகளாகப் பிரித்திருந்தான்.

பாரசீகமொழி மீது பற்றுக்கொண்டிருந்த காரணத்தால் பல நகரங்களை அழகிய பொருள் தரும்படியான பாரசீக பெயருக்கு மாற்றினான்.

திப்பு முஸ்லிமாக இருந்தாலும் சிருங்கேரி சாரதா மடத்திற்கு அவன் எழுதிய 20 மேற்பட்ட கடிதங்கள் அவன் இந்து மத்தின் மீதும் பற்று கொண்டவனாக இருந்தான் என்பது புலப்படுகிறது.

பரசுராமபாகு எனும் மராட்டிய தளபதி சிருங்கேரி மடத்தின் யானை, குதிரை, பல்லக்கு, அணிகலன்கள் ஆகியவற்றை கொள்ளை அடித்ததுடன் சாரதாதேவியின் சிலையையும் இடித்து தள்ளினோன். அங்கிருந்த பலரை கொன்றான். மடத்தின் சாமியார் ஓடி ஒளிந்து கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. அவர் தமக்கு உதவும்படி திப்புவுக்கு கடிதம் எழுதினார்.

`புனிதமான இடங்களை அழிப்பவர்கள் தன் தீய செயல்களுக்கான பலன்களை அனுபவிப்பார்கள். குருவுக்கு தீமை செய்பவர்களுக்கு அழிவே உண்டாகும்' என பதில் கடிதம் அனுப்பியதோடு, மடம் மறுசீரமைப்பு செய்ய நிதியுதவி, பொருளுதவி, தானிய உதவி செய்ய உத்தரவிட்டான். மேலும் நிதியுதவி தேவையெனில் கிராம நிர்வாக அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளும் படி கூறினான். அத்துடன் மடத்துக்கு யானையையும் அனுப்பி` தங்களுக்கு யானை அனுப்பி உள்ளேன் கோயிலின் யானை, குதிரையைக் கொள்ளையடித்தவர்கள் தெய்வத்தால்

தண்டிக்கப்படுவார்கள். சாதரா தேவியின் சிலையை மறுபடியும் பிரதிஷ்டை செய்து ஹோமம் நடத்தவும் நிதியுதவி வழங்குகிறேன்' என்று தெரிவித்தான்.

கொள்ளையடித்தவனை தேடவும் பூனாவுக்கு ஒரு ஆள் அனுப்ப அந்த ஆள் வழியிலேயே இறந்து விட மறுபடியும் ஆள் அனுப்புவதாகத் தெரிவித்தான்.

மடத்தின் சாமியார் கடல் நீராடச் செல்லும் போது இருவரை பாதுகாப்புக்கு போட்டான்.

தனது எதிரிகளை வெல்லும் வலிமையை அருளும்படியும், தேவியை தினமும் மூன்று முறை பூசை நடத்தி பிராத்திக்கும்படியும் கேட்டுக்கொண்டான்.

உழவர்கள் கலப்பைபோன்ற விவசாய பொருட்களை வாங்க கடன் எளிதில் கிடைக்க உத்தரவிட்டான்.

பெண்களையும், பிற மதத்தினரையும், குழந்தைகளையும் மதிக்கச் சொல்லி தன் ராணுவத்தினருக்கு கட்டளையிட்டான்.

கேரளத்தின் மலபார் பகுதியை வென்றபோது அங்கிருந்த குருவாயூர் கோயில் சிலையை பூசாரிகள் பாதுகாப்பு கருதி வேறொரு இடத்தில் கொண்டு போய் மறைத்து வைத்து விட்டனர். இச்செய்தியை கேள்விப்பட்ட திப்பு பூசாரிகளை அழைத்து மறுபடியும் நிலையை கோயிலில் கொண்டு வந்து வைக்கச் சொன்னதோடு அப்பகுதி வரிவசூல் அனைத்தும் கோயிலுக்கே கிடைக்கும் படி செய்து விட்டுச் சென்றான்.

திப்பு ஸ்ரீரங்கம் அருகே இருந்த வனப்பகுதியில் வேட்டையாட ஆயிரம் வீரர்களுடன் மாட்டுவண்டியில் செல்வான். வேட்டையில் சிறந்த வீர்களுக்கு பரிசுகள் வழங்கி உற்சாகப்படுத்துவான்.

திப்பு `இசைப்புலி' ஒன்றை வைத்திருந்தான். புலியினுள் பியானோ இசைக்கருவி பொறுத்தப்பட்டிருக்கும். உள் பகுதியில் உள்ள விசையை இயக்கும் போது புலி உறுமுவது போலவும், அடியில் கிடக்கும் ஆங்கிலேய சிப்பாய் அலறுவது போலவும் அந்த கருவியை வடிவமைத்திருந்தான். அவனது பொழுது போக்குக் கூட வீரம் தழுவியதாக இருந்தது.

ஹைதர் அலி மன்னரானது மைசூர் மன்னருக்கும், மராட்டியருக்கும், ஹைதராபாத் நிஜாம்களுக்கும் பிடிக்கவில்லை. அதனால் ஹைதர் இறந்த

பிறகு ஆங்கிலேயருடன் சேர்ந்து கொண்டுஅவரது மகன் திப்புவை எதிர்த்தனர் இம்மூவரும்.

**1792** இல் நடைபெற்ற மூன்றாம் மைசூர் போரில் திப்பு தனது ராஜ்ஜியத்தில் பெரும்பகுதியை இழந்ததோடு, பத்து, எட்டு வயதான தன் இரு மகன்களையும் பிணையக் கைதிளாக அனுப்பும் நிலைக்குத் தள்ளப்பட்டான். சுமார் இரண்டு கோடி ரூபாயை மூன்று தவணைகளாக செலுத்திய திப்பு, இரண்டாண்டுகளில் தன் மகன்களை மீட்டான்.

**1799** இல் மீண்டும் நான்காவது முறையாக போர் எடுத்து வந்தனர் ஆங்கிலேயர். போரில் வஞ்சகர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கொண்ட போதும் தனியாளாக களம் இறங்கினான் திப்பு. தன்னை அடையாளம் காட்டிக்கொள்ளும் தலைப்பாகை, பல்லக்கு இன்றி சாதாரண போர் வீரனைப் போல் களத்தில் இறங்கி சண்டையிட்டான். ஆனால் மீர்சாகிப் என்ற திப்புவின் ஆளே எதிரிகளை தடுக்காமல்,அவர்களை நீர் வாயில் வழியாக கோட்டைக்குள் வர அனுமதித்தது பெரும் துரோகமாக அமைந்தது. போரின் போக்கையே மாற்றி விட்டது.

# 35. அக்பர்

தனது தந்தை ஹுமாயூன் மாடியிலிருந்து தவறி விழுந்து மரணமடைந்து விட, அவரது பதிமூன்றே வயது நிரம்பிய அக்பர் தந்தை இறந்த நான்காவது நாளில் முகலாய மன்னராக முடி சூட்டிக்கொண்டார்.

வீரமும், விவேகமும் கொண்ட பைராம்கான் என்ற தளபதி ஹுமாயூன் இறந்ததும் சூழ்ச்சிக்காரர்கள் நாட்டை பிடிக்காமல் இருக்க மூன்று நாட்களுக்கு மன்னர் இறந்த செய்தியை மறைத்து, வெளியூரில் இருந்து அக்கர் வந்த பிறகு மரண செய்தியை அறிவித்து அக்பருக்கு முடிசூட்டினார்.

கி.பி. 1542 அக்டோபர் 15 ஆம் நாள் இந்து சிற்றரசர் இராணா வீர்சாலின் அரண்மனையில் பிறந்தார் அக்பர். அப்போது ஹுமாயூன் நாட்டை இழந்து தெருக்களில் அலைந்து திரிந்து கொண்டிருந்தார்.

இதன் காரணமாகவோ என்னவோ இயல்பிலேயே இந்துக்கள்மீது அன்பாக நடந்து கொண்டார் அக்பர். ரஜபுத்திரர்கள் மீது அதிக அன்பு கொண்டிருந்தார். பல ரஜபுத்திர பெண்களை மணந்தார். ஜெய்பூர் மன்னர் ராஜா பிகர்மாலின் மகளை மணந்து கொண்டார். அவளது தம்பி ராஜா பகவான்தாஸ் அக்பரின் முக்கிய அமைச்சர்களில் ஒருவராக அமர்த்தப்பட்டார்.மான்சிங் என்பவரும் அமைச்சராக இருந்தார்.

இரஜபுத்திர அரசர்கள் யாரேனும் தன்னை எதிர்த்தால் அவர்களை வென்று தனக்கு அடங்கிய சிற்றரசர்களாக அவர்களிடமே நாட்டை ஒப்படைப்பது அக்பரின் வழக்கமாக இருந்தது. ஆனால் ஆப்பானிய படைகளை வென்றபோது இவ்வாறு செய்யாமல் தன் நாட்டுடன் இணைத்துக்கொண்டார்.

அக்பர் முதன் முதலாக தன் ஒன்பதாவது வயதில் கஜினி என்ற இடத்தின் கவர்னராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். ஹுமாயூன் டெல்லியை கைப்பற்றிக்கொண்ட பிறகு தன்னுடைய அரசியல் வாரிசாக அக்பரை நியமித்தார்.

அப்துல் லதீப் என்ற ஆசிரியர்தான் அக்பருக்கு ஞானத்தை போதித்தார். உலக அமைதியை உருவாக்க வேண்டும் என்று விரும்பினார். அவரின் போதனைகள் காரணமாகவே அக்பருக்கு பிற மதத்தை மதிக்க வேண்டும் என்ற ஞானம் தோன்றியது.

உண்மையை தேடும் ஆன்மீக சிந்தனைவாதியாக இருந்தார். குறுகிய சமய நோக்கு கொண்டவராக இருக்க வில்லை. மு லிம் அல்லாத பிற மதத்தினர் செலுத்தவேண்டிய ஜிஷியா என்னும் வரியை நீக்கினார். வியாழன்தோறும் எல்லா மதத்தினரும் ஒன்று கூடி விவாதிக்க ஏதுவாக பதேபூர் சிக்கிரியில் தொழுகைக் கூடம் ஒன்றை கட்டினார். அதில் இந்து, சமண, கிருத்துவ மதத்தினர் கலந்து கொண்டனர்.

இஸ்லாமிய நம்பிக்கைகள் சிலவற்றின் மீது அக்பர் அவநம்பிக்கை கொண்டிருந்தார். குறிப்பாக இறுதி தீர்ப்பு நாள், இறந்தவர் மீண்டெழுதல் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

**1580** இல் கோவாவில் முஸ்லிம்களை துன்புறுத்தி கொலை செய்த போர்த்துக்கீசியரை அக்பரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இதற்குக் காரணம் தன்னிடம் அக்பரிடம் வலுவான கப்பற்படை இல்லாததே.

பல்வேறு மதங்களில் உள்ள பல நல்ல கருததுக்களை ஒன்றிணைத்து தீன் இலாகி என்ற புதிய மதத்தை உருவாக்கினார். **1582** இல் இம்மதம் உருவாக்கப்பட்டது. தேசிய அரசு அமைக்க ஆசைப்பட்ட அக்பர் தேசிய மதம் ஒன்றை உருவாக்கும் பொருட்டே தீன் இலாகியை கொண்டு வந்தார். சிலை வழிப்பாட்டை வெறுத்தார்.

தீன் இலாகியில் சேர்பவர்கள் இறச்சி உட்கொள்ளக் கூடாது, குறைந்த பட்சம் அவர்கள் பிறந்த மாதத்திலாவது உண்ணாமல் இருப்பது நல்லது என்றார். பறவை, விலங்குகளை வேட்டையாடக் கூடாது என்றார்.அப்படியோனவர்களுடன் எவ்வித தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என்றார்.நெருப்பை புனிதமாக கருத வேண்டும் என்று கூறினார். சிறுமிகளை மணம் செய்யக் கூடாது என்று கட்டளை விதித்தார்.

ஆனால் இந்த மதத்தில் யாரையும் சேரும்படி கட்டாயப் படுத்தவில்லை. விரும்பியவர்கள் மட்டுமே அக்பர் முன்னிலையில் குல்லாய் அணிவிக்கப்பட்டு சேர்த்துக்கொள்ளப்பட்டனர். யாரையும் வற்புறுத்தவும் இல்லை. அதனால் அக்பருக்குப் பின் இம் மதம் காணாமல் போய் விட்டது.

இம் மதத்தில் சேர்ந்த ஒரே பிரபலம் மகேஸ்தாஸ் எனப்படும் பீர்பால் மட்டுமே. அவர் அக்பருடைய அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தார். அக்பர் புலால் உணவை தவிர்த்தார். இந்து நூல்கள் பாரசீக மொழியில் மொழிப்பெயர்க்க உதவினார். மகாபாரதம், இராமாயணம் ஆகியவை அவற்றில் முக்கியமானவை. இந்துக்கள் புனிதமாகக் கருதப்படும் மாட்டிறைச்சி உண்பது தடுக்கப்பட்டது.

அயினி அக்பர், அக்பர் நாமா, துசுக் இ ஜகாங்கீரி போன்ற நூல்கள் அக்பரின் வாழ்க்கை வரலாற்றை தெரிந்துக்கொள்ள உதவும் நூல்களாகும்.

ஆனால் அக்பர் எழுதப் படிக்கத் தெரியாத அரசராக இருந்தார். அவருக்கு படிக்கத் தெரியாது எனினும் அவரது அரண்மனையில் இருபத்திநாலாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களை சேர்த்து வைத்திருந்தார்.

ஓவியத்தின் மீது அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். தனது குடும்பத்தார் மீது அதிக பாசம் வைத்திருந்தார். குறிப்பாக தன் மகன் சலீம் எனப்படும் ஜகாங்கீர் மீது அளவற்ற அன்பு வைத்திருந்தார். இந்த சலீம் ரஜபுத்திர மனைவிக்கு பிறந்தவன். அதுவும் திருமணமாகி நீண்ட நாட்கள் ஆனபிறகு ஒரு மு லிம் முனிவரின் ஆலோசனைப் படி சிக்ரி கிராமத்தில் சென்று தங்கி இருந்த பிறகு பிறந்தவன் என்பதால் அந்த ஊரையே பதேபூர் சிக்கிரி என்று பெருநகராமாக பின்னர் மாற்றினார் அக்பர்.

தனது தந்தை வயதுடைய தளபதி பைராம்கானின் ஆதிக்கம் ஒரு கட்டத்தில் மேலோங்கி இருப்பதை அக்பர் புரிந்து கொண்டார். அக்பர் சொல்லாமலேயே தன்னிச்சையாக சில போர்க்கைதிகளை பைராம்கான் கொன்றார் என்ற குறை அக்பருக்கு உண்டு. அத்துடன் நில்லாமல் பைராம்கானின் யானையை அக்பரின் யானை ஒரு நாள் மதம் பிடித்து முட்டி மோதி குடல் வெளிவரும்படி செய்தது. யானை பாகனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் பைராம் கான் பாகனை தண்டித்தான். யானை தவறு செய்தால் பாகன் என்ன செய்வான் பாவம் என்று நினைத்தார் அக்பர்.

அத்துடன் சில சதி செயல்களில் பைராம்கான் ஈடுபடுவது போல் அக்பருக்கு தோன்றியதால் அவரை தளபதி பொறுப்பில் இருந்து நீக்க முடிவு செய்தார்.

இதனால் அவருக்கு ஓய்வு கொடுத்து மெக்காவுக்கு புனிதப் பயணம் போகச் செய்தார். திடீரென்று அரசாங்க பதவி இழந்து ஆன்மீகப் பயணம் போக பைராம்கானின் மனம் இடம் தரவில்லை. அவருக்கு சில

நண்பர்கள் இருந்தார்கள். அவர்களின் தூண்டுதலின் பேரில் ஒரு படையைத் திரட்டிக்கொண்டு அக்பரை நோக்கி படையெடுத்து வர, அக்பர் படையை அனுப்பி அவரை கைது செய்து வரும்படி கூறினார்.

கைது செய்து வரப்பட்ட தன்னுடைய பழைய தளபதியை அக்பர் மன்னித்தார். மறுபடியும் மெக்காவுக்குப் போகச் செய்து பண உதவி செய்தார். பாதுகாப்புக்கு ஆட்களையும் அனுப்பினார். அவ்வாறு பயணம் மேற்கொண்ட பைராம்பானை அவனது பழைய எதிரிகள் கொன்று பழி தீர்த்துக்கொண்டனர்.

பைராம்கானுக்கு மாற்றாக அட்காகான் என்பவரை நியமித்தார். அவர் நேர்மையாகவும், விசுவாசத்துடனும் நடந்து கொண்டார். அக்பரின் அரண்மனையில் அவருக்கு செவிலித்தாயாக இருந்த மகாம் அங்கா என்பவள் மகன் ஆதம்கான். தீய குணங்கள் நிரம்பியவள். அவனும் கெட்ட குணங்கள் நிறைந்தவனாகவே இருந்தான். இவன் மால்வா பிரதேசத்தின்மீது அக்பரின் படைக்கு தலைமை தாங்கிச் சென்ற போது அந்த அரண்மனையை சூறையாடி தீயிட்டு கொளுத்தினான். பல பெண்களின் கற்பை சூறையாடினான்.

அவன் அட்காகானை சூழ்ச்சியால் கொன்று விட்டு அப்பதவியை பறித்து விடலாம் என்று கணக்குப் போட்டு ஒரு அதிகாலைவேளையில் அட்காகானை கொன்று விட, எதிர்பாராத விதமாக அக்கொலையை அக்பர் பார்த்து விட, அவனை கை, கால்களை கட்டிப்போட்டு நாற்பதடி உயிரத்திலிருந்து தூக்கிப் போடச் செய்தார். அப்போதும் அவன் உயிர் போகாமல் இருக்கவே மறுபடியும் தூக்கில்

போடச் செய்து கொன்றார்.

அக்பரின் ஆட்சியில் போதுதான் மத்தியப் பிரதேசம் கோட்வானாவை ஆண்ட ராணி துர்காவதி.

# 36. ஷாஜகான்

ஜோத்பூரைச் சேர்ந்த ராஜா உதய் சிங்கின் மகள் ஜகத்கோசெயின் என்ற இரஜபுத்திர பெண்ணுக்கும் ஜகாங்கீருக்கும் 1592 இல் ஜனவரி இரண்டாம் தேதி பிறந்தான் குர்ரம் என்ற ஷாஜகான்.

ஜகாங்கீரின் வெவ்வேறு மனைவியருக்குப் பிறந்த பிள்ளைகள் மொத்தம் ஐந்து பிள்ளைகள்.

அவர்களில் குர்ரம் எனப்படும் ஷாஜகான், குஸ்ரு இருவரும் தாத்தா அக்பரின் நேரடி கண்காணிப்பில் வளர்ந்தனர். சிறந்த ஆசியரியர்களைக் கொண்டு அவர்களுக்கு கல்வி போதிக்கப்பட்டது. ராணுவப் பயிற்சியும் வழங்கப்பட்டது.

குஸ்ரு கலகக்காரன் என்ற முத்திரை குத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட, அவனைக் கொன்று ஆட்சிப் பீடத்தில் ஏறியவன் ஷாஜகான்.

1628 பிப்ரவரி 14 இல் முடிசூட்டு விழா நடைப்பெற்றது.

கி.பி. 1612 ஆம் ஆண்டு மும்தாஜ் எனப்படும் அர்ஜூம்மானு என்பவளை இரண்டாவதாக திருமணம் செய்தான்

அவர்களின் திருமணத்தின் போது ஷாஜகானின் தந்தை ஜகாங்கீர், `இன்று முதல் இந்த அரண்மனைக்கு நீ முதன்மையானவள்' என்னும் பொருளில் அவளை வாழ்த்தி மும்தாஜ் என்னும் பெயரை சூட்ட அது முதல் அப்பெயரிலேயே அவள் அழைக்கப்பட்டாள்.

தான் எங்கு போனாலும் அவளை உடன் அழைத்துச் சென்றான். போருக்குப் போகும் போது கூட உடன் சென்றாள் மும்தாஜ். அரசாங்கம், அலுவல்கள் சம்பந்தப்பட் அனைத்து விஷயங்களையும் தன் மனைவியிடம் வந்து ஒப்பிக்கும் ஒப்பில்லா கணவனாக இருந்தான். தன் மனைவியின் ஆலோசனையை ஏற்று சில திருந்தங்களையும் செய்தான்.

1631 ஆம் அண்டு ஜுன் ஏழாம் தேதி மத்திய இந்தியாவுக்கு ஷாஜகான் படையுடன் சென்றிருந்தான். அப்போது மும்தாஜ் நிறைமாத கர்ப்பிணி. கூடாரத்துக்குள் இருந்த மும்தாஜுக்கு பதினான்காவது குழந்தையாக ஒரு பெண்ணை பெற்று விட்டு ஜன்னிக் கண்டு இறந்து போனாள். ஷாஜகான் துடித்தான். போரின் போது ஏற்பட்ட பேரிடராக அவனுக்கு இது அமைந்தது. அவளை அங்கேயே பர்ஹான்பூரில் அடக்கம் செய்து விட்டு டெல்லி திரும்பினான்.

அவள் பிரிவால் வாடிக்கொண்டிருந்தவன் ஆறு மாதம் கழித்து அவள் உடலை தோண்டி எடுத்து வந்து தற்போது உள்ள யமுனை நதிக்கரையில் மறுபடியும் புதைத்து அவள் நினைவாக உலகம் போற்றும் தாஜ்மகால் கட்டினான்.

அதுவரை ஆக்ராவை தலைநகராகக் கொண்டுதான் முகலாய மன்னர்கள் ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள். ஷாஜகான்தான் 1639 ஆம் ஆண்டு தன்னுடைய நாற்பத்தொன்பதாவது வயதில் தலை நகரை டெல்லிக்கு மாற்றினான். அப்போது கட்டியதுதான் டெல்லி செங்கோட்டை. ஷாஜகான் காலத்தில்தான் கோமேதகம், முத்து, வைரம், நீலம் போன்ற கற்களால் செய்யப்பட்ட மயில் தலைபொறுத்தப்பட்ட உலகப்புகழ் வாய்ந்த மயிலாசன சிம்மாசம் செய்யப்பட்டது. அதில் அமர்ந்துதான் அவன் அரச தர்பாரில் கலந்து கொண்டான். பொது இடங்களில் மது அருந்தக் கூடாது என்று கட்டளை இட்டான். இந்துக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் பசுக்களைக் கொல்லக் கூடாது என்று ஆணை பிறப்பித்தான். அதே நேரத்தில் மு லிம்களை இந்துக்கள் யாரும் வீட்டு வேலைகளுக்கு வைத்துக்கொள்ளக்கூடாது என்று சொன்னான்.

ஷாஜகானின் மூன்றாவது மகன் ஔரங்கசீப்புக்கு தென்னிந்தியாவை ஆளும் பொறுப்பு தரப்பட்டு இருந்தது.

கண்டிப்பு சிக்கனத்துக்கு பெயர் போனவன். ஒரு நாள் இவனது பதவியை ஷாஜகான் சொல்லாமல் கொள்ளாமல் பறித்துக்கொள்ளவும் ஔரங்கசீப்புக்கு தந்தை மீது கோபம் வந்தது. அத்துடன் தன் தந்தை தன் அண்ணன் தாரா மீது மட்டும் அதிக பற்றும் பாசம் வைத்தது அவனுக்கு பிடிக்கவில்லை. இது தந்தை மீது வெறுப்பாக வளர்ந்தது. தன் அண்ணன் மீதும் அவனுக்கு கோபம் துளிர்த்தது.

ஷாஜகானின் காலம் முகலாயர்களின் பொற்காலம் என்று சொல்லப்படும் அதே வேளையில் குஜராத், தட்சிணப்பிரதேசம் போன்ற மாநிலங்களில்

கடுமையான வறட்சி நிலவியதால் மக்கள் நாய்க்கறி சாப்பிட்டதோடு, மனிதர்களையும் அடித்து சாப்பிட்டதாக வரலாறு கூறுகிறது. சுடுகாட்டிலிருந்து மனித எலும்புகளைத் தோண்டி எடுத்து மாவு போல் அரைத்து அதை கோதுமை மாவில் கலந்து ரொட்டி செய்து தின்றதாக கூறுகிறார்கள்.

ஷாஜகான் மறுபடியும் ஔரங்கசீப்புக்கு பதவி வழங்கினான். பிஜப்பூர், கோல்கொண்டா(ஹைதராபாத்) மீது படையெடுக்கும்படி தந்தை கூறியதைக் கேட்டு ஔரங்கசீப் படையுடன் செல்ல, கடைசி விநாடிகளில் படையை வாபஸ் வாங்கு என்று தந்தை கூறியது ஔரங்கசீப்புக்கு துளிக்கூட பிடிக்கவில்லை. தன் அண்ணனின் சொல் கேட்டு தந்தை ஆடுகிறார் என்று நினைத்த ஔரங்கசீப் ஒரு கட்டத்தில் டெல்லி மீது போர்த்தொடுத்து தந்தையை சிறையில் தள்ளினான். தன் அண்ணன் தாரா, ஷூஜா, தம்பி முராத் ஆகியோரை சிறையில் தள்ளியும் கொன்றும் ஆட்சியைப் கைப்பற்றினான் ஔரங்கசீப்.

ஷாஜகான் காலத்தில் ஜும்மா மசூதி, முத்து மசூதி போன்ற கட்டிடங்கள் கட்டப்பட்டன. டெல்லி, காஷ்மீர், லாகூரில் அழகிய பூங்காக்கள் கட்டப்பட்டன.

இவன் சிறந்த பாடகனாகவும் இருந்தான். தன் அவையில் ஜெகநாதன் , இராமதாஸ், மகாபத்ரா போன்ற பாடகர்களை ஆதரித்து வந்தார்.

1657 இல் உடல் நிலை சரியில்லாத நிலையில் சிறைக்குள் தள்ளப்பட்ட ஷாஜகான் எட்டு ஆண்டுகள் அங்கேயே கழித்தான். பின்னர் தனது எழுபத்து நான்காவது வயதில் 1666 ஜனவரி 22 ஆம் தேதி சிறையிலேயே உயிர் விட்டிருந்தான் ஷாஜகான்.

திருப்பதி வெங்கடேச பெருமாளுக்கு 100 கிலோ தங்கத்தில் சங்கிலி செய்து கொடுத்த அதே ஷாஜகான்தான் காசியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கோயில்களை இடித்து தரைமட்டமாக்கினான். ஷாஜகான் `ஆலம்கீர்' என்ற புகழ்ப்பெற்ற வாளை வைத்திருந்தான்.

https://t.me/Knox_e_Library

# 37. ஔரங்கசீப்

1618 ஆம் ஆண்டு நவம்பர் நான்காம் நாள் பிறந்தவர் முகைதீன் முகமது ஔரங்கசீப். ஷாஜகானின் ஆறு குழந்தைகளில் ஒருவர். ஆண் மக்களில் மூன்றாவதாகப் பிறந்தவர்.

ராணுவத்தில் முறையான பயிற்சியும், அனுபவமும் கொண்டவர். தக்காணத்தின் ஆளுநராக 1648 முதல் 1644 வரை ஒரு முறையும் 1652 முதல் 1658 என இரண்டாவது முறையும் பணியாற்றியவர். தன்தந்தை ஷாஜகானின் காந்தகார் படையெடுப்பின் போது தலைமையேற்று நடத்தியவர்.

ஷாஜகான் நோயுற்றபோது அவரை சிறையில் தள்ளி தன் உடன் பிறந்த சகோதரர்களை ஒவ்வொருவராக கொன்று விட்டு பதவியில் அமர்ந்தவர்.

தக்காணத்தின் ஆளுநராகப் பணியாற்றிய ஔரங்கசீப் டெல்லியின் மன்னனாக 1658 இல் முடி சூட்டிக்கொண்டார். அவர் பேரரசர் என்பதற்கு அடையாளமாக இவ்விழா டெல்லியில் இரண்டு மாதங்களாக கொண்டாடப்பட்டது. பண விஷயத்தில் ஔரங்கசீப் சிக்கன பேர்வழி என்றாலும் முடிசூட்டு விழாவை முன்னிட்டு உயர் பதவியில் இருப்போர், கல்வியாளர்கள், ஞானிகள், பிச்சைக்காரர்கள் என அனைவருக்கும் பணம் தாராளமாக செலவு செய்யப்பட்டன.

ஷாஜகானுக்கு தன் மூத்த மகன் தாரா ஷுகோ மீது அளவற்ற பாசம் இருந்தது. தனக்குப் பிறகு அவனே ஆட்சிக் கட்டிலில் அமர வேண்டும் என்று விரும்பினார். தாரா மென்மையான குணம் கொண்டவர். ஆனால் ஔரங்கசீப் முரட்டு குணம் வாய்ந்தவராக இருந்தார். தன் தந்தை தன் அண்ணன் மீது காட்டும் அளவற்ற பாசத்தை அவுரங்கசீப் விரும்பவில்லை. அதனால் தக்க சமயம் பார்த்து தந்தையை சிறையில் தள்ளி விட்டு மன்னராக முடி சூட்டிக்கொண்டார். பதினைந்து வயதிலேயே பத்தாயிரம் குதிரைப் படை வீரர்களுக்கு தளபதியாக விளங்கியவர் ஔரங்கசீப்.

தன் பதவிக்கு யார் தடையாக வந்தாலும் ஒன்று அவர்களை சிறையில் தள்ளினார். அல்லது சிரசேதம் செய்தார்.

கல்வியில் சிறந்த வேத, உபநிடதங்கள் கற்ற தாராவிற்கு தீவிர முஸ்லிம்களின் ஆதரவு கிட்டவில்லை. அவர்கள் அவுரங்கசீப்பை ஆதரித்தனர்.

தன் சகோதரர்களின் ஒருவரான முராதின் என்பவன் மீது கொலைப்பழி சுமத்தி குவாலியர் சிறையில் அடைத்தார். மற்றொரு சகோதரன் ஷுஜா ஔரங்கசீப்பின் படையுடன் மோதி தோற்றுப் போய் மலையில் ஒளிந்து கொள்ள அவனை தேடிப் பிடித்து வந்து அவனையும், அவனது குடும்பத்தையும் ஒட்டு மொத்தமாக கொலை செய்தான்.

ஔரங்கசீப்ஆக்ராவை பிடித்துக் கொண்ட பிறகு தாரா லாகூர் சென்றான். அங்கு கத்தியவார் மன்னனின் ஆதரவுடன் பெரும் படை ஒன்றை திரட்டிக்கொண்டு **1659** இல் தம்பியுடன் மோத வந்தான் தாரா.

தேயோராய் என்னுமிடத்தில் நடைப்பெற்ற போரில் தாரா தோற்று விட, அவனை பிணையக் கைதியாக இழுத்து வந்தனர். யானை மீது சங்கிலியால் கட்டப் பட்ட நிலையில் டெல்லியில் ஊர்வலமாக கொண்டு சென்றார்கள். தாராவை ஆளுநராகப் பார்த்த மக்கள் கைதியாகப் பார்க்க மனம் கசிந்தார்கள். ஊர்வலத்துக்குப் பின் சிறைக்குள் தள்ளப் பட்ட தாராவின் தலை குற்றவாளி என்று பழி சுமத்தப்பட்டு தலை துண்டிக்கப்பட்டது. தாராவின் மூத்த மகனுக்கும் மெல்ல கொல்லும் விஷம் ஒபியம் கொடுக்கப்பட்டது. அவனது இன்னொரு மகனுக்கு மட்டும் மன்னிப்பு வழங்கப்பட்டது.

ஒரே வருடத்தில் தன் உடன் பிறந்தவர்கள் அனைவரையும் பல்வேறு காரணங்கள் காட்டி பரலோகம் அனுப்பினார்.

ஜோதிடம், நல்ல நேரம், ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டவராக இருந்தார்.

ஔரங்கசீப்புக்கு நான்கு மனைவியர். அவருடைய முதல் மனைவிக்கு மூன்று பெண்களும், இரண்டாவது மனைவிக்கு இரண்டு மகன்கள் ஒரு மகளும் பிறந்தனர். மூன்றாவது மனைவிக்கு ஒரு மகளும், நான்காவது மனைவிக்கு ஒரு மகனும் பிறந்தனர்.

ஔரங்கசீப்தன் சொந்த மகன்களையும் அன்பு காட்டாது எச்சரிக்கை உணர்வுடனே இருந்தார். தன் மூத்த மகன் முகமது சுல்தான்,

தன்னுடைய அனுமதி பெறாமல் வங்காளத்தில் உள்ள தன் உறவினர் வீட்டிற்குச் சென்று தங்கி இருந்தான் என்ற காரணத்துக்காக அவனை குவாலியர் சிறையில் தள்ளினார். அவனுக்கு ஆயுள் தண்டனை கொடுக்கப்பட்டு, அங்கேயே இறந்தான்.

இரண்டாவது மகன் ஷா ஆலம் என்பவனுடனும் கருத்து மோதல் வெடித்தது. பிஜப்பூர், கோல்கொண்டா ஆகியவற்றின் மீதான ஆக்கிரமிப்பை ஆலம் எதிர்த்தான். இதனால் அவன் பதவி பறிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான்.

நான்காவது மகன் அக்பருக்கு தன் தந்தையின் தீவிர மதப்பற்று பிடிக்கவில்லை. இதனால் தன் தந்தைக்கு எதிராக 1704 இல் கலகம் செய்து விட்டு பாரசீகத்துக்கு தப்பியோடி அங்கேயே இறந்து போனான். இன்னொரு மகனின் கால் தவறுதலாக ஔரங்கசீப்பின் சிம்மாசனத்தில் பட்டு விட்டதற்காக தண்டனை பெற இருந்தான். ஷா அலி முல்லா என்ற குருவி தலையிட்டு அவனை காப்பாற்றினார்.

தம் பிள்ளைகளின் செயல்களை கண்காணிக்க இரகசியமாக ஆட்களை நியமித்திருந்தார்.

தன்தந்தை ஷாஜகானை சிறையில் அடைத்து ஆட்சியில் அமர்ந்ததால் அது போல் தனக்கும் நேருமோ என்று பயந்ததே காரணமாக இருக்கலாம். தன் மகன்களிடம் எப்போதும் எச்சரிக்கையாகவே இருந்தார். தன் மூத்த மகள் செபுன்னிசா தனக்கு எதிராக போர்க்குரல் உயர்த்தியபோது மகள் என்றும் பாராமல் இருபத்தோரு ஆண்டுகள் சிறையில் அடைத்தார்.

ஆலம்கீர் என்று பட்டம் சூட்டிக்கொண்ட ஔரங்கசீப் இந்துக்களுக்கு எதிராக பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்தார். இந்துக்கள் புதிதாக எந்தக் கோயிலும் கட்டக் கூடாது என்றார். பழைய கோயில்களை புணரமைக்க தடை வித்தார். பத்து ஆண்டு இடைவெளியில் கட்டப் பட்ட கோயில்களை இடிக்க வேண்டும் என்று ஆணைப் பிறப்பித்தார். இப்படி இடிக்கப்பட்டவை மதுரா, சோம்நாத், காசி கோயில்கள். தீபாவளி, ஓஹோலி பண்டிகைகள் கொண்டாட தடை விதிக்கப்பட்டது.

இந்துக்களுக்கு அக்பர் காலத்தில் வழங்கிய சலுகை ரத்து செய்யப்பட்டு ஜிசியா வரி விதிக்கப்பட்டது. மதமாற்ற முயற்சிகள்நடந்தன. தண்டனைப் பெற்றவர்கள் மதம்மாறினால் மன்னிப்பு கொடுக்கப்படடது. சலுகைகள் தரப்பட்டன. இந்துக்களுக்கு வரி விதித்ததை மக்கள் எதிர்த்து

கிளர்ச்சியில் இறங்க அவர்கள் மீது கொடூர தாக்குதல் நடத்தப்பட்டது. அத்தாக்குதலில் ஆயிரக்கணக்கானோர் உயிர் துறந்தனர்.

தன்னைப் பற்றி புகழ்வதையோ, ஓவியம் வரைவதையோ ஔரங்கசீப் விரும்பவில்லை.

சீக்கியர்களையும், இரஜபுத்திரர்களையும் அவுரங்கசீப் பகைத்துக்கொண்டார். சீக்கிய குரு தெக் பகதூர் என்பவர் மொகலாயர்களுக்கு எதிராக மக்களைத் தூண்டி விட்டார் என்ற காரணம் காட்டி , அவரை கைது செய்தனர். மதம் மாறினால் மன்னிப்பு வழங்கப் படும் என்றார் ஔரங்கசீப்.

ஆனால் சீக்கிய குரு மாற மறுத்து விட்டார். இதனால் அவரை உயிருடன் மண்ணில் புதைத்து யானையை விட்டு மித்திக்கச் செய்தார். சீக்கியரின்ஒன்பதாவது குருவான கோவிந்தசிங் தன்னை வந்து சந்திக்கும் படி ஔரங்கசீப் செய்தி அனுப்பினார். ஆனால் கோவிந்த் சிங் வரவில்லை.

ஔரங்கசீப்புக்குப் பின் அரியணை ஏறிய ஷா ஆலம் என்பவரும் தன் தந்தையால் எட்டு ஆண்டுகள் சிறை தண்டைக்கு ஆளாக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத் தக்கது.

ஒரு சாம்ராஜ்ஜியத்தின் சக்ரவர்த்தியாக இருந்தாலும் எளிமையை எப்போதும் கடைப்பிடித்தார்.ஆடம்பரத்தை வெறுத்தார். தன் தந்தை தாஜ்மகாலைப் போல் தனக்கும் ஒரு கல்லறை கட்டவேண்டும் என்ற விருப்பத்தையும் நிராகரித்து எளிமையாக அடக்கம் செய்தார். தன் மகன்களே கஜானாவில் கை வைத்தபோதும் தண்டனைத் தர தயங்கியதில்லை.

தான் இறந்த பிறகு தன்னுடைய இறுதிச் சடங்கை தான் கைப்பட தயாரித்த குல்லாவை விற்று வைத்திருந்த காசிலும், திருக்குர்ரான் படியெடுத்து விற்ற காசிலும் நடத்த வேண்டும் என்று எழுதி வைத்து விட்டு உயிர்த்துறந்தவர்.

நிர்வாகம் அனைத்தையும் ஔரங்கசீப் கவனித்துக் கொண்டதால் இவருக்குப் பின் வந்தவர்கள் திறமையற்றவர்களாக இருந்தனர்.

மக்கள் தினமும் தன்னை சந்திக்கும் படி பார்த்துக்கொண்டார். அவர்கள் கொடுக்கும் மனுக்களைப் படித்துப் பார்த்து உரிய நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுத்தார்.

**1707 ஆம் ஆண்டு , தன்னுடைய 91 வது வயதில் காலமானார் ஔரங்கசீப்.**

# 38. மருது பாண்டியர்கள்

ராணி வேலு நாச்சியாருக்குப் பின் சிவகங்கையை ஆண்ட மன்னர்கள்தான் மருது சகோதரர்கள். இருவரும் அண்ணன் தம்பிகள். பெரிய மருதுவிற்கு வெள்ளை மருது என்று பெயர். இவருக்கு ஐந்து ஆண்டுகள் கழித்து சின்ன மருது பிறந்ததால் அப்பெயர் வழங்கப்பட்டது.

விருது நகருக்கு பக்கத்தில் உள்ளது நரிக்குடி என்னும் ஊரையொட்டி அமைந்துள்ளது முக்குளம் என்னும் கிராமம். இந்த கிராமத்தில் பிறந்தவர்கள்தான் மருது வீரர்களின் பெற்றோர். உடையார் சேர்வை, ஆனந்தாயி பெரியாத்தாள் தம்பதிகளுக்கு 15.12.1748 பெரிய மருதுவும், 1753 இல் சின்ன மருதுவும் பிறந்தனர்.

இவர்களின் தந்தையார் இராமநாதபுர படை தளபதியாக இருந்ததால் இளமையிலேயே போர்ப் பயிற்சியில் இவ்விரு சகோதரர்களும் ஈடு பட்டனர். அதன் பின் சிவகங்கை நாட்டிற்கு தகுந்த தளபதிகளை தயார் செய்வதற்கு ஆட்கள் வேண்டும் என்று முத்து வடுகநாதர் கேட்டிருந்ததால் அவ்விருவரும் சிவகங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டு தகுந்த பயிற்சிகள் அனைத்தும் மன்னர் கொடுத்தார்.

மருது இருவரின் வீரத்தையும், திறமையையும் நேரில் கண்ட மன்னர் பெரிய மருதுவை படைத்தளபதியாக நியமித்தார். பிறகு விரைவிலேயே சின்ன மருதுவும் படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

ஆற்காடு நவாப்பும், ஆங்கிலேய தளபதி ஸ்மித்தும் கூட்டு சதி செய்து சிவகங்கையை கைப்பற்ற திட்டம் தீட்டினர். ஆனால் வடுகநாதர் அவர்களின் சதிதிட்டத்தை முறியடித்தபடியே இருந்தார்.

1772 ஆம் ஆண்டு ஒரு நாள் ஆயுதமேதும் இன்றி நிராயுதபாணியாக கடவுளை தரிசிக்கச் சென்ற அரசர் வடுகநாதரை, ஆங்கில மற்றம் நவாப் படையினர் மறைவிலிருந்து சுட்டுக்கொன்று நாட்டை அபகரித்துக்கொண்டனர்.

தங்கள் மன்னன் இறந்து விட்டார் என்று செய்தியறிந்த மருது வீரர்கள் தங்கள் ராணியை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். எதிரிகளிடம் இப்போது மோதுவது சரியாக இருக்காது என்று ராணிக்கு அறிவுரை கூறியவர்கள் அரசியுடன் விருப்பாட்சிபுரம் காட்டிற்குள் சென்று தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தனர்.

காட்டில் அரசிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மருது வீரர்கள்தான் செய்து கொடுத்தனர். மைசூர் மன்னர் ஹைதர் அலியை திண்டுக்கல்லில் சந்தித்து ராணி உதவி கோரியதிலிருந்து அனைத்து விதமான நடவடிக்கைளிலும் மருது வீரர்களின் பங்கு இருந்தது.

**1780** இல் சிவகங்கையை மீட்கும் போரில் பெரிய மருது மணலூர் வாயிலிலும், தளபதிசந்தனம் சேர்வை பூவந்தி வாயிலிலும், வேலுநாச்சியார் மேலூர் வாயில் வழியிலும் முகாமிட்டு போரிட்டதோடு இழந்த தங்கள் நாட்டையும் திரும்பப் பெற்றனர்.

நாட்டை திரும்பப் பெற்ற நாச்சியார் மற்றும் மருது வீரர்களுக்கு ஹைதர் அலி நேரில் வந்து வாழ்த்து தெரிவித்தார்.

ராணி வேலுநாச்சியாருக்குப் பின் அரியணையில் ஏறியவர்கள் மருது வீரர்கள். பெரிய மருது அரசராகவும், சின்ன மருது அமைச்சராகவும் பொறுப்பேற்றுக்கொண்டனர். இவர்கள் ஆங்கிலேயே அரசுக்கு எதிராக சிற்றரசர்களையும், பாளையக்காரர்களையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். குறிப்பாக சின்ன மருது தஞ்சாவூர் முதல் திருநெல்வேலி வரையுள்ள அரசர்களை சந்தித்து ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராக படைதிரட்டும் பணியில் ஈடுபட்டார்.

**1801** ஜூன் **16** ஆம் தேதி திருச்சியில் சின்ன மருது ஜம்பு தீவ பிரகடனம் என்ற பெயரில் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அவ்வறிக்கையில் `எல்லா சாதி, இன மக்களும் ஆங்கிலேய அரசாங்கத்துக்கு எதிராக போராட முன் வரவேண்டும்' என்று எடுத்துக் கூறியிருந்தார்.

பெரிய மருது மன்னரானதும் காளையார் கோயிலை சீரமைத்தார். மீனாட்சியம்மன் கோயிலுக்கு முகப்பு கோபுரம் கட்டிக்கொடுத்தார். குன்றத்தூர் முருகன் கோயில், ஆவுடையார் கோயில், செம்பொன்நாதர் கோயில், சிங்கம்புனரி கோயில் ஆகிய கோயில்களை சீரமைத்து கொடுத்தார். பல கோயில்களுக்கு தேர்களை வழங்கினார்.

காளையார் கோயிலுக்கு தேர் செய்யப்பட்டதும் அத்தேரைச் செய்த குப்பமுத்து ஆச்சாரி என்பவர் தான் ஒரு நாள் மட்டும் இந்நாட்டின் மன்னனாக இருக்க விரும்புவதாகவும், அதற்கு மன்னரின் செங்கோல் மற்றும் மோதிரத்தை தரும்படியும் கேட்க, ஆசாரியின் விருப்பப்படியே பெரிய மருது அவரை மன்னராக அறிவித்து தேரில் உட்கார வைக்கிறார்.

தேரில் உட்கார்ந்து பயணம் செய்த ஆசாரி அதிலிருந்து தவறி கீழே விழுந்து உயிர் துறந்து விடுகிறார்.

தேரோட்டத்தின் போது மன்னர் இறந்து விடுவார் என்று தெரிந்துதான் ஆச்சாரி அது போல் செய்திருக்கிறார் என்று உணர்ந்த பெரிய மருது நெகிழ்ந்து போனார். ஆச்சாரிக்கு கோயிலில் சிலை ஒன்றை செய்து வைத்தார் பெரிய மருது.

பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டியனையும், அவன் தம்பி ஊமைத்துரையையும் ஆங்கிலேயர்கள் சூழ்ச்சி வலை செய்து நாட்டை பிடிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவர்களின் வலையில் இருந்து தப்பிய ஊமைத்துரை நேராக மருது பாண்டியரிடம் வந்து அடைக்கலம் கோரினார். அவர்களும் அவருக்கு தகுந்த பாதுகாப்பான இடம் ஒன்றை அளித்தனர். இது தெரிந்த ஆங்கில அரசு பெரிய மருதுவுக்கு கடிதம் எழுதி, ஊமைத்துரையை தங்களிடம் ஒப்படைக்கும் படி கேட்டனர். ஆனால் மருது வீரர்கள் மறுத்து விட்டனர். அத்துடன் வீரபாண்டியரின் குடும்பத்தார் சிலர் சிறைவைக்கப்பட்டிருப்பதை அறிந்து போர் தகுந்த வீரர்களை அனுப்பி வெள்ளையரை விரட்டி அவர்களை மீட்டான்.

தூத்துக்குடி துறை முகத்தை ஊமைத்துரை துணையுடன் மருது பாண்டியரும் சேர்ந்து கொண்டு தாக்க அங்கிருந்த வெள்ளையார் தளபதி அக்னிகியூ தப்பித்துச் சென்று விட்டான்.

ஊமைத்துரையின் திடீர் தாக்குதலுக்கு மருது சகோதரர்கள்தான் காரணம் என்று அறிந்த ஆங்கிலேயர், தங்களுக்கு எதிராக செயல்படும் மருது பாண்டியரை தீர்த்துக்கட்ட முடிவு செய்தனர்

மருது சகோதரர்கள் குன்றக்குடி முருகன் கோயிலுக்கு சென்று விட்டு திரும்பிக்கொண்டிருக்கும் பொழுது தங்களை நோக்கி ஆங்கிலேயர் பெரும்படையுடன் வருவதைப் பார்த்து அவர்கள் குறுக்கு வழியாக சிவகங்கையை அடைந்தனர். போருக்காக துரித நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

போரும் தொடங்கியது 150 நாட்களுக்கும் மேலாக நடைப்பெற்ற இப்போரில் சின்ன மருது குண்டடிப்பட்டு கைதானார். பெரிய மருதுவும் கைது செய்யப்பட்டார்.

மருது பாண்டியரும் அவர்களின் குடும்பத்தார் 500 பேரும் திருப்பத்தூருக்கு அழைத்துச் செல்லப்பட்டு காவலில் வைக்கப்ட்டனர். பின் 24.10.1801 இல் அனைவரும் தூக்கிலிடப்பட்டனர். தூக்கிலிடப்படும் முன் மருது சகோதரர்களிடம் கடைசி விருப்பம் என்னவென்று கேட்க, தங்களின் மரணத்துக்குப் பின் தங்களது உடல்களை காளையார் கோயில் எதிரில் புதைக்க வேண்டும் என்றும், தாங்கள் பலருக்கு எழுதிக்கொடுத்த மானியங்கள் , நன்கொடைகள் தொடர வேண்டும் என்றும் கூறினார்.

500 பேர் ஒட்டு மொத்தமாக கொல்லப்பட்டதில் விரக்தியிலும், பயத்திலும் இருந்தனர் மக்கள். ஆகையால் அவர்கள் இறந்து மூன்று நாட்கள் கழித்துதான் அவர்களின் சடங்களை காளையார் கோயில் எதிரில் அடக்கம் செய்தனர்.

மருது இருவரை ஒரு சித்தர் சபித்ததால்தான் அந்த சித்தர் சபித்து சரியாக 90 நாட்களில் மருது சகோதரர்கள் தூக்கிலிடடப்பட்டனர் என்று ஒரு கதை நிலவுகிறது.

காளையார் கோயிலில் அமைந்துள்ள சிவன் கோயில். சைவ கோயிலான இதில் சுவர்ண காளீஸ்வரருக்கு சில நாட்களாக மாமிசம் படைக்கப்பட்டிருப்பதை கண்டு அக்கோயில் பூசாரிகள் கவலை அடைந்தனர். நள்ளிரவு பூசை முடிந்தப் பின் கோயிலை பூட்டிச் சென்ற நிலையில் இப்படி நடைபெறுவது தங்களுக்கு அதிர்ச்சியும், ஆச்சர்யமும் தருவதாக பூசாரிகள் மன்னரிடம் போய் தெரிவித்தனர். ஆச்சர்யம் அடைந்த மருதிருவர் கோயிலினுள் ஒற்றனை அனுப்பி உண்மையை கண்டுவருமாறு செய்தனர்.

நள்ளிரவில் பெரியவர் ஒருவர் கருவறைக்குள் சுரங்கப் பாதை வழியாக வந்து பூசை செய்வதை கையும் களவுமாகப் பிடித்த ஒன்றன், அரசர்கள் முன் கொண்டு வந்து அவரை நிறுத்த, அவரோ தான் செய்வது ஆகம விதிப்படி செய்வது சரி என்றும், தனக்கு மரணமில்லை என்றும் இரண்டாயிரம் வருடங்களாக இப்படி வாழ்வதாகவும் குறிப்பிட்டார்.

சித்தரின் பதிலில் சந்தேகம் இருப்பதாக பூசாரிகள் தெரிவித்தனர். பூசாரிகளுக்கு சவால் விடுத்த சித்தர் தன்னை மண்ணுக்குள் புதைக்குமாறு கூறினார். அரசர்களும் அவ்வாறே செய்யும் படி ஆணையிட்டனர்.

மண்ணுக்குள் புதையுண்ட சித்தர் அவருடைய கூற்றுப்படி வேறொரு இடத்தில் தோன்றுவேன் என்று கூறியதால் இராமேசுவரத்துக்கு ஒற்றர்கள் அனுப்பப்பட்டனர். பின்னர் புதையுண்ட பெரியவர் மீது சந்தேகம் கொண்ட பூசாரிகள் மன்னனிடம் முறையிட்டு மறுபடியும் அவரை புதைத்த இடத்தை தோண்டும்படி செய்தனர்.

தோண்டிய இடத்தில் அப்பெரியவர் உயிருடன் இருந்தார். அத்துடன் இராமேசுவரத்திலும் அப்பெரியவரை கண்டதாக ஒற்றன் வந்து சொல்ல, பூசாரிகள் பயந்து பின் வாங்கினர்.

பூசாரிகளின் பேச்சை நம்பி தன்னை தொந்தரவு செய்த மருது இருவரை சித்தர் நாராயண யோகேஸ்வரர் சரியாக 90 நாட்கள் நீங்கள் இறந்து போவீர்கள் என்று சபித்ததால்தான் அதே போல் ஆங்கிலேயரால் அரசர்கள் 24.10.1801 இல் தூக்கிலிடப்பட்டு இறந்தாக ஒரு கதை நிலவுகிறது.

மருது பாண்டியர் 1783 முதல் 1801 வரை அரசாண்டனர்.

மயூரகிக் கோவை, சிவகங்கை சரித்திரகும்பி, சிவகங்கை சரித்திர அம்மானை ஆகிய நூல்கள் மருது பாண்டியர் வரலாற்றைக் கூறுகின்றன. சர்க்கரைப் புலவர் என்பவர், மருது பாண்டியர் ஆட்சியில் அரசவை புலவராக இருந்தார்.

◆ ◆ ◆

https://t.me/Knox_e_Library